பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

கடகம் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 23 செவ்வாய்க்கிழமை (09-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:13

கீரிமலை ஆலயம் செல்வதற்குப் படையினர் அனுமதி மறுத்ததால்

இராணுவ வாகனங்களைத் தடுத்து அமைச்சர் மகேஸ்வரன் மறியல் போர்!

நேற்று யாழ். - பலாலி வீதியில் நடத்தி வெற்றி

யாழ்ப்பாணம்,டிசெம்பர்9

இந்துசமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் செல்வதற்கு நேற்றுமுன் தினம் பாதுகாப்புப் படையினர் அனுமதி மறுத்தனர். அவர் எவ்வளவோ வாதாடியும் அவர்கள் வழிவிடவில்லை. அதேவேளை, பெரும்பான்மை இனத்தவர்களின் வாகனம் செல்வதற்கு அனுமதி வழங்கினர். ஆத்திரமடைந்த அமைச்சரும் அவருடைய குழுவினரும் பலாலி வீதியால் இராணுவ வாகனங்களைச் செல்லவிடாது தடுத்து யாழ். பரமேஸ்வராச்சந்திக்குச் சமீபமாக நேற்று மறியல் போராட்டம் நடத்தினர்; அதில் வெற்றி கண்டனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு மின்சாரம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைப்பதற்காக அமைச்சர் அங்கு சென்றிருந்தார். அதன்பின்னர் அமைச்சரும் அவரது குழுவினரும் மாவிட்டபுரத்திலிருந்து கீரிமலை நகுலேஸ்வரத்திற்குச் செல்லமுயன்றனர். அப்போது அங்கு நின்ற படையினர் அமைச்சரைச் செல்லவிடாது தடுத்தனர். இதனால், அமைச்சருக்கும் படையினருக்குமிடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. எனினும் தமது உயர் அதிகாரிகள் இப்பாதையூடாகச் செல்வதற்கு எவரையும் அனுமதிக்கவேண்

(16ஆம் பக்கம் பார்க்க)

வீதி மறியலில் ஈடுபடும் அமைச்சரும் ஆதரவாளர்களும் (உள் படம்: போராட்டத்தின் போது வைக்கப்பட்டிருந்த சுலோக அட்டை) மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்.

கோயில் கேணியில் மூழ்கி பல்கலை மாணவன் உயிரிழப்பு!

கொழும்புத்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கோயில் கேணி ஒன்றில் மூழ்கி உயிரிழந்தார். நேற்று கொழும்புத்துறைப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

குருநகர் புதுமைமாதா கோயிலடியைச் சேர்ந்த வரும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 4ஆம் வருட மாணவருமான சாள்ஸ் இந்திரன் விமலேந்திரன்(வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

கொழும்புத்துறை, துரையப்பா வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் கேணியில் பிரஸ்தாப மாணவர் சக நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்தார் என்றும் -

அச்சமயம் கேணியின் நடுப்பகுதிக்குச் சென்ற

(16ஆம் பக்கம் பார்க்க)

கார்த்திகைத் தீபத் தினத்தில்

எரியும் 'ரயரை' யுவதி மீது வீசிய வாலிபர் நையப்புடைப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.9

கார்த்திகைத் தீபத்தை சாட்டாக வைத்து எரியும் 'ரயர்' ஒன்றை யுவதி ஒருவர் மீது வீசிய வாலிபர் பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள ஆலயம் ஒன்றில் நேற்று இரவு 7 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது. மேற்படி ஆலயத்தில் கார்த்திகைத் தீபத்தை முன்னிட்டு நேற்று விசேட பூஜைகள் இடம்பெற்றன. அதேசமயம், ஆலயச் சூழலில் இளைஞர் கும்பல் ஒன்று ரயர்களைக் குவித்து எரித்துகொண்டிருந்தது.

அக்கும்பலில் ஒருவர் எரிந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

ஆலயங்களின் பெயரால் மோசடி; அரசியல் துறையினர் எச்சரிக்கை!

கோயில்களின் பெயர்களைப் பயன்படுத்திச் சிலர் பணம் சம்பாதிக்கின்றனர் என்பதால் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்று வவுனியா மாவட்டப் புலிகளின் அரசியல்துறையினர் கோரியுள்ளனர்.

மன்னார் திருக்கேதீஸ்வரம், புதூர் நாகதம்பிரான் ஆகிய ஆலயங்களின் பெயர்களில் பற்றுச்சீட்டுகளை அச்சடித்து மக்களிடம் பணம் வசூலிக்கப்படுகின்றது. ஆயினும் மேற்படி ஆலய நிர்வாகங்களுக்கும் பணம் வசூலிப்போருக்குமிடையே தொடர்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு ரூ.6,000 சம்பளத்தில் வேலைவாய்ப்பு

அடுத்த ஆண்டு முதல் விஷேட திட்டம்

கொழும்பு,டிசெ.9

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தனியார் துறைகளில் வேலைவாய்ப்புக்களை வழங்கும் விசேட திட்டமொன்று அடுத்த ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்பட உள்ளதாகவும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்துவிட்டு வேலைவாய்ப்பற்ற நிலையிலிருக்கும் 25ஆயிரம் பட்டதாரிகள் இத்திட்டத்தின் மூலம் நன்மை

(16ஆம் பக்கம் பார்க்க)

யாழ். புனரமைப்புக் குறித்து பிரதமர் தலைமையில் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் குறித்து ஆராய விஷேட கூட்டம் ஒன்று நாளைமறுதினம் வியாழக்கிழமை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்புடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு போர்நிறுத்தம் தொடரவேண்டும்

புலிகளிடம் விடைபெற்ற வன்னிக் கட்டளைத் தளபதி கருத்து

வவுனியா,டிசெ.9

போர்நிறுத்த உடன்படிக்கையை உரியமுறையில் கடைப்பிடித்தால் எந்த முரண்பாடுகளும் ஏற்படமாட்டா எனறு வன்னி இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தெரிவித்தார்.

இடம்மாற்றம் பெற்று யாழ்ப்பாணம் செல்லும் முன் வன்னி இராணுவக் கட்டளைத்தளபதி வவுனியாவில் பல்வேறு மட்டத்தினரையும் சந்தித்து விடைபெற்ற போதே இதனைத் தெரிவித்தார் நேற்று வவுனியா மாவட்ட புலிகளின் அரசியல்துறையினரை அவர்களின் பணிமனையில் தளபதி சந்திரபால சந்தித்துக் கலந்துரையாடினார். இச்சந்திப்பு முற்பகல் 11.45 மணி முதல் 12.15 மணிவரை இடம்பெற்றது. இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சுசில் சந்திரபால, "போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் நாட்டில் சுமுகமான நிலை நிலவுகின்றது. தெற்கிலும் வடக்கிலும் மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தொடர்ந்து நிம்மதியாக வாழ இராணுவமும் புலிகளும் புரிந்துணர்வுடன் போர்நிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிக்கவேண்டும். போர்நிறுத்த காலத்தில் சில கசப்பான சமபவங்கள் இடம்பெற்றன. எனினும் அவற்றை மனதில் கொள்ளாது புலிகள் பூரணமாக ஒத்துழைப்பு வழங்கியமைக்காக தனிப்பட்ட ரீதியில் நன்றி தெரி

(16ஆம் பக்கம் பார்க்க)

கட்டளைத் தளபதிக்கு புலிகள் வழங்கிய பரிசு

யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்க உள்ளவரான மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கு புலி இலச்சினை பொறிக்கப்பட்ட நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறை அலுவலகத்துக்கு அவர் விடைபெறுவதற்காகச் சென்றார். அந்தச் சமயமே அவருக்கு இந்த நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

தமிழீழத் தேசியக்கொடியின் மாதிரி வடிவத்தில் புலி இலச்சினை பொறிக்கப்பட்ட இந்தச் சின்னம்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று பலாலி வீதியில் மறியல்போராட்டத்தில் ஈடுபட்ட அமைச்சர் தி.மகேஸ்வரனை சமாதானப்படுத்துகின்ற முயற்சியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி இங்மர், யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்தசெனிவிரட்ண, யாழ். நகரப் பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் சில்வா மற்றும் படை அதிகாரிகள் ஈடுபட்டனர். அவ்வேளையில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வுகண்டு சமாதான முன்னெடுப்பைத் தொடரவே முயற்சி

இதுகுறித்தே ஜனாதிபதியுடன் பேச்சு என்கிறார் பிரதமர்

கொழும்பு,டிசெ.9

இன்றைய அரசியல் நெருக்கடிகளுக்கும் மத்தியில் சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதே எமது முக்கிய குறிக்கோளாக இருக்கவேண்டும். இதற்கென பொது வேலைத் திட்டமொன்றை வகுக்க நானும் ஜனாதிபதியும் பேசிவருகிறோம். பேச்சுமூலம் அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகண்டு சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லவே நான் இயன்றளவு முயற்சி செய்கிறேன். சமாதான நடவடிக்கை மேலும் தடைப்பட்டிருந்தால் நெருக்கடி உக்கிரமடைந்து யுத்தம் ஏற்படமுடியும். கடந்த வாரம் கிண்ணியாவில் மோதல் நிலை ஒன்று உருவானது.

குருநாகல் மாவட்டத்திலுள்ள தொடங்கஸ்லந்த தேர்தல் தொகுதியில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்கள் மத்தியில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

பிரதமர் அங்கு மேலும் கூறியதாவது:-

அரசியல் நெருக்கடியைப் பேச்சு மூலம் தீர்க்கமுடியாது போனால் அதன் விளைவுகளை நாடும் மக்களும் அனுபவிக்க நேரிடும். நாம் முன்னேறிச் செல்லவேண்டுமானால் சமாதான செயற்பாட்டைப் பாதுகாக்கவேண்டும். அதனைப் பாதுகாக்க பொறுப்பு இருக்க வேண்டும். அதுகுறித்தே நாம் பேச்சு நடத்திவருகிறோம்.

ஜனாதிபதியுடனான பேச்சை வெற்றிபெறச் செய்யவே நாம் முயன்று வருகிறோம். சமாதான செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதோடு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

நாம் ஆட்சிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த ஒப்

பந்தம் செய்துகொண்டோம். புலிகளுடன் சமாதான முயற்சியை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லமுடியாது என்று சிலர் நினைத்தனர். மீண்டும் யுத்தம் ஏற்படும் என்று அவர்கள் எண்ணினர். ஜே.ஆர்.ஜயவர்த்தன ஜனாதிபதி, பிரேமதாஸ ஜனாதிபதி, சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி ஆகியோர் காலத்தில் இதனைச் செய்யமுடியாது போய்விட்டது.

ஆனால், எமது நடவடிக்கையினால் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கு முன்வந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சை இடைநிறுத்தியபோது மீண்டும் அச்சம் ஏற்பட்டது. பொருளாதாரம் சிறிது சிறிதாக பின்னடைவைக் கண்டது. இருப்பினும் மண்டும் போருக்குச் செல்லமாட்டோம் என்று புலிகள் அறிவித்தனர். போரை நிறுத்தி, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி எதிர்வரும் இரு வருடங்களில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த நாம் திட்டமிட்டிருக்கிறோம்.

இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாத தடையொன்று இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சமாதான முயற்சியை முன்னெடுத்துச்செல்வது தொடர்பான பிரச்சினையே அது. ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று இருப்பதால் அதிகாரங்கள் இன்று அரசிடம் இல்லை. இந்த அதிகாரங்கள் இல்லாததால் சமாதான முயற்சி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளமுடியாத நிலையில் அரசு உள்ளது.

சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல குறிப்பிட்ட அதிகாரங்கள் ஒரு தரப்புக்கு இருக்கவேண்டும். அந்த அதிகாரங்கள் எமக்கு இல்லாததால் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டேன். அவர் அந்தப் பொறுப்பை ஏற்கவில்லை. அதை என்னிடமே ஒப்படைத்திருக்கிறார்.

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றபோது சம்பிரதாயபூர்வ, அரசியல் முறைப்படி நாம் நடந்திருந்தால் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தியிருக்கவேண்டும். நாம் அப்படிச் செய்திருந்தால் நாடு குழப்பமடைந்திருக்கும். பேச்சுக்கான வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும். எனவே, பொறுமையாகச் செயற்படுமாறு ஆலோசனை வழங்கினேன்.

- இவ்வாறு பிரதமர் கூறினார்.

ஒரே குடும்பத்தில் மூன்று சிறுவர்கள் மிதிவெடிக்குப் பலி!

கொழும்பு,டிசெ.9

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் மிதிவெடிகளுக்குப் பலியாகினர்.

இந்தப் பரிதாபச் சம்பவம் பொலநறுவை மாவட்டம் ஹபரணையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

மேற்படி சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது மிதிவெடிகளைக் கண்டெடுத்தனர் என்றும்-

அவற்றைப் பிரித்துப் பார்க்க சிறுவர்கள் முயற்சித்தபோது அவை வெடித்ததாகவும் - கூறப்படுகிறது.

(ஒ-9)

வடக்கு – கிழக்கு புனரமைப்புக்கு ஆசிய வங்கி ரூ. 168 கோடி உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.9

வடக்கு - கிழக்கில் இனமோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்காக 168 கோடி ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்க முன்வந்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை ஊடாக இந்த உதவி வழங்கப்படவிருக்கின்றது.

வீதிப் புனரமைப்பு, மின்சார விநியோக விரிவாக்கம், குடிதண்ணீர் விநியோகம், சமூக அபிவிருத்தி என நான்கு வகையான திட்டங்களை நடைமுறைப்படுத்த இந்த உதவி பயன்படுத்தப்படவிருக்கின்றது.

இதற்கான திட்டங்களை வகுப்பதற்கான முதலாவது கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி மாகாண சபை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அரச அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்கு பற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஒ-3)

காஷ்மீர் எல்லைக்கோடுப் பகுதிக்கு ராணுவத் தளபதி பலகல்ல விஜயம்

கொழும்பு,டிசெ.9

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இந்தியாவின் காஷ்மீரிலுள்ள கட்டுப்பாட்டு எல்லைக்கோடு பகுதியை நேற்றுப் பார்வையிடவிருந்தார்.

இந்தியாவுக்கு நான்கு நாள்கள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இராணுவத் தளபதி, தனது விஜயத்தின் ஒரு பகுதியாகவே காஷ்மீர் எல்லைக் கோட்டுக்குச் செல்லவிருந்தார் என்று 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' செய்தியொன்று தெரிவித்தது.

ஸ்ரீநகர் செல்லும் இலங்கை இராணுவத் தளபதிக்குப் பாகிஸ்தானிலிருந்து மேற்கொள்ளப்படும் எல்லைக்குக் குறுக்கேயான ஊடுவருவல்கள், தீவிரவாத எதிர்ப்பு இந்திய உபாயங்கள் குறித்து இந்திய இராணுவ பிராந்தியத் தளபதிகள் விளக்கிக் கூறுவர்.

புத்தகயா பௌத்த புனித தலத்துக்கு யாத்திரை மேற்கொள்ளும் இராணுவத் தளபதி பலகல்ல, சென்னை வழியாக கொழும்பு திரும்புவார்.

மருதங்கேணியில் மணல் ஏற்ற சென்ற வாகனம் தீப்பிடித்தது!

யாழ்ப்பாணம்,டிசெ.9

மருதங்கேணிப் பகுதியில் மணல் ஏற்றுவதற்காக் கொண்டு செல்லப்பட்ட 'டிப்பர்' வாகனம் ஒன்று தீப்பிடித்து எரிந்தது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்த வாகனத்தில் மணல் ஏற்றச்சென்றவர்களை சிலர் தடுத்து திருப்பி அனுப்பினார்கள் என்றும் -

ஆயினும் மணல் ஏற்ற வாகனத்தில் சென்றவர்கள் மீண்டும் முயற்சித்தனர் என்றும் -

அந்த முயற்சி மறுபடியும் தடுக்கப்பட்டதால் வாகனத்தில் சென்றவர்கள் அதனை அங்கேயே விட்டுத் திரும்பினார்கள் என்றும் -

கூறப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையிலேயே [illegible] வாகனம் தீப்பிடித்து எரிந்துள்ளது. வாகனம் தீப்பிடித்ததற்கான காரணம் தெரியவரவில்லை.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கு பாண்டிச்சேரி நிர்வாக முறை

அமைச்சர் ஹக்கீம் சிபாரிசு

கொழும்பு,டிசெ.9

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு இந்திய மாநிலமான பாண்டிச்சேரி நிர்வாக முறை உகந்தது என்று முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சிபாரிசு செய்கிறார். அங்கு வாழும் முஸ்லிம்களின் அரசியல் எதிர்பார்ப்புகளையும் அபிலாஷைகளையும் பாண்டிச்சேரி நிர்வாக முறை ஓரளவிற்கு நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்திய அரசின் அழைப்பை யேற்று ஒருவார கால விஜயத்தை மேற்கொண்டிருந்த அமைச்சர் ஹக்கம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர், புதுடில்லியில் பாண்டிச்சேரி நிர்வாக முறை குறித்து ஆராய்ந்த பின்னரே அவர் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

பாண்டிச்சேரி முன்னாள் முதலமைச்சர் பாறூக்கை புதுடில்லியில் சந்தித்து அமைச்சர் ஹக்கீம், பாண்டிச்சேரி நிர்வாக முறை குறித்து விரிவாக ஆராய்ந்திருக்கிறார்.

இது தொடர்பாக அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நிலத் தொடர்பற்ற வெவ்வேறு பிரதேசங்களை ஒன்றிணைத்து தனியான அரசியல் அதிகார அலகு ஏற்படுத்துவதில் பாண்டிச்சேரி நிர்வாக முறையை முன் உதாரணமாகக் கொள்ளலாம். அவ்வாறானதொரு நிர்வாகமுறை [illegible] பிரச்சினையை நியாயமாக வைத்து நோக்கும்போது வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் அரசியல் எதிர்

பார்ப்புகளையும், அபிலாஷைகளையும் ஓரளவிற்கு நிறைவேற்றக்கூடியதாக இருக்கும்.

நிலத் தொடர்பற்ற வெவ்வேறு பிரதேசங்களை இணைத்து நிர்வாகம் செய்வது என்பது நடைமுறைச் சாத்தியமற்றதெனப் பலர் கூறுகின்றனர். அது தவறான அபிப்பிராயமாகும்.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம், நிலத்தொடர்பற்ற நான்கு வெவ்வேறு பிரதேசங்களைக் கொண்டது. அவை ஒவ்வொன்றும் தூர இடங்களிலேயே அமைந்துள்ளன. ஆகக்கூடிய தூரம் 650 கிலோ மீற்றர்களாக உள்ள போதிலும், நிர்வாகம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது என்று பாண்டிச்சேரி முன்னாள் முதலமைச்சர் எங்களிடம் கூறினார்.

இந்திய அரசமைப்பு யாப்பில் இவ்வாறான அதிகாரப் பகிர்வுகள் பல மாநிலங்களில் பல்வேறு காரணங்களின் தொடர்புகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருப்பது பற்றியும் அவர் ஆதாரபூர்வமாக விளக்கிக்கூறினார்.

இலங்கை முஸ்லிம்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் நிர்வாக ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை நான் அவரிடம் விளக்கிக் கூறினேன். அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறறுவந்த சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் ஓரங்கட்டப்படும் நிலைமை தோன்றியுள்ளதையும் முஸ்லிம் சமூகம் அச்சமடைவதற்கும் சந்தேகப்படுவதற்குமான காரணங்களையும் நான் தெளிவுபடுத்தினேன். முஸ்லிம் காங்கிரஸ் குழுவினரை பாண்டிச்சேரி வந்து பல்லின, கலாசாரங்களைப் பேணும் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருவதை நேரில் அவதானிக்குமாறு முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

பாண்டிச்சேரி நிர்வாக முறை பற்றிய ஆவணங்கள் விரைவில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் ஊடாகக் கிடைத்தவுடன், முஸ்லிம் காங்கிரஸ் உயர் மட்டத் தூதுக்குழு அங்கு விஜயம் செய்யுமென அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

பாண்டிச்சேரி முன்னாள் முதல்வருடனான இச்சந்திப்பு சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்றது.கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி, பிரதிச் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ்.ஹமீத், சட்டத்தரணி கலாநிதி நிசாம் காரியப்பர், எஸ். நிஜாமுதீன், எம்.எச்.எம். சல்மான், ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, ஏ.எம்.நவ்சாட் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் யுத்தநிறுத்த அழைப்பை அங்குள்ள போராளிக் குழுக்கள் நிராகரித்துள்ளன. ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் வாகனம் ஒன்றில் ஆயுதங்களைத் தாங்கியபடி பயணிப்பதை படத்தில் காணலாம்.

யுத்தநிறுத்த அழைப்பை போராளிகள் நிராகரிப்பு!

இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே மீண்டும் சிக்கல்

ரமல்லா,டிசெ.9

பலஸ்தீன அரசு விடுத்த யுத்த நிறுத்த அழைப்பை அங்குள்ள போராளிக் குழுக்கள் நிராகரித்துள்ளன.

மேற்குலகின் முயற்சியில் இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் நடப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பலஸ்தீன போராளிக்குழுக்கள் யுத்தநிறுத்த அழைப்பை நிராகரித்துள்ளமை சமாதான முயற்சிகளை பாதிக்கும் என்று கூறப்படுகிறது.

யூதர்கள் மீதான தமது தற்கொலைத் தாக்குதல்கள் தொடரும் என்றும் மேற்குக் கரையில் இஸ்ரேலியக் குடியேற்றங்கள் நிறுத்தப்படும் வரை அங்கு பொதுமக்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்கும் என்றும் ஹமாஸ் இயக்கத்தின் மூத்த தளபதி மொகமட் நஸாட் தெரிவித்துள்ளார்.

ஜிகாத் இயக்கமும் பலஸ்தீனப் பிரதமர் அகமது குரேயின் யுத்தநிறுத்த அழைப்பை நிராகரித்துள்ளது. தமது இயக்கம் இது குறித்து ஆராய்ந்து வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

பிரதமர் அகமது குரே பதவியேற்றதன் பின்னர் மத்திய கிழக்கிற்கான வீதி வரைபடம் (Road Map) என்ற சமாதானத் திட்டத்தை அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் மீண்டும் முன்னெடுத்துள்ளன.

சமாதான முயற்சிகளில் மீண்டும் இறங்குவதற்கு பின்னடித்துள்ள இஸ்ரேல், பலஸ்தீனப் போராளிக் குழுக்களை ஒடுக்க பிரதமர் அகமது குரே தலைமையிலான நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பிரதமர் அகமது குரே விடுத்த யுத்தநிறுத்த அழைப்பை போராளிக்குழுக்கள் நிராகரித்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது. (ஐ)

மதகுரு அளித்த திரவத்தால் கொங்கோவில் 64 பேர் சாவு!

கின்சாஸா,டிசெ.9

ஆபிரிக்க நாடான கொங்கோவில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் வழங்கிய பானத்தை அருந்தியவர்களில் 64 பேர் உயிரிழந்தனர்.

கடந்த வாரம் நடந்த இச்சம்பவம் குறித்து அந்நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகளும், பொலீஸாரும் இணைந்து விசாரணை நடத்துகின்றனர்.

சம்பவத்தில் தொடர்புடைய மதகுரு தலைமறைவாகிவிட்டார்.

கொங்கோவின் சில பகுதிகளில் மதங்களின் பெயரால் மூட நம்பிக்கைகளை சிலர் பரப்பி வருகின்றனர்.

இதனால், அங்கு பேய் குறித்த அச்சம் நிலவுகிறது. இந்த அச்சத்தைப் போக்குகிறேன் என்று கூறி எண்ணெய் போன்ற திரவம் ஒன்றை மேற்படி மதகுரு மக்களுக்கு வழங்கினார்.

அதனை அருந்தியவர்கள் உடல் நலம் குன்றினர். அவர்களில் 64 பேர் இறந்தனர். இது குறித்து வைத்தியசாலை நிர்வாகம் பொலீஸாரிடம் முறையிட்டது.

பொலீஸார் இவர்கள் இறந்ததற்கான காரணத்தைக் கண்டறிவதற்காக மேற்படி மதகுருவை தேடிவருகின்றனர்.

"துர்தேவதைகளை விரட்டுவதாகக் கூறி எண்ணெய் போன்றதிரவம் ஒன்றை மேற்படி மதகுரு வழங்கியுள்ளார். ஆனால், அதில் விஷம் கலந்திருந்தது" - என்று சுகாதார அமைச்சர் ஜாகிசிட் டோலோ தெரிவித்தார். (ஐ)

தடை நீடிக்கப்பட்டதன் எதிரொலி:

பொதுநலவாய அமைப்பில் இருந்து ஸிம்பாப்வே அதிரடியாக விலகியது!

அபுஜா,டிசெ.9

பொதுநலவாய அமைப்பில் இருந்து ஸிம்பாப்வேயை தொடர்ந்து இடைநிறுத்தி வைப்பது என்று அந்த அமைப்பின் செயலர் டொன் மெக்கினொன் அறிவித்துள்ளார்.

ஆனால், இவரது அறிவிப்பு வெளியாவதற்கு முன்னரே பொதுநலவாய அமைப்பில் இருந்து ஸிம்பாப்வே விலகிக்கொள்கிறது என்று அந்நாட்டு ஜனாதிபதி ரொபேட்முகாபே அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

பொதுநலவாய அமைப்பிலிருந்து ஸிம்பாப்வே புறக்கணிக்கப்பட்டு வருவது குறித்து ஜனாதிபதி ரொபேட் முகாபே தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தார். அவர் பொதுநலவாய அமைப்பை கீழ்த்தரமாகவும் வர்ணித்திருந்தார்.

இந்நிலையில், மீண்டும் ஸிம்பாப்வே மீதான தடையை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கான அறிவிப்பை அந்த அமைப்பின் செயலர் டொன் மெக்கினொன் வெளியிட்டிருக்கிறார்.

இந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியிலும் ஸிம்பாப்வேயின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொறுப்பு நைஜீரிய ஜனாதிபதியிடமும்,டொன் மெக்கினொனிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஸிம்பாப்வேயின் இறுக்கமான கொள்கைகளை காரணங்காட்டியே அந்த நாடு பொதுநலவாய அமைப்பிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்தது.

இந்த வருடம் நைஜீரியத் தலைநகரில் நடைபெற்ற அந்த அமைப்பின் கூட்டத்தில் ஸிம்பாப்வே மீண்டும் அங்கத்துவ நாடாக சேர்த்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அந்த நாட்டை மேலும் இரண்டு வருடங்களுக்கு பொதுநலவாய அமைப்பில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்துவது குறித்து இந்தக் கூட்டத்தொடரில் ஆராயப்பட்டது.

இதனால், ஸிம்பாப்வே ஜனாதிபதி ரொபேட் முகாபே அந்த அமைப்பை கீழ்த்தரமாக விமர்சித்திருந்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரையும், அவரது ஆட்சியையும் தொடர்ந்து கடுமையாக விமர்சித்து வந்த ஜனாதிபதி ரொபேட் முகாபே, பொதுநலவாய அமைப்பில் இருந்து ஸிம்பாப்வே விலகிக்கொள்கிறது என்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அவரின் இந்த அறிவிப்புக்கு பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

கடும் பனிப்பொழிவால் அமெரிக்கர்கள் அவதி!

நியூயோர்க்,டிசெ.9

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பெய்துவரும் பனி மழையால் அங்கு போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு அடி உயரத்திற்கு பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பனிப் பொழிவு அகோரம் கொண்டுள்ளது.

இதுவரை ஒன்பது பேர் விறைப்பேறி உயிரிழந்தனர். அவர்களில் இரண்டு வயது குழந்தையும் அடங்கும்.

விமான நிலையங்கள் ரயில் நிலையங்களில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித்துள்ளது. பொஸ்டன் லோகோன் விமான நிலையம் ஞாயிற்றுக்கிழமை முதல் மூடப்பட்டது. அங்குள்ள விமானங்களை பனிக்கட்டி மறைத்துள்ளது.

மேலும் 200இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அங்கு இக்காலப் பகுதியில் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட்சை நடைபெறுவது வழக்கம். ஆனால் பனிப் பொழிவின் காரணமாக மேற்படி பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அங்கு இடையிடையே மழையுடன் கூடிய புயற்காற்று வீசுவதால் கடும் குளிர் நிலவுகிறது. தொடர்ந்து இந்த நிலை நீடிப்பதால் லட்சக்கணக்கானோர் குளிர் நிறைந்த பகுதியிலிருந்து வேறு பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

நியூயோர்க்கில் பனி மழை இக்காலத்தில் பெய்வதுவழக்கம்.

ஆனால், இந்தமுறை அதன் தாக்கம் அதிகரித்துள்ளது என்று நியூயோர்க் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வீதிகளில் நிரம்பியுள்ள பனிக்கட்டிகளை அப்புறப்படுத்தும் வகையில் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

ரஷ்ய கீழ்சபைத்தேர்தல் புடினின் கட்சி வெற்றி!

மொஸ்கோ,டிசெ.9

ரஷ்ய நாடாளுமன்றின் 'டுமா' என்றழைக்கப்படும் கீழ்சபைக்கு நடந்த தேர்தலில் ஜனாதிபதி புடினின் 'ஐக்கிய ரஷ்யா' கட்சி வெற்றியீட்டியது.

நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றது. அந்நாட்டு அரசமைப்புச் சட்டப்படி 450 உறுப்பினர்களைக்

கொண்ட நாடாளுமன்றத்திற்கு 275 உறுப்பினர்களை மட்டுமே தேர்தலில் தேர்ந்தெடுக்கமுடியும். ஏனையோர் கட்சிகள் பெற்ற வாக்குவீதத்தின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

இந்தத் தேர்தலில் 10கோடி பேர் வாக்களித்தனர். ஜனாதிபதி புடினின் கூட்டணிக்கட்சியான ஐக்கிய ரஷ்யா கட்சி, கெடி யுகோனோவ் தலைமையிலான கம்யூனிஸ்ட்கட்சி உட்பட 23 கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன.

மொத்தம் 23 அரசியல் கட்சிகளின் சார்பில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிட்டனர்.

தேர்தலை 46 நாடுகளைச் சேர்ந்த 260 கண்காணிப்பாளர்கள் பார்வையிட்டனர். வாக்கு எண்ணிக்கைகள் நேற்று நடந்தன. முதலில் வெளியான முடிவுகளின் படி கெடியு கோனோவ் தலைமையிலான கம்யூனிஸ்ட்கட்சி முன்னிலையில் இருந்தது. ஆனால்,பின்னர் வெளியான இறுதி முடிவுகளின்படி ஜனாதிபதி புடினின் ஐக்கிய ரஷ்யா கட்சி வெற்றியடைந்தது.

ஐக்கிய ரஷ்யாகட்சி 36.32 சதவீத வாக்குகளும் கம்யூனிஸ்ட் கட்சி 12.9சதவீத வாக்குகளும் பெற்றுள்ளன.

அடுத்த ஆண்டு ரஷ்யாவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். இந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி விளாடிமிர் புடினே மீண்டும் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் புடின் மீண்டும் வெற்றியீட்டினால், அவர் 2008 மே மாதம் ஆண்டுவரை பதவிவகிப்பதற்கு ஏற்றவகையில் அரசமைப்பை [illegible] செய்யப்படுகிறது. (ஐ)

நேபாளத்தில் சண்டை 25 தீவிரவாதிகள் பலி!

நேபாளத்தில் நடந்த சண்டையில் 25 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கிழக்குப்புற நகரான கோட்டாங்கில் நேற்றுமுன்தினம் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே கடும் சண்டை மூண்டது. சுமார் ஆறு மணித்தியாலங்களுக்கு மேலாக நீடித்த இந்தச் சண்டையில் பெண் தீவிரவாதிகள் இருவர் உட்பட 25 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த ஜுன் மாதம் அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்கள் முறிந்தன. அதனையடுத்து அங்கு மீண்டும் சண்டை மூண்டது.

பேச்சுக்கள் முறிந்த பின்னர் இதுவரை 427 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பேச்சுக்கள் முறிந்த பின்னர் இதுவரை 28 படையினர் கொல்லப்பட்டனர். கடந்த 5 மாதங்களில் நாட்டின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தீவிரவாதச் செயல்கள் முறியடிக்கப்பட்டுள்ளன என்றும் அந்நாட்டுப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீனப் பிரதமர் ஜ.நா. பொதுச் செயலர் கோபி அனானை நேற்றுச் சந்தித்து பேசினார். கொறியக் குடாவில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்தும் எய்ட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கைகள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

ஓய்வூதியக் குறைப்பைக் கண்டித்து இத்தாலியில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

ஓய்வூதியக் குறைப்பைக் கண்டித்து இத்தாலியில் நேற்றுமுன்தினம் மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி நடந்தது.

தொழிலாளர் சட்டங்களை அந்நாட்டு அரசு திருத்தி அமைந்துள்ளது. அதில் ஏற்கனவே தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுத் தொகை குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

அரசின் இந்த நடவடிக்கையை கண்டித்து தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் பிரமாண்டமானபேரணி நடத்தின. அதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ரோம் நகரில் பேரணியாகச் சென்றோர் ஆர்ப்பாட்டக்குரல்களை எழுப்பினர். ஓய்வூதிய குறைப்புக்கு எதிரான வாசகங்களை எழுதிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

செந்நிறக் கொடிகளை ஏந்தி அவர்கள் பேரணியாகச் சென்றனர். குறிப்பாக முதியவர்களே இப்பேரணியில் கலந்துகொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்திரேலிய - இந்திய டெஸ்ட் கிரிக்கெட்: முதல் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவு

ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

பிரிஸ்பேனில் நடைபெற்ற இப் போட்டியின் 4ஆவது நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்பிற்கு 362 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பார்தீவ் பட்டேல் 37 ஓட்டங்களுடனும் அஜய் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டியின் ஐந்தாவது நாளான நேற்றுக் காலை இவ்விருவரும் மேலதிக ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

எனினும் ஹர்பஜன்சிங் ஆட்டமிழக்காமல் 19ஓட்டங்களையும் ஸஹீர் கான் 27ஓட்டங்களையும் பெற்றனர். இறுதியில் 409 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது இந்திய அணி.

ஆஸ்திரேலிய அணி நேற்று தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்து 3விக்கெட் இழப்பிற்கு 284 ஓட்டங்களைப் பெற்றநிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொண்டது.

மத்யூஹைடன் 98 பந்துகளில் 99 ஓட்டங்கள் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார். இவ்வருடத்தில் தனது 1000 ஆவது டெஸ்ட் ஓட்டத்தையும் அவர்பெற்றார். அதன் மூலம் தொடர்சியாக மூன்று வருடங்கள் 1000 டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்ற முதல வீரர் எனும் சாதனைக்குரியவராணார் ஹைடன்.

இந்திய அணி வெற்றி பெறுவதற்கு 199 ஓட்டங்கள் தேவையான நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. அப்போது இறுதிநாள் ஆட்டம் முடிவடைவதற்கு 23 ஓவர்கள் மாத்திரமே எஞ்சியிருந்தன.

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீர்கள் இருவரும் தேஜன பிரக்கனின் முதல் இரு பந்து வீச்சுக்களில் வீழ்த்தினர்.

எனினும், ராகுல் திராவிட், வி.வி. எஸ். லக்ஸ்மன் இருவரும் மேலதிக விக்கெட் இழப்பைத் தடுத்தனர்.

இந்திய அணி 16ஓவர்களில் 2விக்கெட் இழப்பிற்கு 73ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதனால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

திராவிட் 47 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களைப் பெற்றார். லக்ஸ்மன் 43 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெறறார்.

டெண்டுல்கரின் விக்கெட்டை கைப்பற்றியது வியப்பளிக்கிறது

ஆஸ்திரேலிய வீரர் ஜிலெஸ்பி தெரிவிப்பு

சச்சின் டெண்டுல்கருக்கு நடுவர் அவுட் கொடுத்தமை வியப்பளிப்பதாக இருந்ததென ஆஸ்திரேலிய அணியின் வேகப் பந்துவீச்சாளரான ஜேஸன் ஜிலெஸ்பி தெரிவித்துள்ளார்.

பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின், சர்ச்சைக்குரிய முறையில் நடுவர் ஸ்ரீவ் பக்னரால் அவுட் கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். இந்த விக்கெட் குறித்து ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜேஸன ஜிலெஸ்பி கூறுகையில்,

சச்சினின் விக்கெட் கிடைத்தது வியப்பளிப்பதாக இருந்தது. இந்த விக்கெட்டுக்காக நீண்ட நேரம் நான் அப்பீல் செய்தேன். நடுவர் அவுட் கொடுக்கமாட்டார் என நினைத்தேன். ஆனால், வியப்பளிக்கும் விதமாக மெதுவாக நடுவர் அவுட் கொடுத்து விட்டார் என்று கூறினார்.

நடுவர் ஸ்ரீவ் பக்னர் அவுட் கொடுக்கும் விதமாக மெல்ல விரலை உயர்தியபோது சச்சின் அதிர்ச்சியானமை குறிப்பிடத்தக்கது.

நான்காம் ஆட்டம் குறித்து ஜிலெஸ்பி கூறியிருப்பதாவது:-

சரியான முறையில் பந்து வீசினோம். விக்கெட்டுக்களை வீழ்த்த எல்லா முயற்சிகளையும் மேற்கொணடோம். ஆனால் அன்றைய ஆட்டத்தில் சிறப்பாக விளையாடியதன் முழுப் பெருமையும் இந்திய அணியையே சேரும். இந்திய அணி மிகச் சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாடியது என்று கூறிய ஜிலெஸ்பி, லக்ஸ்மன், கங்குலியின் துடுப்பாட்டத்தை விசேடமாக பாராட்டினார்.

கங்குலியின் துடுப்பாட்டம் மிகச் சிறப்பாக உள்ளது. அவரது விளையாடடில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவரது ஆட்டம் அதிரடி ஆட்டமாக இருந்தது. லக்ஷ்மனின் விளையாட்டு ஒரு சில சமயங்களில் தடுமாறியது போல இருந்தாலும் அவரது அணுகுமுறை சிறப்பாக இருந்தது. ஆகாஷ் சோப்ராவும் தன் பங்கிற்கு விக்கெட்டின் மதிப்பை உணர்ந்து விளையாடினார் என்றும் ஜிலெஸ்பி பாராட்டினார்.

இப்போட்டியில் ஜிலெஸ்பி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அகில இலங்கை டெனிஸ் சங்கம் தேசிய மட்டத்தில் நடத்திய 'மினி டெனிஸ்' போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட அணியினர் தங்கப் பதக்கம் வென்றனர். இப்போட்டியில் இரத்தினபுரி, மட்டக்களப்பு மாவட்டங்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றன.
போட்டியில் பங்கேற்று வென்ற யாழ்.மாவட்ட அணியினரைப் படத்தில் காணலாம். (படம்-மண்டைதீவுச் செய்தியாளர்)

ஆஸி.நடுவர் ஹெயார் இங்கிலாந்தில் வசிக்கத் திட்டம்

ஆஸ்திரேலியாவின் சிரேஷ்ட கிரிக்கெட் நடுவரான டெரல் ஹெயார், அடுத்த வருடம் முதல் இங்கிலாந்தில் வசிப்பதற்கு திட்டமிட்டுள்ளார்.

எனினும், சர்வதேச கிரிக்கெட் நடுவராக தாம் தொடர்ந்து பணியாற்றுவார் என அறிவித்துள்ளார்.

இலங்கையின் நட்சத்திர பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் பந்தை முறையற்ற விதமாக எறிகிறார் என முதலில் கூறி, சர்ச்சையை ஏற்படுத்தியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த புதுவருடத்திலிருந்து தாம இங்கிலாந்தில் வசிக்கத் திட்டமிட்டுள்ளார் என டெரல் ஹெயார் கூறியுள்ளார்.

'டெஸ்ட் நடுவர் குழாமில் பணியாறறுவது பயணங்களுடன் சம்பந்தப்பட்டதாகும். இதனால், நான் எங்கு வசிக்கிறேன் என்பது ஒரு பிரச்சினையாகாது. தற்போது சர்வதேச நடுவர்கள் தமது சொந்த நாட்டில் நடைபெறும் போட்டிகளுக்கு நியமிக்கப்படுவதில்லை. இதனால், நான் லண்டனில வசிப்பது எனது பயணங்களைக் குறைப்பதற்கு உதவும். இவ்வாறு 51 வயதான ஹெயார் தெரிவித்துள்ளார்.

1991 முதல் சர்வதேச போட்டிகளில் நடுவராகப் பணியாற்ற ஆரம்பித்த டெரல் ஹெயர் இதுவரை 49 டெஸ்ட் போட்டிகளிலும் 93 ஒரு நாள் போட்டிகளிலும் நடுவராக கடமையாற்றியுள்ளார்.

ஆஸ்திரேலியா சார்பாக ஆகக் கூடுதலான சர்வதேச போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியவர் ஹெயார் ஆவார். 109 முதல்தரப் போட்டிகளிலும் அவர் நடுவராகப் பணியாற்றியுள்ளார்.

உலகில் ஆகக்கூடுதலான டெஸ்ட் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியவர்களில் 5ஆவது இடத்திலும், கூடுதலான ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றிய வரிசையில் ஆறாவது இடத்திலும் உள்ளார் டெரல் ஹெயார்.

5 ஆவது போட்டியிலும் பாக். வெற்றி! ஹமீட், பர்ஹாத் சதம் குவித்தனர்!!

நியூஸிலாந்துடனான ஒருநாள் கிரிகெட் தொடரின் ஐந்தாவது போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இப்போட்டி நடைபெற்றது. இதில் 49 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வென்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 277 ஓட்டங்களைப்பெற்றது அவ்வணி.

பாகிஸ்தானின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான யாஸிர் ஹமீட், இம்ரான் பர்ஹாத் இருவரும் சதம் குவித்து தமது அணிக்குப் பலமான அடித்தளத்தை அமைத்தனர்.

யாஸிர் ஹமீத், ஆட்டமிழக்காமல 127 ஓட்டங்களைக் குவித்தார். இம்ரான பர்ஹாத், 107 ஓட்டங்களைப் பெற்றார்.

முதலாவது விக்கெட்டுக்காக இவ்விருவரும் 197 ஓட்டங்களைப் பெற்றனர்.

இத்தொடரின் முதல் போட்டியில் இவ்விருவரும் முதல் விக்கெட்டுக்காக 2 ஓட்டங்களையே பெற்றனர். எனினும், அடுத்த நான்கு போட்டிகளிலும் முதலாவது விக்கெட்டுக்காக நூற்றுக்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெறறமை குறிப்பிடத்தக்கது.

ஐந்தாவது போட்டியில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 50 ஓவர்களில் 6விக்கெட் இழப்பிற்கு 228 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அவ்வணியின் 3 வீரர்கள் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தனர்.

பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களில அக்தர், ரஸாக், அஸர் மஹ்மூத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

யாஸிர் ஹமீட், இம்ரான் பர்ஹாத் இருவரும் போட்டியின் சிறப்பாட்டக்காரருக்கான பரிசைப்பகிர்ந்து கொண்டனர். 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் பாகிஸ்தான் 5-0 விகிதத்தில் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு

இரண்டாவது டெஸ்ட் போட்டியில்

இங்கிலாந்து வீரர் அஸ்லி கைல்ஸ் விளையாடுவது சந்தேகம்!

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான அஸ்லி கைல்ஸ் தொண்டையில் ஏற்பட்ட தொற்றுநோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் இலங்கை அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவர் பங்குபற்றுவது சந்தேகம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை கண்டியில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இப்போட்டியின் இறுதிநாளன்று 111 பந்துகளை எதிர்கொண்டு இங்கிலாந்து அணியின் தோல்வியை தவிர்ப்பதில் முக்கிய பங்காற்றியவர் கைல்ஸ் ஆவார்.

இப்போட்டியில் துடுப்பெடுத்தாடும போது கைல்ஸ் மிகவும் சுகவீனம் அடைந்திருந்தார் என இங்கிலாந்து அணியின் பயிற்றுநர் டங்கன் பிளட்சர் நேற்றுமுன்தினம் கூறினார். தற்போது கைல்ஸ் தனிமைப்படுத்தப்பட்டு, அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

அவர் பயிற்சிக்கு வரவேண்டிய அவசியமில்லை எனத் தெரிவித்துள்ளோம். இது குறித்துத் தீர்மானிக்கும பொறுப்பு அவருடையது. தற்போதைய நிலையில் எமது கவலைக்குரிய விடயம் கைல்ஸின் உபாதைதான்- இவ்வாறு டங்கன் பிளட்சர் கூறினார்.

கைல்ஸைப்போன்று, இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நசார் ஹுஸைனும் சுகவீனமுற்றிருந்தார். தற்போது ஹுஸைன் குணமடைந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது டெஸ்டில் ஹுஸைனுக்குப் பதிலாக சேர்க்கப்பட்ட பேல்கொலிங்வூட், சுமார் 3மணித்தியாலம் துடுப்பெடுத்தாடினார். இதனால் இரண்டாவது போட்டிக்கான அணித் தேர்வில் இங்கிலாந்து தேர்வுக்குழுவினர் சங்கடத்தை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை,முதலாவது போட்டியின் பின்னர் இங்கிலாந்து வீரர்கள், இலங்கை இராணுவ ஹெலிக்கொப்டர் மூலம் மத்திய மலை நாட்டுக்குச் சென்று கோல்வ் விளையாட்டில் ஈடுபட்டனர்.

கண்ணீர் அஞ்சலி

திருமதி
சின்னப்பு செபமாலையம்மா

அவர்கள் 8.12.2003 இல் காலமானதையிட்டு நாம் மிகவும் மனம் வந்துகிறோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், ஆத்மா சாந்தியடைய புனித அந்தோனியாரைப் பிரார்த்திக்கின்றோம்.

உறவினர்கள்.

(25602)(18-16-32)

மரண அறிவித்தல்கள்

திருமதி சின்னப்பு செபமாலையம்மா

மாரீசன் கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும் ஊறணி, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது சந்திப்பந்தல், இளவாலையில் வசித்து வந்தவருமாகிய திருமதி சின்னப்பு செபமாலைம்மா நேற்று (8.12.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சந்தியாப்பிள்ளை சின்னப்பு அவர்களின் அன்பு மனைவியும் சந்தியாப்பிள்ளை, கயித்தாம்பிள்ளை (நோர்வே), ரூபன், யேசுநாயகம் (அமெரிக்கா), புபதி (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும் பேபிராணி, யசிந்தா, லைசாவதி, இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் வதனி, அன்பழகன், மதியழகன், மதியழகி, அன்பழகி, சுதர்சன், சுதாகரன், சுதேசன், அன்ரனி நேசமலர், கொலின், நியூட்டன், பிரியா, சோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (9.12.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நல்லடக்கத்துக்காக சந்திப்பந்தல், இளவாலையிலுள்ள மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீந்திப்பந்தல்,
இளவாலை.

தகவல்:
சி. ரூபன்(மகன்)

தங்கராஜா செல்வராஜா (செல்வம்)

இல.97, பருத்தித்துறை வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கட்டட ஒப்பந்தகாரரும், செல்வம் மரக்காலை உரிமையாளருமான தங்கராஜா செல்வராஜா அவர்கள் 5.12.2003 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராஜா மற்றும் புவனேஸ்வரி தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- செல்வராணி தம்பதிகளின் அருமை மருமகனும் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் யாழ்ரா, மீரா, ரிஷா, வத்சலா, விஜய்தா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் தங்கராணி, தவராசா (கட்டட ஒப்பந்தகாரர், புத்தளம்), ஜெயாதேவி, தங்கவேல் (டோகா), சுசீலாதேவி, நேசராஜா (சவூதி), மதனராசா (கண்ணன் சைக்கிள் கடை உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பொன்மலர், பாலசுப்பிரமணியம் (செம்பியன்பற்று), யனுசியா, ஸ்பம்பதி (விசேகிப்பாளர்,சாவகச்சேரி பிரதேச சபை,கொடிகாமம்), வசந்தி, தர்மகுலராஜா (ஒட்டோ உரிமையாளர்), மைதிலி, ரசிந்தினி, கந்தசாமி இராசகிளி, (வெற்றிலைக்கடை, சாவகச்சேரி), நவரட்ணம் (டென்மார்க்), இராசராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சயமாலினி, பொனிற்றா, டில்குசன், நிறஞ்சன், நிறோ, நந்தா, தர்சனா, நிஜிலா, நிறோஜா, பர்மின், சகானா, நேருஜன், மதுசன், மதனி, சுதர்சன், யதுசன், சீதா ஆகியோரின் சிறிய தந்தையும் ராஜி, ரஜனி, சுபாஸ்கரன் (டோகா), சுமிதா, காலஞ்சென்ற ராஜ்கபூர் (மாவீரன்), ஸ்பரீனா, ஸ்ரனிலாஸ், ஸ்ரனிஸராஜ், ஸ்வர்ணகா ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2003) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மானிப்பாய்.

தகவல்:
ஆ.ஸ்பம்பதி(மச்சான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

இந்தியப் போக்கில் சுருதி மாற்றம்!

தூரதிருஷ்டியான நோக்கும், சிறந்த இராஜதந்திரச் சிந்தனையுமின்றி 1980களின் கடைசியில் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் ஆக்கிரமிப்புப் பாணியில் இந்தியா தலையிட்டது. அதன் காரணமாக, இலங்கைக்கு அமைதிப்படை என்ற பெயரில், தான் அனுப்பிய பல்லாயிரக்கணக்கான துருப்புக்களில் ஒரு சில ஆயிரம் துருப்புகளை பறிகொடுத்து அவமானத்துக்குள்ளான நிலையில் மிகுதித் துருப்புக்களைத் திருப்பி அழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்பட்டது.

'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்பர். இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தை தவறாகக் கையாண்டதால் தனது கையைச் சுட்டுக்கொண்ட இந்தியா, அந்தப் பக்கம் தலைவைத்துப் படுக்காது என்றுதான் பலரும் எதிர்பார்த்தனர்.

இலங்கையிலிருந்து 1990 ஆரம்பத்தில் தனது படையை - பலத்த நிர்ப்பந்தங்கள் காரணமாக - விலக்கிக்கொண்ட இந்தியா, அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு - ஒரு வனவாச காலத்துக்கு - 2002 வரை இந்த விடயத்தில் ஒதுங்கியே இருந்தது. இலங்கை இனப்பிரச்சினை விடயம் தொடர்பாக அங்கொன்றும் இங்கொன்றுமாக இந்திய அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், அதிகாரிகள் கருத்து வெளியிடுவதோடு விடயம் சரி. அதுவும் கூட ஊடகவியலாளர்கள் வலிந்து இலங்கை விவகாரம் குறித்துக் கேள்வி எழுப்புவதால் அதுபற்றிப் பதிலளிக்கவேண்டிய கட்டாயத்தில் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் தாம். ராஜீவ் காந்தி படுகொலையை ஒட்டிய சமயத்தில் கூட இலங்கை விடயத்தில் தான் மூன்றாவது நாடு என்ற யதார்த்தத்தை உணர்ந்துகொண்டு தள்ளி நிற்கும் பார்வையாளர் போக்கையே இந்தியா கடைப்பிடித்து வந்தது.

ஆனால், இப்போது நிலைமை மாறி வருவதாக அவதானிகள் உணர்கின்றனர். வனவாசகாலம் முடிந்து விட்டதோ என்று பலரும் ஐயுறும் வகையில் இந்தியத் தரப்பு சமிக்ஞைகள் வெளியாகின்றன என்ற ஒரு கருத்து நிலவுகின்றது.

இந்தியாவும் அதன் அதிகார வர்க்கமும் என்ன நிலைப்பாடு எடுத்தாலும் ஓர் அர்த்தமுமில்லாமல் இந்தியாவைப் பகைத்துக்கொள்ளக்கூடாது என்பதிலும், இந்தியாவின் நேச சக்தியாகவே தாங்கள் கருதப்பட வேண்டும் என்பதிலும் தமிழர் தரப்பு அதிக ஆர்வம் காட்டுவதும் புலப்படுகின்றது.

லண்டனில் நடந்த மாவீரர் தினநிகழ்வில் இவ்விடயம் குறித்து புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் கூறிய கருத்துக்களை இப்பத்தியில் நேற்றுப் பார்த்தோம். இந்தியாவுக்கு எப்போதும் நேசக்கரம் நீட்டவே ஈழத்தமிழர் தரப்பு விரும்புகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கும் பல்வேறு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியமும் இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியாவின் போக்கை கவலையுடன் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

"இந்திய வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்புபட்ட இராஜதந்திரிகள் இலங்கையின் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக அண்மைக்காலத்தில் வெளியிடும் கருத்துக்கள் அந்த மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் களங்கப்படுத்துவனவாகவும் தமிழினத்தை அழிக்க முற்படும் சிங்களப்பேரினவாதிகளுக்கு துணைபோவனவாகவும் அமைந்துள்ளன. இது ஈழத்தமிழ் மக்களுக்கு மிகுந்த கவலையை அளித்துள்ளது. எனவே, இவ்விடயம் குறித்துத் தாங்கள் பொருத்தமான ஏற்பாட்டை மேற்கொள்ளவேண்டும்.

"இலங்கை தொடர்பாகவும் தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டம் தொடர்பாகவும் இந்தியா கடைப்பிடித்துவரும் கொள்கையில் மாற்றம் ஏற்படுவதையே தமிழ்மக்கள் விரும்புகின்றார்கள்" - என்று வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றத்தால் 26 எதிரிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அது தொடர்பான மேன்முறையீட்டில் நான்கு பேரைத் தவிர எஞ்சிய அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்த மேன்முறையீடு தொடர்பாக நிதி சேகரிப்பதற்கு ஓர் அமைப்புக்குழு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் தலைவராக இருந்து ராஜீவ் காந்தி கொலை வழக்கு எதிரிகளுக்காகக் குரல் கொடுத்தவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ். ஈழத்தமிழருக்காகவும் அவர்களுக்காகப் போராடும் விடுதலைப் புலிகளுக்காகவும் தீவிர ஆதரவு காட்டி செயற்பட்டவர் அவர்.

அதே ஜோர்ஜ் பெர்னாண்டஸ்தான் இப்போது இந்தியப் பாதுகாப்பு அமைச்சர். அப்பதவியை ஏற்ற பின்னர் ஈழவிடுதலைப்போருக்கு ஆதரவான கருத்தை அவர் வெளியிடவில்லையாயினும் எதிர்க்கருத்துக்களையும் அதிகம் முன்வைக்கவில்லை.

ஆனால், அவர் கூட இப்போது மாறிவிட்டார். புலிகளை விமர்சிக்கும் கருத்துக்களை முன்வைக்க முயல்கிறார்.

இது இந்தியாவின் போக்கில் சற்று மாற்றம் ஏற்படுவதையே காட்டுகிறது. இந்தியக் கொள்கை வகுப்போர் மீண்டும் தமது நாட்டை அமைதிப் படைக் கால சகதிக்குள் மாட்டவைக்க முயல்கின்றனர் போலவே தென்படுகிறது.

தேநீரில் மயக்க மருந்து கலந்துகொடுத்து நவாலி வாசியிடமிருந்து நகைகள் அபகரிப்பு

நாவலி,டிசெ.9

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ஒருவருக்கு சிலாபம் பகுதியில் தேநீரில் மயக்கமருந்தைக் கலந்துகொடுத்துவிட்டு அவரிடமிருந்த மோதிரம், சங்கிலி, அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் என்பவற்றை சிலர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சிலாபத்திலுள்ள தேநீர்க் கடையொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நவாலியைச் சேர்ந்த நபர் ஒருவரே இதில் தனது உடைமைகளை இழந்தவராவார்.

தனது சகோதரனை ஜேர்மனிக்கு அனுப்புவதற்காக கொழும்பு சென்றுவிட்டுத் திரும்பும் வழியிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பஸ்ஸில் இவருடன் பயணித்துக் கொண்டிருந்த சக பயணி ஒருவர் சுவாரஸ்யமாகக் கதைத்து நெருங்கிய நண்பரானார். நள்ளிரவு நேரம் பஸ் சிலாபத்திலுள்ள தேநீர் கடையில் நின்ற சமயம் அந்த நபர் உள்ளே சென்று இரு தேநீர் வாங்கி வந்து ஒன்றை இவரிடம் கொடுத்துள்ளார். அதனைக் குடித்ததும் இந்த நபர் மயக்கமடைந்துவிட்டார்.

பஸ் புறப்படும் நேரம் ஏனைய பயணிகள் இவரது மயக்கத்தை சற்றுத் தெளியவைத்து அழைத்து வந்துள்ளனர். அதன் பின்னரே தனது நகைகள், ஆவணங்கள் என்பன அபகரிக்கப்பட்ட விவரம் அவருக்குத் தெரியவந்துள்ளது.

ஒருவாறு சமாளித்துக்கொண்டு முகமாலை வரை வந்து சேர்ந்த இவர், மயக்கம் பூரணமாகத் தெளியாத நிலையில் சோர்வாக இருந்ததனால் மற்றொருவரிடம் 100 ரூபா பணம் கொடுத்து சோடா ஒன்று வாங்கிக்கொடுக்கும்படி கேட்டுள்ளார்.

இவரது நிலைமையைப் புரிந்துகொண்ட அந்த நபர் வாங்கிய பணத்துடன் இவரது உடுபுடைவைகள் அடங்கிய பையையும் எடுத்துக்கொண்டு மாயமாகிவிட்டார்.

(ம-100)

தனது காணிக்கு ஊடாக வீதி அமைத்ததாக

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக பாஷையூர் வாசி வழக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.9

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக பாஷையூரைச் சேர்ந்த ஒருவர் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பாஷையூர் பகுதியில் உள்ள தனக்குச் சொந்தமான காணிக்கு ஊடாக தனது அனுமதியின்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தங்கள் யாழ். அலுவலக கட்டடத்துக்கான புதிய வீதி ஒன்றினை அமைத்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டியே அவர், மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

தன்னிடம் அனுமதி பெறாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் ஏதேச்சதிகாரமாக மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைக்கு அப்பகுதியிலுள்ள இராணுவத்தினரும் உடந்தையாக இருப்பதாகவும் அவர் தனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளார்.

பாஷையூர் கடற்கரை வீதியை அண்டியதாக - இராணுவத்தினரால் பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படாத - பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். அலுவலகக் கட்டடம் அமைந்திருக்கின்றது. அந்த அலுவலகத்துக்குச் செல்லுகின்ற பிரதான வீதி படையினரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனால், மேற்படி அதிகார சபையின் யாழ். அலுவலகம் நகரப்பகுதியில் வாடகைக் கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் தமது அலுவலகத்தை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கு தீர்மானித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் அதற்கு அனுமதிக்குமாறு படைத் தலைமையிடம் கோரிக்கை விடுத்திருந்ததாகக் கூறப்பட்டது.

எனினும், மேற்படி கட்டடத்திற்குச் செல்வதற்கு யாழ். கடற்கரை வீதியைப் பயன்படுத்த படையினர் அனுமதி வழங்கவில்லை என்றும் தெரியவருகிறது.

இதையடுத்து அப்பகுதியிலுள்ள தனியார் ஒருவரின் காணி ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் புதிய வீதி ஒன்றினை அமைத்து அதனூடாகப் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட காணியின் உரிமையாளர் மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ். அரச அதிபர், பொலீஸார் போன்ற பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும், அதனால் உரிய பயன் எதுவும் கிட்டவில்லை. இதனாலேயேதான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார் என்று குறிப்பிட்ட நபர் தெரிவித்துள்ளார். (ம-4)

சங்கானை - சித்தன்கேணி வீதியில்

மாலையில் கூடும் மீன்சந்தையால் போக்குவரத்தில் பெரும் நெருக்கடி

வலி.மேற்கு,டிசெ.9

சங்கானை-சித்தன்கேணி பிரதான வீதியில் மாலை வேளையில் கூடும் மீன்சந்தையால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு ஏற்படுவதாகப் பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதியில் உள்ள மதுபானசாலைக்கு முன்பாகக் கடந்த சில நாள்களாக மாலை வேளையில் மீன் விற்பனை இடம்பெற்று வருகின்றது. இதற்கிடையில், மீன் வாங்குவதற்காக வரும் மக்களும் மற்றும் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகளும் அங்கு கூடி நிற்பதையும் காணமுடிகிறது.

மீன்சந்தை மற்றும் பொதுமக்கள் கூடிநிற்பதால் இந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவிக்க நேருவதுடன், வாகன நெரிசல் ஏற்பட்டு விபத்துக்கள் அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்காலிக மீன்சந்தை நடைபெறும் இடத்துக்கு மிக அண்மையில் நிரந்தர மீன்சந்தை இருந்தும் கூட வியாபாரிகளின் இந்தச் செயற்பாடு குறித்து உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-10-175)

நாளை

கார்த்திகை 24
புதன்கிழமை
(10.12.2003)
திதி : துதியை
காலை 6.02 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
காலை 6.55 வரை
சுபநேரம்: 4.49-6.19
ராகுகாலம்: 12.19-1.49
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

ஒருவனின் உளப் பண்பை அவனின் பேச்சில் இருந்து அறிந்துகொள்ளலாம்.

வலுவிழந்தோரின் வாழ்வை மேம்படுத்த நடவடிக்கை

ஜெய்ப்பூர் நிறுவனம் மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம்,டிசெ.9

வலுவிழந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

போர் மற்றும் ஏனைய காரணிகளால் அவயவங்களை இழந்து ஜெய்ப்பூர் நிறுவனத்திடம் செயற்கை அவயவங்கள் மற்றும் வலுவிழந்தோருக்கான துணைச்சாதனங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக அவர்களுக்கு கடந்த மாதம் முதல் சுழற்சி முறையிலான சுய தொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

வலுவிழந்தவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு தமது சொந்த முயற்சியில் தொழில்செய்து வாழ்வதற்கு இந்தக் கடன்கள் பெரிதும் உதவும் என்று தாம் நம்புவதாக ஜெய்ப்பூர் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி தி.யோகநாதன் தெரிவித்தார்.

வலுவிழந்து தம்மிடம் உதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் குடும்பங்களில் உள்ள சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நிதியுதவிகள் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவற்றைவிட, வலுவிழந்தோருக்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு தமது நிறுவனம் நடவடிக்கையை எடுத்துவருவதாகவும் -

இதற்கென குடாநாட்டிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், தொழிற்கூடங்களின் முதலாளிமார் வர்த்தகத் துறை, வங்கித்துறை மற்றும் கல்வித்துறை சார்ந்தவர்களை ஒன்றிணைந்து அடுத்து மாதமுற்பகுதியில் கலந்துரையாடல் ஒன்றினை நடத்தத் திட்டமிட்டிருகின்றோம் என்றும் - திருமதி தி.யோகநாதன் மேலும் தெரிவித்தார். (ம-4)

யார் இந்த மீனா?

தான் வரைந்த படங்களை ரனு மீனாவுக்கு காட்டுகின்றான் - அவற்றில் சில ரனுவின் தந்தை விபத்தில் சிக்குகின்றார். அவருக்கு இரத்தம் ஏற்றுகின்றார்கள். அந்த இரத்தத்தில் எயிட்ஸ், வைரஸ் உள்ளதா என்று பரீட்சிக்காத காரணத்தினால் ரனுவின் தந்தைக்கு எயிட்ஸ் தொற்றகின்றது. தந்தையிடமிருந்து தாய்க்கும் அது பரவுகின்றது. அப்பொழுது ரனுவின் தாய் தாய்மையுற்றிருந்ததனால் அவர்களின் குழந்தைக்கும் எய்ட்ஸ் பரவுகின்றது. மீனாவுக்கு அதன்பின் எயிட்ஸ் நோய் பற்றிய வேறு தகவல்களும் கிடைக்கின்றன. எயிட்ஸ் நோய்க்கு மருந்து இல்லை என்பதும் அது இரத்தத்தின் மூலமும் பாலியல் தொடர்பு மூலமும், தாயிலிருந்து வயிற்றிலுள்ள குழந்தைக்கும் தொற்றுகிறது என்ற தகவலும் மீனாவுக்கு தெரியவருகிறது.

✦ எயிட்ஸ் நோய் மூன்று வழிகளில் பரவுகின்றது. தொற்றிய இரத்தம் மூலம், பாலியல் தொடர்பு மூலம், நோயுள்ள தாய் மூலம் அவரின் வயிற்றிலுள்ள குழந்தைக்கு.
✦ ஒன்றாக சேர்ந்து விளையாடுவதன் மூலமோ, சேர்ந்து உண்பதன் மூலமோ ஒருவரை ஒருவர் தொடுவதன் மூலமோ எயிட்ஸ் பரவுவதில்லை.
✦ எயிட்ஸ் நோய்க்கு மருந்து இல்லை. ஆனால், அதனைத் தடுக்கும் வழிகள் உண்டு.

(சி-31792)

அனுசரணை:
unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
இல. எண் 30,
[illegible] வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2500KV வலுவுள்ள ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும் இஇரத்தினகுமார், பழைய ஆஸ்பத்திரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. 0777 713221 (25580)

பூச்சிநீக்கப்பட்ட நல்லின ஜேர்மன செப்பர்ட் பெண் அல்ஷேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு.ஆ. பஞ்சநாதன், 69B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள்கோயில் பாடசாலை முன்பாக) T.P.: 021 222 2560 (25561)

வீடு விற்பனைக்கு

ஏழாலை மேற்கு, ஏழாலையில் 4½ பரப்புக் காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல.2112, மே/பா உதயன். யாழ்ப்பாணம். (25387)

பசுவைக் காணவில்லை

செங்கீரி (மண்ணிறம்) நிறமுடைய பட்டிபார்த்த கொம்புள்ள பசுமாட்டை 15 நாள்களாகக் காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: க.மகேந்திரலிங்கம், 383/3 நாவலர் லேன், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். T.P 222 2538 (25562)

தவறிவிட்டது

முகமாலை, எழுதுமட்டுவாழைச சேர்ந்த தியாகராசா நந்தினி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.685632144V), விசேட அடையாள அட்டை (சோதிலிங்கம் நந்தினி 091504396) இரண்டும் 01.12.2003 அன்று கலிகைச் சந்திக்கும் பருத்தித துறை பேருந்து நிலையத்துக்கு மிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 15/2, தாளையடி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (25584)

நாகராசா ஸ்ரீபாலசுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டை (813453177V), விசேட அடையாள அட்டை, Navy I.C என்பன முகமாலைப் பகுதியில் சென்ற வாரம் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், திரு.நாகராசா, வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரம் என்ற முகவரியுடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். (25585)

மணமகள் தேவை

கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970இல் பிறந்த, லண்டனில் பிரஜாவுரிமை உடைய Computing & Electronic Engineerஇற்கு படித்த மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.2119, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25586)

மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 நட்சத்திரம் மகம், பதிவுத் திருமணம் செய்து விவாகரத்துப்பெற்ற மணமகளுக்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை. விளம்பர இல 2118, மே/பா உதயன். (25577)

வாடகைக்கு

இரு மாணவர்கள் இணைந்து கல்வி பயில அமைதியான அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு: ப.கிருஷ்ணமூர்த்தி (தேவி அச்சக ஒழுங்கை), 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 2789 (25587)

வாடகைக்கு வீடு தேவை

நான்குபேர் கொண்ட சிறு குடும்பத்துக்கு யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், திருநெல்வேலிப் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. முற்பணத்தோடு தகுந்த வாடகையும் கொடுக்கப்படும். தொடர்பு: குணா, T.P.No: 0777 398586, "தாயகம்" பொற்பதி வீதி, கொக்குவில். (25560)

நாளை

10.12.2003 புதன்கிழமை
2004ஆம் கல்வியாண்டு
ஆரம்பமாகிறது.
7/1, சுவாமியார் வீதி,
நச்சமோட்டை சந்தி.
WIN TUITION CENTRE
(25592) (35-21-14-17)

தேவை

மிக்சர் கம்பனிக்கு வேலை செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை.
வேல் மிக்சர்
57, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
(25588) (26-14-21-17)

தவறிவிட்டன

கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.781553887V), பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகிய இரண்டும் 08-12-2003 அன்று யாழ். பிரதான வீதிக்கு அண்மித்த பகுதியில் போர்ஸடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும்.
(29-21-14-17) (25594)

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கம் (வ-து)
நாற்பத்துமூன்றாவது வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம் : யாழ். அரசினர் வைத்தியசாலை உள்ளக மருந்தக மேல்மாடி
காலம் : 10.12.2003 புதன்கிழமை
நேரம் : காலை 9.30மணி

மேற்படி பொதுக் கூட்டம் திரு. செ.பேரின்பநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

செ.புவனேந்திரன்
(செயலாளர்)

(C/31793)(35-14-21-17)

"ஓம் வரத காளி அம்பாள் துணை"

நீடூழி வாழி! வாழி!!

எமது ஆலய தர்மகர்த்தாசபைத் தலைவர்
திரு.ஐ.கோ.சந்திரசேகரம்
(பிரதி பிரதம மார்ஷல், யாழ். பல்கலைக்கழகம்)
அவர்கள் 19.11.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவருடைய சமய, சமூகப் பணிகள் "அகில இலங்கை சமாதான நீதிபதி" என்ற கௌரவப் பதவிமூலம் மேலும் சிறக்க எல்லாம்வல்ல சரவணை மேல்பால் பதியுறையும் அருள்வரத காளியம்பாளின் திருவடிகளை இறைஞ்சி நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ அருள் வரத காளியம்பாள் அடியார்களும், தர்மகர்த்தா சபையினரும்.
சரவணை மேற்கு,
2 ஆம் வட்டாரம், வேலணை.
(25596)(34)

ஓராண்டு நினைவு அஞ்சலி

செல்வன் கனகசிங்கம் சண்முகதாஸ்
(விஞ்ஞானத்துறை மாணவன், யாழ். பல்கலைக்கழகம்)
மலர்வு: 10-07-1978 உதிர்வு: 20-10-2002

அன்போடு பழகிய உமது பிரிவு தாங்கமுடியவில்லையே!
இனி எம்பிறப்பில் காண்போம் உமது அன்புத் திருமுகத்தை?
நீர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் நினைவு அழியாது.

பங்களா லேன்,
மல்லாகம்.
க.கிருபாகரன்
(சகோதரன்)
(25589) (26-21-14-17)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், திருநெல்வேலி, 24 A, வளாக வீதியில் வசிப்பவரும்
திரு.சுப்பிரமணியம் நித்தியானந்தன்
(நியூ கல்யாணி ஜுவலர்ஸ் உரிமையாளர்)
வடபிரதேச இந்துப்பேரவைத் தலைவரும் தீவக லயன்ஸ் கழக அங்கத்துவப் பணிப்பாளரும் எயிட்ஸ், காசநோய் தடுப்பு சங்க உறுப்பினரும் இலங்கை முதலுதவிச் சங்க உப செயலாளரும் ஆகிய இவர் 21.11.2003 இல யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக பதவிப்பிரமாணம் செய்ததையிட்டு நாங்கள் பெரும மகிழ்ச்சியடைவதோடு, அவர் தெய்வீக தொண்டுகளையும், அரும்பெரும் சேவைகளையும் ஆற்றிவருகின்றார். அவர் மேன்மேலும் மக்களுக்கு சேவைகளை ஆற்றி என்றும் பல பதவிகளையும் பெற்று சீரும்சிறப்புமாக வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் ஆ.சாந்தலிங்கம்,
(குடும்பத்தினர்)
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

புங்குடுதீவு - 05 (25593) (25-21-12)

முதலாவது வருட அஞ்சலி

மலர்வு 10 - 07 - 1978
உதிர்வு 20 - 10 - 2002



அமரர்
கனகசிங்கம் சண்முகதாஸ்
(விஞ்ஞானத்துறை மாணவன், யாழ். பல்கலைக்கழகம்)

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமானீர்
என்றும் உமது நினைவு நெஞ்சில் நிறைந்துள்ளது
இன்று நினைந்து இறைபதத்தில் இருந்திட
நன்று வணங்கிக் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.
ஆத்மாசாந்திபெறுவதாக.

பங்களா வீதி,
மல்லாகம்.
- குடும்பத்தினர்.
(25590) (26-14-21-17)

யாழ் குடாநாட்டு மாணவர்களுக்கு பரந்த வலையமைப்புடன் கல்விச் சேவையாற்ற ஜனவரி முதல் வாரத்தில்

சுன்னாகத்திலும், நெல்லியடியிலும்
ASIAN COMPUTERS

O/L மாணவர்களுக்கான கொம்ப்யூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஆரம்பம்
மேலும் பல சலுகைகளுடன் எதிர்பாருங்கள்.

ASIAN COMPUTER SYSTEMS
யாழ்ப்பாணம் சுன்னாகம் நெல்லியடி

ரிச்கேக்

175 ரிச் கேக் தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்கள்

500g ரவை	1 போ.கோல்டன் சிரப்
500g பட்டர்	200 கிராம் கென்டீட் பீல்
500g பிளம்ஸ்	1 வெனிலா எசன்ஸ்
500g ரெய்சின்ஸ்	1ஆமன்ட் எசன்ஸ்
500g செரீஸ்	1/2 றோஸ் எசன்ஸ்
500g பம்கின் பிரசர்வ்	1 வைன் கிளாஸ் தேன்
600g கஜு	2 வைன் கிளாஸ் பிரண்டி
200g கறன்ஸ்	1/4 தேக்கரண்டி உப்பு
500g சவ் சவ்	27 முட்டை
500g ஜின்ஜர் பிரசர்வ்	(27 மஞ்சள் கரு
1 போ. ஸ்ட்ரோபரி ஜேம்	14 வெள்ளைக் கரு)
600 g சொவ்ட் சுகர்	(1/4 தேக்கரண்டி சாதிக்காய்)

(C/31789) UTHAYAN Graphics

RICH CAKE

செய்யும்முறை
முட்டை, சீனி வறுத்த ரவை, பட்டர் முதலியவற்றைத் தவிர மற்ற பொருள்களை சிறு துண்டுகளாக வெட்டி 5 நாள்களுக்கு வைக்கவும். வெள்ளைக் கருவை சீனியில் சேர்த்து நன்றாக அடித்து வறுத்த ரவையை சேர்க்கவும். அதுடன், மஞ்சள் கரு, பட்டர், வெட்டிய பொருள்களுடன் சிறிதளவு பேக்கிங் பவுடரையும் சேர்க்கவும். பிறகு கேக் டிரேயில் போட்டு பேக் செய்யவும்.

PETTAH ESSENCE SUPPLIERS
பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்
102, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎: 222 2386

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நலிவுற்ற பொதுமக்களுக்கென

விஞ்ஞானபீட மாணவர் வழங்கும் நிதி இவ்வருடம் மந்திகை ஆஸ்பத்திரிக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவர் ஒன்றியத்தினால் வருடம் தோறும் வழங்கப்பட்டு வரும் சமூக சேவை நிதி இவ்வருடம் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் க.வாணி முகுந்தன் மேற்படி உதவித் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட பத்தாயிரம் ரூபாவுக்கான காசோலையை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளையிடம் யைளித்தார்.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் மனநோயாளர் சிகிச்சைப்பிரிவின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புக்கென இந்த நிதி பயன்படுத்தப்படும் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் சமூகத்தில் நலிவுற்ற மக்களுக்கென வருடம் தோறும் நிதி அன்பளிப்பை வழங்கி வருவது தெரிந்ததே. (எ)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.வாணிமுகுந்தனினால் மந்திகை ஆதார வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளையிடம் சமூகசேவை நிதிக்கான காசோலை கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

டெங்கு காய்ச்சலை இனங்காண்பதற்கு ஆய்வுகூட வசதி இல்லாமையால் சிரமம்

நோய் பரவும் ஏதுநிலை குறித்து மருத்துவ வட்டாரம் கவலை

தெல்லிப்பழை,டிசெ.9

டெங்கு காய்ச்சலை உறுதிப்படுதுவதற்கான ஆய்வுகூட வசதிகள் குடாநாட்டில் முழுமையாக இல்லாததனால் நோயை இனங்காண முடியாத சிரமம் ஏற்பட்டுள்ளது.

மழைக்காலம் ஆரம்பித்ததும் நளம்புகளினால் டெங்கு காய்ச்சல் பரவலாம் என்ற காரணத்தால் குடாநாட்டில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எனினும், டெங்கு காய்ச்சல் அறிகுறிகளுடன் ஒருவர் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டால் அவருக்கு நோய் இருப்பதை உடனடியாக உறுதிப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

நோயாளியின் இரத்த மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டே நோய் உறுதிப்படுத்தப்படுகின்றது.

அண்மையில் தெல்லிப்பழை வைத்திய சாலையில் காய்ச்சல் காரணமாக உயிரிழந்த நபர் ஒருவருக்கு டெங்கு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டபோது அதனை உடனடியாக உறுதிப்படுத்த முடியவில்லை.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமைச் சேர்ந்த சி.சிறிசங்கர் (வயது-19) என்ற இளைஞரே உயிரிழந்தவராவர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 24 மணி நேரத்துக்குள் அவர் உயிரிழந்தார். மருத்துவ பரிசோதனை அறிக்கையில், அவரது மரணத்திற்குக் காரணமான காய்ச்சலில் டெங்கு நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளன என்றும் -

குடாநாட்டில் டெங்கு நோயை இனங்காண்பதற்கு ஆய்வுகூட வசதிகள் இல்லாமையால் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயை உடனடியாக இனங்காண்பதற்கான வசதிகள் இல்லாமையால் இந்த நோய் விரைவில் பரவுவதற்கு வாய்ப்புகள் அதிகளவில் இருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன. (ம-150)

தொண்டர் ஆசிரியராக இருந்து நியமனம் பெற்றோருக்கு பயிற்சி

அடுத்த மாதம் 21 நாள்கள் நடைபெறும்

அச்சுவேலி,டிசெ.9

தொண்டர் ஆசிரியர்களாக இருந்து அண்மையில் நிரந்தர நியமனம் பெறறவர்களுக்கான வதிவிடச் சேவைகாலப் பயிற்சி அடுத்த மாதம் வழங்கப்படவுள்ளது.

நீண்ட காலமாகத் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து இந்த வருடம் நடுப பகுதியில் ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 900 பேருக்கே மாவட்டரீதியாக முன்னோடி ஆசிரியர் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கப்படவுள்ள இப்பயிற்சிநெறி 21 தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சேவைமுன் பயிற்சியிலும் பார்க்க மாறுபட்ட விதத்தில் நவீன முறையில் இப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தவறாது கலந்துகொள்ளவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியில் வழங்கப்படவிருக்கும் பயிற்சி நெறிக்குரிய வள ஆணையாளர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவர்களுக்குரிய வழிகாட்டல் பயிற்சிகள் தேசியகல்வி நிறுவகத்தினால வழங்கப்பட்டுள்ளன. (ம-11)

மெதடிஸ்த புனித பேதுரு ஆலயம் தூரிதமாகப் புனரமைப்பு

கொழும்புத்துறை,டிசெ.9

யாழ். மத்திய கல்லூரிக்கு அண்மையில் உள்ள மெதடிஸ்த புனித பேதுரு ஆலயம் 13வருடங்களின் பின்னர் தற்பொழுது தூரிதமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகிறது.

1990 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சினால் தரைமட்டமாக்கப்பட்ட இந்த ஆலயம் கொரிய மெதடிஸ்த திருச்சபையின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுவருகிறது.

அடுத்த வருட ஆரம்பத்தில் இந்த ஆலயம் மக்களின் வழிபாட்டுக்குத் திறந்துவைக்கப்படும் என்று அருட்திரு. கே.கருணாசேகர தெரிவித்துள்ளார்.

1823ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி இந்த ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-10-30)

புற்றுநோய் சிகிச்சை நிலையம் வல்லையில் அமையாமைக்கு சில எம்.பிமாரும் காரணம்

சிவாஜிலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு

வடமராட்சி,டிசெ.9

வெளிநாட்டு உதவியுடன் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை வலவெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் அமைக்க ஆயத்தமான போது எங்களுக்குள்ளே இருந்த பேதம் காரணமாக, அந்நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பை இன்று நாம் இழந்து நிற்கிறோம். புற்று நோய் சிகிச்சை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு முடியாத நிலை ஏற்பட யாழ். மாவட்டத்திலுள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் காரணமாவார்கள்.

- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றம் சாட்டினார்.

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட சிறுவர் விடுதி, மறுசீரமைக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட பிரசவ அறை, மறுசீரமைக்கப்பட்ட களஞ்சிய அறைகள் திறப்பு விழாவிலும் 16ஆவது இலவச கண்ணாடி வழங்கும் வைபவத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்கேசிவாஜிலிங்கம் கலந்து கொண்டு பேசினார்.

வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவங்களில் சிவாஜிலிங்கம் எம்.பி. பேசுகையில் மேலும் கூறியதாவது:-

புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் சிகிச்சை வசதி கருதி வல்வெட்டித்துறையில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்க அப்போதிருந்த அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் யாழ். மாவட்ட வதிவிடப்பிரதிநிதி திரும்தி மொறிஸ் மோகன் 40 கோடிரூபாவை வெளிநாட்டு உதவியாகப் பெற்றுத்தர முன்வந்தார். விடுதலைப் புலிகளும் ஒரு கோடி ரூபாவைத்தர முன்வந்தார்கள். புலம் பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் நம்மவர்களும் நிதியை வாரிவழங்க முன்வந்தனர்.

இந்தநிலையில் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை எங்கு அமைப்பது என்ற இழுபறிநிலை ஏற்பட்டது. இந்நிலையம் வல்வெட்டித்துறையில் அல்ல எங்கள் எங்கள் இடத்தில் தான் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைய வேண்டும் என ஏனையோர் விரும்பினார்கள். இந்த இழுபறிநிலையினால் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்கும் திட்டத்தை இன்று நாம் இழந்து நிற்கிறோம். இந்த இழுபறியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்டுள்ளார்கள்.

புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்க சுகாதார அமைச்சு அனுமதித்த போதிலும் எமது கெட்டகாலம் நல்லதை நாம் இழந்து விட்டோம்.

கடந்த 1990களில் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்த காசநோய் வைத்தியசாலை கோப்பாய், சங்கானை போன்ற இடங்களுக்கு மாற்றப்பட்டது. ஆனால் யாரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இரவோடிரவாகக் கொண்டு வரப்பட்ட காசநோய் வைத்திய சாலையை வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வரவேற்று அதற்குரிய இடத்தை வழங்கியது. இன்று அது இயங்கிக்கொண்டிருக்கின்றது. புற்று நோய் சிகிச்சை நிலையம் தங்கள் ஊருக்குத்தான் வேண்டும் என்று கேட்பவர்கள் காசநோய் வைத்தியசாலையையும் கொண்டு போகலாம் தானே?

யாழ். மாவட்டத்தில் தற்போது ஆதாரவைத்தியசாலையாக இயங்கி வரும் பருத்தித்துறை (மந்திகை) அரசினர் ஆதாரவைத்தியசாலையை பொதுவைத்தியசாலையாகவும் மாவட்ட வைத்தியசாலையாக இயங்கிவரும தெல்லிப்பழை, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைகளை ஆதார வைத்தியசாலைகளாகவும் தரம் உயர்த்துவதற்கு சுகாதார அமைச்சர் என்னிடம சம்மதம் தெரிவித்துள்ளார். ஊர்காவற்றுறை, வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளை இப்போதைக்குத் தரம் உயர்த்தமுடியாது என சுகாதார அமைச்சர் கூறிவிட்டார் - என்றார்.

யாழ். அரச அதிபர் செபத்மநாதன பேசுகையில் கூறியதாவது:-

கடந்த 20 வருடகால யுத்தத்துக்குப் பின்பு அமைதியான இன்றைய சூழ்நிலையில் புனரமைப்புவேலைகள் தனிநபர் கைகளில்தான் தங்கியுள்ளன.

சரியாகச் செயறபடக்கூடிய தலைமைத்துவமும், துறைசார்ந்த [illegible] மருத்தி பற்றிய புலமையும் கொண்டவர்களால்தான் இன்றைய காலகட்டத்தில் யாழ். மாவட்டத்தை அபிவிருத்திசெய்ய முடியும்.

ஆனால், சிறந்த தலைமைத்துவம், துறைசார்ந்த புலமை கொண்டவர்களுக்கு இன்று பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்கள் யாழ். மாவட்டத்துக்கு மட்டுமல்ல முழு வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கும் தேவையாக உள்ளனர்.

1992ஆம் ஆண்டு யுத்த காலத்தின் போது அப்போதைய யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் டிவகலாலாவின் முயற்சியினால சத்திரசிகிச்சைப் பிரிவு இவ்வைத்தியசாலையில் கட்டப்பட்டது. அதன் பின்னர் இது பாவிக்கப்படவில்லை. தற்போதைய வைத்தியப் பொறுப்பதிகாரி பதவி ஏற்றது முதல் இவ்வைத்தியசாலை புதுப்பொலிவுடன் காணப்படுகிறது. இவர் தனது முயற்சியால் அரசசார்பற்ற நிறுவனங்களிடமும், அரசிடமிருந்தும் நிதிகளைப் பெற்று வைத்தியசாலையின் அபிவிருத்திக்குப் பாடுபட்டு வருகிறார். மன்னார், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைகளில் பணியாற்றிய போதும் இவர் இதே பணிகளைச் செய்தார். இவரது பணிகள் பாராட்டுக்குரியவை.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களத் தலைவர்களும், துறைசார்ந்தவர்களும் இவ்வைத்தியப் பொறுப்பதிகாரி போல செயறபட்டால் எமது பிரதேசம் அபிவிருத்தியுடன் கூடிய முன்னேற்றத்தை அடைய முடியும். எந்தவொரு திணைக்கத் தலைவர்களோ, துறைசார்ந்தவர்களோ கடிதங்களை எழுதுவதால் மாத்திரம் முன்னேற்றம் காணமுடியாது. செயலில் இறங்க வேண்டும்.

நான் இவ்வைத்தியசாலையில் ஒரு பதிவுசெய்யப்பட்ட நோயாளி. வைத்தியசாலையின் சுத்தத்தன்மை, தன்னலம் கருதாத ஊழியர்களின் சேவை, எவ்வேளையிலும் சிகிச்சை பெறக்கூடிய வசதி இவற்றுக்காகவே யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்து சிகிச்சை பெறுகிறேன்.

இந்த இடம் எமது தேசியத் தலை[illegible] இது தின் கடந்த காலங்களில் ஏற்பட்ட அழிவுகளை நான் பார்த்துள்ளேன். இந்த ஊர் பழைய நிலையில் இல்லாவிட்டாலும் தலைநிமிர்ந்து நிற்கும் நிலை இந்த ஊருக்கு ஏற்பட வேண்டும் அதற்காக இவ்வைத்தியசாலை தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் - என்றார்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரக கொழும்பு தலைமைப்பீட பிரதிநிதி நீல்றைட் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த இரண்டு வருடங்களாக இப்பகுதி மக்களுடன் நான் கலந்துரையாடிள்ளேன் சகோதரர்களாக வாழ வேண்டும் என்ற இலக்கைக் கொண்டமாட்டின் லூதர்கிங்கினது பொன்மொழிகள் இவ்வைத்தியசாலையில் பொறிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

நாம் எப்போதும் சகோதரர்களாக வாழவேண்டும். தேவைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு அன்புக்கரம் நீட்டிசேவை செய்வதே எமது பிரதான நோக்கம். எமது சேவைகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

நல்லெண்ணத் தூதுவராக எமது நிறுவனத்துக்கு வந்த ஹொலிவூட் நடிகை அஞ்சலீனா ஜொலி இங்கு விஜயம் செய்தபோது இடம்பெயர்ந்த மக்கள், சிறார்களுடன் நன்கு உரையாடியதுடன் அவர்களது மன உணர்வுகளைப் புரிந்துகொண்டார். மன உணர்வைப் புரிந்துகொண்டதால் இந்த மக்களுக்கு அவர் உதவியுள்ளார் - என்றார்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரக நல்லெண்ணத் தூதுவரும், பிரபல ஹொலிவூட் நடிகையுமான அஞ்சலீனா ஜொலி அன்பளிப்புச் செய்த 10 லட்சம் ரூபாவில் புனரமைக்கப்பட்ட அதிநவீன சிறுவர் விடுதியை அகதிகளுக்கான ஐ.நா.தூதரக கொழும்பு பிரதிநிதி நீல்றைட்டும், மறுசீரமைக்கப்பட்ட குளிரூட்டியுள்ள பிரசவ அறையை யாழ் அரச அதிபர் செபத்மநாதனும், அபிவிருத்திச் சபை நிதியிலிருந்து புனரமைக்கப்பட்ட களஞ்சிய அறையை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேரி. சிவபாதமும் திறந்து வைத்தனர். தொடர்ந்து சுமார் 200 பேருக்கு இலவசக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ம-173)

குடாநாட்டில் மரக்கறி விலை எகிறுகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். குடாநாட்டில் மரக்கறியின் விலை நாளுக்கு நாள் ஆணைவிலை, குதிரைவிலை என அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

கடந்த மாதம் 20 ரூபா, 40 ரூபா என விற்ற மரக்கறிகள் தற்போது 100 ரூபா, 120 ரூபா என அதிகரித்த விலையில் விற்கப்படுகின்றன. கடந்த மாதம் 40 ரூபா விற்ற கத்தரிக்காய் தற்போது ஒரு கிலோ 120 ரூபாவாகவும் பயற்றங்காய் 80 ரூபாவாகவும் ஒரு கிலோ 20 ரூபா விற்ற பூசனிக்காய் 40 ரூபாவாகவும் ஒரு கிலோ 50 ரூபா விற்ற மிளகாய் 150 ரூபாவாகவும் ஒரு கிலோ 20 ரூபா விற்ற கோவா 60 ரூபாவாகவும் ஏனைய அனைத்து மரக்கறி வகைகளும் உச்ச விலையிலும் விற்கப்படுகின்றன.

உள்ளூர் மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பை அடுத்து கொழும்பில் இருந்து தருவிக்கப்படும் உருளைகிழங்கின் விலையும் தற்போது அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கடந்த வாரம் 60 ரூபா விற்ற உருளைக்கிழங்கு தற்போது ஒரு கிலோ 100 ரூபாவாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ வெங்காயம் 40 ரூபாவில் இருந்து 60 ரூபாவாக உயர்ந்துள்ளது. (ம-15)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகத்துக்குப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.9

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்திற்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகசுமூர்த்தியினால் வரவு - செலவுத்திட்ட நிதியில் இருந்து ஒதுக்கப்பட்ட பணத்திலேயே இப்பொருள்கள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழனன்று நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக செயலாளர் மெற்றாஸ்மயிலிடம் இப்பொருள்கள் வழங்கப்பட்டன.

கூத்து நாடகங்களுக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள், தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று, டெக் என்பனவே வழங்கப்பட்டன. (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளுடனான சமாதானப் பேச்சைக் கருதியே ஜனாதிபதியுடன் மோதாமல் பேசி வருகின்றேன்!

கற்பிட்டி சந்திப்பில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

கற்பிட்டி,டிசெ.9

முழுமையான அதிகாரங்களைக் கொண்ட அரசினால் மாத்திரமே சமாதானப் பேச்சுக்களைத் தொடர முடியும். விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதியுடன் மோதிக்கொள்ளாமல் சுமுகமாகப் பேசிவருகின்றேன். ஜனாதிபதியுடன் மற்றொரு சுற்றுப்பேச்சு விரைவில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கற்பிட்டி மக்களுடனான சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை இச்சந்திப்பு கற்பிட்டி வாடிவீட்டு வளாகத்தில் இடம்பெற்றது.

கற்பிட்டி பிரதேச சபை முன்னாள தலைவர் எம்.எச்.மொஹமட் உஹது தலைமையில் இடம்பெற்ற இச்சந்திபில் அமைச்சர்கள் நூர்தீன் மசூர், ஏ.எச்.எம்.அஸ்வர் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியுதீன், பாலித்த ரங்கபண்டார, நியுமல் பெரேரா, மு.கா.தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் ஆகியோரும் பெரும் எண்ணிக்கையிலான மக்களும் கலந்து கொண்டனர். கற்பிட்டி பிரதேசசபைத் தலைவர் ஏ.எச்.எம்.றியாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பிரதமர் தனதுரையில் மேலும் கூறியதாவது:-

இன்று எமக்குத் தேவையானது சமாதானமேயாகும். ஜனாதிபதி மூன்று அமைச்சுகளைப் பொறுப்பேற்றதன் காரணமாக சமாதானப் பேச்சு பின்னடைவைச் சந்தித்துள்ளது. நாட்டிலும் அரசியல் நெருக்கடி தோன்றியுள்ளது. இந்நிலையில், ஜனாதிபதியுடன் மோதிக் காரியத்தைக் கெடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை.

எமது அரசு எடுத்த முயற்சியின் காரணமாக, கடந்த 20வருடகால யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுக்கு முன் வந்தனர்.

முஸ்லிம்கள் மத்தியிலும் பிரச்சினைகள் உள்ளன. இடம்பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பற்றிய பிரச்சினைகளும் உண்டு. அண்மையில் கிண்ணியா பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களையும் நாம் அவதானித்து வருகின்றோம்.

இன்று வடக்குப் பகுதியில் இரண்டு லட்சம் மக்கள் வீடின்றி வாழ்கின்றனர். லட்சக்கணக்கான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

நாம் ஆட்சியைப் பொறுப்பேற்ற போது அடிமட்டத்தில் இருந்த பொருளாதாரம் தற்சமயம் அபிவிருத்தி அடைந்து வருகின்றது. இதனை இன்னும் வலுவுள்ளதாக மாற்றி அமைக்க வேண்டும்.

கற்பிட்டிப் பகுதியில் மீன்பிடி, விவசாயம் போன்ற தொழில்களும் துரித அபிவிருத்தியின் கீழ் கொண்டு வரப்படும்.

எல்லாவிதமான அபிவிருத்திகளையும் செய்வதற்கு சமாதானம் அவசியமாகும் சமாதானம் இருந்தால் மாத்திரமே அது சாத்தியமாகும்.

- இவ்வாறு பிரதமர் கூறினார்.

அமைச்சர் நூர்தீன் மசூர், ரிசாத் பதியுதீன், நியுமல் பெரேரா ஆகியோரும் உரையாற்றினர். (ம)

உணர்வூட்டல் திட்டத்துக்கு பன்னமூலை கிராமம் தெரிவு

வலிமேற்கு,டிசெ.9

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பன்னமூலைக் கிராம சமூக உணர்வூட்டல் திட்டத்துக்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் அனுசரணையுடன் இந்தக் கிராமத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களும், சமூக உணர்வூட்டல் வகுப்புக்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (எ-175)

ஆறுமுக நாவலர் குருபூசை நிகழ்வு

சண்டிலிப்பாய்,டிசெ.9

நாவலர் தரும பரிபாலன சபையின் எதிவரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசையை வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும், நாவலர் தர்மபரிபாலனசபையின் தலைவருமான ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இக்குருபூசையில் மாணவர்களின் திருமுறை ஓதல், சைவ அறிஞர்களின சொற்பொழிவுகள் உட்பட பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

பாவனைக்குதவாத இனிப்பு விற்றவருக்கு ரூ.3,000 அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தின் போது மனித பாவனைக்கு உதவாத - தீங்கு விளைவிக்கக்கூடிய சாய மூட்டிய இனிப்பு வகைகளை விற்பனை செய்த ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றினால் மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி நபர் தொடர்பாக யாழ். மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கிலேயே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4)

இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு

சண்டிலிப்பாய்,டிசெ.9

எதிவரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வருடாந்த இடமாற்ற அறிவித்தலில் இடமாற்றம் பெற்றுள்ள பெரும்பாலான சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் தங்கள் இடமாற்ற உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரியுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் ஆகியோருக்கு மேன்முறையீட்டுக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் தொடர்ந்து பல வருடங்களாகப் பணியாற்றிவரும ஊழியர்கள் இம்முறை இடமாற்றத் [illegible] பது குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல் நோய்கள் பரவுகின்றன

சுகாதார பரிசோதகர் அறிவுறுத்து

வலி.தெற்கு,டிசெ.9

பாடசாலை மாணவர்களிடையே பல் தொடர்பான நோய்கள் பரவி வருகின்றன. சிறுவயது முதலே பற்பசை கொண்டு பல்துலக்கப் பெற்றோர்கள் பழக்காவிட்டால், அவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும்.

- இவ்வாறு அறுவுறுத்தியுள்ளார் சுன்னாகம் நகர பொது சுகாதாரப் பரிசோதகர் கு.பத்மகுமார்.

சுன்னாகம் மின்சாரசபை வீதியில உள்ள கலைவாணி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களுக்கு பற்பசை, பல்தூரிகைகள் என்பவற்றை வழங்கி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னதாக, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள பற்சிகிச்சை நிலைய வைத்திய அதிகாரியால் முன்பள்ளிப் பிள்ளைகளின பற்கள் பரிசோதிக்கப்பட்டன.

சுன்னாகம் வர்த்தகர்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட பற்பசைகளும், தூரிகைகளும் முன்பள்ளியைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் சிறப்பு நிகழ்வாக நடைபெற்றது. (எ-152)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்வித் திணைக்களத்தில் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் சைவப்பிதா பொன். சாம்பசிவம் ஐயா அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

நாகமுத்து பொன்னையா

(சங்கானை விநாயக ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

தோற்றம் 21-05-1920 மறைவு 04-12-2003

அவர்கள் 04.12.2003 இல் இறந்தசெய்தி அறிந்து துயர்சுமந்து நிற்கின்றோம்.

பெற்ற பிள்ளைகளின் பெரும்புகழை மனஞ்சுமந்து
கற்றவரின் உற்றவரின் பாராட்டை உளஞ்சுமந்து
கொற்றவன்போல் கொலுவிருந்த பெருஞ்சுடரே ஐயாவே!
நற்றவம் நீர் செய்துள்ளீர் நல்லுலகம் சென்றடைவீர்!
கற்றம் சூழநின்று கலக்கின்ற நும்துயரில்
துணுக்காய் கல்விவலயமதும் தோள்கொடுத்து நிற்கின்றது.

பணிப்பாளர், பணியாளர்கள்,
வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய்.

(25544)(34-14)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 1917 - 05 - 31

உதிர்வு 2003 - 11 - 08

அமரர் தம்பையா சின்னத்துரை

புவித வாழ்வில் புண்ணிய சீலராய்த் திகழ்ந்து – உலகில்
மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்தீரே!
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (09.12.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் மற்றும் வீட்டுக்கிருத்தியம் ஆத்மசாந்திப் பிரார்த்தனை என்பவற்றில் பங்குபற்றி அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் நண்பகல் நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி கேட்டு இல்லம் நாடி வந்து துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும், தந்தி தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்.

"மணிமகால்",
இடைக்காடு, அச்சுவேலி. (25511) (26-14)

மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் ச.கிவிஷன்

09.12.2003

கவிஸல் இருக்கும்
திரு. திருமதி சதீஸ்குமார் ஸ்ரீறஜனி தம்பதியரின் செல்வப்புதல்வன்

கிவிஷன்

தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (09.12.2003) செவ்வாய்க்கிழமை சுவஸில் தன்னுடைய அப்பா, அம்மா முதலியோருடன் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, கோண்டாவில் அப்பப்பா, அப்பம்மா, புன்னாலைக்கட்டுவன் அம்மப்பா, அம்மம்மா மற்றும் சுவிஸ் காந்தன் மாமா, மாமி, பிரவீனா மச்சாள், கனடா நந்தினி, பெரியம்மா, பெரியப்பா, அண்ணாமார், தர்சன், கோபிகன், சுவீடன் ராஜன்மாமா, கனடா சுகுமார், சித்தப்பா, சித்தி, லண்டன் சபேஸ்குமார் சித்தப்பா, கோண்டாவில் சுரேஸ்குமார், சித்தப்பா, சித்தி, பிள்ளைகள், கோண்டாவில் கலைமதி மாமி, மாமா, பிள்ளைகள், ஜேர்மனி வத்சலா மாமி, மாமா, பிள்ளைகள் ஆகியோர் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர், கோண்டாவில் கிழக்கு பேச்சி அம்மன் அருள்பெற்று சீரோடுஞ் சிறப்போடும் பல்லாண்டுகாலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

க.சிறிஸ்கந்தராசா
- அம்மப்பா -

பலாலி வீதி.
புன்னாலைக்கட்டுவன.

(25287)(34-14-21)

இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567

(21-14) (சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-31680)

நெஞ்சை விட்டகலா 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 27 - 01 - 1943

விண்ணகம் 02 - 12 - 2001

அமரர் துரையப்பா நவரத்தினம்

(முன்னாள் உரிமையாளர், முனீஸ்வரன் கராஜ்)

வேரற்ற ஆலமரமாக விழுதுகள் தாங்கிட நாமும்
விழிமூடும் நாள் வரை உங்கள் நிழல் தேடி அலைகின்றோம்
நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்
உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டகலாது! -அப்பா!

11,2ஆம் குறுக்கு,
கொழும்புத்துறை. (25542)(14-21-26) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள்!

யுனிசெவ் ஆதரவுடன் சுகாதார நலநோம்பு அமைச்சு செயற்படுத்தும்

வலிகாமம் தெற்கு,டிசெ.9

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசத்து மக்களுக்கு பல அடிப்படை சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

சுகாதார போஷாக்கு நலநோம்பு அமைச்சு யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் இத்திட்டங்களை அமுல் படுத்துவுள்ளதாக அமைச்சின் போஷாக்கு திட்டப் பணிப்பாளர் என்.சுமணரட்ண தெரிவித்துள்ளார்.

அடிப்படை சுகாதார மேம்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக பிரிந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு தோறும் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் போஷாக்குக் குறைந்த கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

உணவுகள் மூலமும் தண்ணீர் மூலமும் நோய்கள் பரவும் அபாயமுள்ள பிரதேசங்களை இனங்கண்டு, அங்கும் இத்திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

மலசலகூடங்கள், பாதுகாப்பான குடிதண்ணீர் கிணறுகள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல், கிணறுகளை மீளபுனரமைப்பு செய்தல் மற்றும் வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவித்தல் போன்ற பல பயனுள்ள செயற்றிட்டங்கள் தெரிவுசெய்யப்படும் குடும்பங்களுக்கு என நடைமுறைப்படுத்தப்படவும் உள்ளன.

மேலும் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கென ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்கும் தலா ஆறு லட்சத்து 40 ஆயிரம் ரூபா வரை ஒதுக்கித்தரப்படும் எனவும் திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவித்து மேம்படுத்தும் வகையில் மேற்பிரிவு, மத்திய பிரிவு, ஆரம்பப்பிரிவு என்ற பிரிவுகளில் கட்டுரைப் போட்டிகள் நடத்தவும் - முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ம)

உணர்வுபூர்வமாக நடைபெற்ற மேஜர் ரங்கனின் நினைவு நிகழ்வு

கிளிநொச்சி,டிசெ.9

தென் தமிழீழத்தில் முதற் தரைக் கரும்புலித் தாக்குதலை நடத்தி வீரகாவியமான கரும்புலி மேஜர் ரங்கனின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளியன்று மட்டக்களப்பில் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

கரும்புலி மேஜர் ரங்கன் வீரகாவியமான மட்டக்களப்பு மாவட்டம், புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள கண்ணகை அம்மன் ஆலய முன்றிலில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மட்டக்களப்பு பல்கலைக்கழக பீடாதிபதிகளில் ஒருவரான எஸ்.பாக்கியராஜ் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான ராம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கரும்புலி மேஜர் ரங்கனால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் வீரகாவியமான ஏனைய மாவீர்களின் திருவுருவப்படங்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு ஈகச் சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டன.

பின்னர் நினைவுரைகளை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், தளபதி ராம், கவிஞர் தேனுகன், அரசியல்துறையைச் சேர்ந்த கர்த்திக், புதுக்குடியிருப்பு அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.சதாசிவம் ஆகியோர் நிகழ்த்தினர். (எ-8)

கட்டாக்காலி நாய் அழிப்பு

நெல்லியடி நகரப்பகுதி, வதிரிச் சந்தி, மாலிசந்தி, இராசகிராமம் ஆகிய பகுதிகளில் இன்று செவ்வாய்க்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டிவைத்து இந்த செயற்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கரவெட்டி பிரதேச சபை செயலாளர் சிவசுபதி கேட்டுள்ளார்.(எ-4)

வன்முறைகள் அதிகரிக்கக் காரணம் என்ன?

இன்று எந்தப் பத்திரிகையைப் படித்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் பற்றிய செய்திகளே முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. இவற்றிற்குக் காரணம் என்ன என்பது குறித்து ஆராய்கிறார் பிரபல சமூக விஞ்ஞான ஆய்வாளரான பேராசிரியர் நந்தசேன ரத்னபால. அவரது கருத்துக்களை இங்கு தருகிறோம்.

உலகின் சகல நாடுகளிலும் இன்று குற்றச்செயல்கள் அதிகரித்து வருவது சாதாரணமான நிகழ்ச்சியாகியுள்ளது. எனவே சிறிலங்காவில் இடம்பெறும் குற்றச்செயல்களை விசேடமாகக் கருதஇயலாது.

ஆயினும், ஆதிகாலம் முதற்கொண்டே இந்நாட்டில் வசித்த மக்கள அமைதியாக - சமாதானமாக வாழ்ந்து வந்துள்ளனர். இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் கூட மனிதக்கொலையென்பது நாட்டையே கலங்கவைக்கும் பெரும் சோகமயமான நிகழ்ச்சியாகவே கருதப்பட்டு வந்துள்ளது.

மத்துகம சமன்குமார என்னும் மாணவனின் கொலை, நான்கு இலட்ச ரூபாவிற்கான கொள்ளை, கதிர்காமத்தைச் சேர்ந்த அழகுராணி மனம்பேரியின் கொலை போன்றவற்றை பத்திரிகைகள் முழு நாட்டையும் சோகமயமாக்கும் வண்ணம் எடுத்துக் காட்டின. ஒவ்வொரு நகரங்களிலும் அவை சோகக கவிதைகளாகப் பாடப்பட்டன. அன்ரன் ஜோன் போன்ற பைலாப் பாடகர்கள் மூலமாகவும், ஒலி நாடாக்கள் மூலமுமான கிராமியப் பாடல்களிலும் அவை ஒப்பாரிகளாக ஒலிபரப்பாயின. பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் தமது முதல் பக்கங்களில் அதன் கொடூரத்தை விவரித்தன. வானொலிகளிலும், ஏனைய ஊடகங்களிலும் அவை அவ்வாறே இடம்பெற்றன. இவற்றைச் செவிமடுத்த எவருமே குற்றவாளிகளைச் சாதாரணமாகக் கருதவில்லை. எவரது விருப்பமும், சாபமும் குற்றவாளிகள் தகுந்த தண்டனைக்குட்படுத்தப்படவேண்டும் என்பதாகவே இருந்தது. அக்குற்றவாளிகள் தண்டனையடையும் வரையில் நாட்டின் அன்றைய ஆண்களும், பெண்களும் பொறுமையிழந்து காத்திருந்தனர்.

ஆனால், இன்று உலகம் தலைகீழாக மாறியுள்ளது. எமது அன்றைய சுதந்திரம் யாருக்கும் அடிமைப்படாத நிலை, தீங்கு விளைவிக்காத சிந்தனைகள், வாழ்த்துக்கள், அனைத்தும் இன்று மீண்டும் தோண்டி எடுக்க இயலாதவாறு காலத்தின் மண்மேடுகளால மூடப்பட்டுள்ளன. அது எமது துர்ப்பாக்கியமே.

இங்கு புதைந்துள்ள சமூக, விஞ்ஞான கோட்பாடுகளைத் தெளிவுபடுத்திப் பார்க்கும்போது, முதலில் தெரிவது நாட்டின் பொறுப்புவாய்ந்த தலைவர்கள் கொண்டுள்ள முறைகேடான மனிதப்பண்புகளாகும்.

"அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழி" என்பதற்கிணங்க நாட்டிலுள்ள பெரும் தலைவர்களின் செயற்பாடுகள் நல்லவைகளாக இருப்பின் அவர்களின் கீழ் கடமையாற்றுபவர்களின் செயற்பாடுகளும ஒருபோதும் தீயதை நோக்கிச் செல்லா. அரசன் அல்லது நிர்வாகி அதர்மவாதியாக இருப்பின் அவரை அனுசரித்துப் போகும் மந்திரிகளும் பிரதானிகளும் அவர்களைத் தொடர்ந்து அந்நாட்டின் மக்களும் அதர்மத்தையே அனுசரிப்பர். இன்று உயர்வானதாகக் கருதப்படும் அமைச்சரவையிலும் அல்லது நாடாளுமன்றத்தினுள்ளும் கூட பல விதமான கருத்து மோதல்களும், அடிதடிச் சண்டைகளும் நிகழ்கின்றன. அறிவாளிகள் இருப்பதாகக் கருதப்படும் பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் மோதல்கள் இடம்பெறுகின்றன. நாட்டில் பாதாள உலகின் செயற்பாடுகள் மற்றும் காதலில் தோல்வி கண்டமைக்காக காதலியைக் குத்திக கொலை செய்தல், ஊடகவியலாளர்கள் பல விதங்களில் தாக்கப்படுதல், அவர்களது மனைவிமாருக்கு எதிரான அச்சுறுத்தல்கள், கோஷங்கள் என்பன இடம்பெறுகின்றன. கோடீஸ்வர வர்த்தகரின் மகன் தலையில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளது அண்மைத தகவலாகும்.

இவையனைத்துக்கும் நிர்வாகச் சீர்கேடே மூலகாரணமாக உள்ளது. நிர்வாகிகள் மனச்சாட்சியோடு செயல்படுபவர்களாயின் நீதிமன்ற பொலீஸ் விவகாரங்களில் அவர்களது தலையீடு இல்லாதிருக்குமாயின் தம்மைச் சுற்றிக்கொலைகாரர்களையும் பாதாள உலகத்தினரையும் தக்க வைத்துக் கொள்வதைத் தவிர்ப்பார்களாயின் சுருங்கக்கூறின் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகள் மாத்திரம் சரிவர நிறைவேற்றப்படுமாயின் இவ்வாறான குற்றச்செயல்கள் பெருமளவில குறைய வாய்ப்புக்கள் உண்டு.

அடுத்த முக்கியமான விடயம் தனியொருவரின் பொருளாதார முயற்சியாகும். தாள் வியாபாரம் (ஹெரோயின்), கள்ளச்சாராய உற்பத்தி (கசிப்பு) போன்ற செயல்களின் அடிப்படை பணம் சம்பாதித்தலேயாகும். இன்று குற்றச் செயல்கள் மலிந்துள்ளமைக்கு இவை அனைத்தும் லஞ்சத்தால் மறைக்கப்படுவதே காரணமாகும்.

இன்று பெரும்பாலான களவுகள், வழிப்பறிகள், கொலைகள் போன்ற குற்றச்செயல்கள் சமூகத்தில் உயர் மட்டத்தில் இருப்பவர்களாலேயே நடத்தப்படுகின்றன. மிக நுட்பமான முறையில் இக்குற்றச் செயல்களை மேற்கொள்ளக்கூடிய நுண்ணறிவை அவர்கள் கொண்டுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் பொலீஸார் கொண்டிராத செயற்றிறன் மிக்க சுடுகலன்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் போன்ற சகல வசதிகளையும் அவர்கள் கொண்டுள்ளனர். சாதாரண மக்கள் மத்தியில் முன்னர் இடம்பெற்று வந்துள்ள வாழைக்குலைக்களவு, நெல் மூட்டைக்களவு போன்ற களவுகள் இன்று சமூகத்தில் கீழ்[illegible] இடம்பெறுவதில்லை. கொலையொன்று நடந்திருந்தாலும் அது எப்போதோ ஒரு முறை நடந்துள்ளதாகவே இருக்கும். சனப்பெருக்கம் காரணமாக சம்பவங்கள் அதிகரித்துள்ள போதிலும் விகிதாசாரத்தில் அதிகரிப்பு இடம்பெறவில்லை.

1964 இல் நான் "டெய்லி மிரர்" செய்தித்தாளுக்கு "பாதாள உலகம் விரைவில் உருவாகும்" என்றொரு கட்டுரையை அனுப்பியிருந்தேன். ஆயினும், அன்று யாருமே அது பற்றிக் கருத்திற்கொள்ளவில்லை. அன்றைவிட இன்று பாதாள உலகத்தினரின் நடவடிக்கைகள் மக்கள் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவது தெரிகிறது. அமெரிக்கா, பிரித்தானியா அல்லது இத்தாலியைப் போன்று பாதாள உலக செயற்பாடுகள் இங்கு இல்லை. அங்குள்ள அமைப்புக்களின் நடவடிக்கைகளை நாம் எண்ணிப் பார்க்கவும் முடியாது. இந்நாட்டில் அனேகமாக பத்துப் பன்னிரண்டு அரசியல்வாதிகளைச் சூழ்ந்துள்ள கசிப்பு முதலாளிகளும் தாள் வியாபாரிகளுமே அவ்வமைப்பில் உள்ளனர். ஆயினும், அவர்களைச் சுற்றி மேன்மேலும் சிறு அளவிலான வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள பாதாள உலகக் குழுவினர் எனக் கருதப்படும் சுமார் நூறு பேர் அளவில் இருக்கக்கூடும்.

தேர்தல் காலங்களில் தமக்கு நெருங்கிய அரசியல்வாதிகளுக்கு எவ்வகையிலாவது வாக்குகளைப் பெற்றுக்கொடுப்பதே இவர்களுக்குரிய கடமைகளாகும். அச்சந்தர்ப்பங்களில் எதிர்ப்பவர்களைத் தாக்குவது மற்றும வாக்குப்பெட்டிகளை களவாடுவது போன்ற முறையற்ற செயல்களிலேயே இவர்கள் பெரும்பாலும் ஈடுபடுகின்றனர்.

தேர்தலின் பின்னர் தமது செயற்பாடுகளைத் தடையின்றி மேற்கொள்வதற்கு தமது பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அரசியல்வாதிகளிடம் அவர்கள் கோரக்கூடும். அத்தகைய கயவர்கள், வர்த்தகர் ஒருவரின் சொத்துக்களை, பணத்தைக் கொள்ளையடித்தல் போன்றே கூலிக்குக் கொலை செய்தல் போன்ற பாதகங்களையும் மேற்கொள்கின்றனர்.

அடுத்தது, ஒருவர் சமூகத்தில் செல்வாக்குள்ள கனவானாக இருப்பின் அவருக்கு பாதகச்செயல்களுடன் நேரடித்தொடர்புகள் உள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது. கிராமத்தில் அல்லது ஒரு பிரதேசத்தில் பெரும் கனவானாக இருப்பவர் அல்லது அபேட்சகர் மற்றும் தம்மைப் பிரபலப்படுத்திக்கொள்ள விரும்பும் ஒருவர் இருப்பின், சிலவேளை பொலீஸ் அதிகாரி ஒருவர் அல்லது பெரும் அரசியல்வாதி ஒருவரோடு நெருக்க மானவராக இருப்பார். இந்நிலையில் தமக்கு அவர்களால் பாதுகாப்புக் கிடைக்கலாமென்ற நம்பிக்கையில் அவர் எத்தகைய பாதகத்தையும் மேற்கொள்ளத் தயங்கமாட்டா ரென்பதும் தெரிகிறது.

குற்றச்செயல்கள் அதிகரிப்பது குறித்து பொதுசன ஊடகங்களும் சிறிதளவிலேனும் அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிகிறது. ஊடகவியலாளர் குற்றச்செயல்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை வெளிக்கொணர்வது நல்லதுதான். ஆனால், குற்றச் செயல்களை மிகைப்படுத்திக் கூறுவது தமைப்பக்க வல்லது. நாளிந்த பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சி மற்றும் பொலீஸ் அறிவிப்புகள் மூலமாகவும் இங்கு நிகழும் கொலைகள், கொள்ளைகள் போன்றவை மக்களால் அலசி ஆராயப்படுவதால் அவை ஒரு விதத்தில் மிகச் சாதாரணமான நிகழ்வுகளாகவே மக்களால் கருதப்படுகின்றன. அதனால், கொலையொன்று இடம்பெற்றாலும் உதாரணமாக அண்மையில் கொள்ளுப்பிட்டியில் கோடீஸ்வரர் ஒருவரின் மகன் தலையில் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டதைப் போன்ற நிகழ்ச்சி யொன்று பத்திரிகையில் அல்லது வேறு ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவதால் சில தினங்களில் அச்செய்தியின் பரபரப்பு அடங்கிவிடக் கூடும். அன்று போல் இன்று இத்தகைய மிலேச்சத்தனமான செயல்களுக்குக் காரணமான குற்றவாளி நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெறுவதை ஆவலுடன் எதிர்பார்க்கும் ஒருவரைக் காணமுடிவதில்லை. எந்த நேரத்திலும் தமக்கு முன்னும் துப்பாக்கி நீட்டப்படுமென்பதை எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை. அத்தகைய பயங்கரமொன்று தமக்கு ஏற்பட்ட பின்னர் மாத்திரமே அதிலுள்ள சோகத்தை உணருகின்றனர்.

பேராசிரியர்
நந்தசேன ரத்னபால

அடுத்து, தொலைக்காட்சியில் இடம்பெற்றுவரும் "கைவிரல் அடையாளம்" போன்ற நிகழ்ச்சிகளில் மிக நுட்பமான முறையில் குற்றவாளியினால் மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்

சரா

கள் நாடகபாணியில் தத்ரூபமாகக் காட்டப்படுகின்றன. ஆயினும், குற்றவாளியின் சிறு தவறு அல்லது தாமதத்தினால் அவர் பல ஆண்டுகளின் பின்னரோ, அகப்பட்டுக்கொள்வதும் காட்டப்படுகிறது. இங்கு அதைக் கண்ணுறும் பிறிதொரு குற்றவாளி அத்தவறைச் சரிசெய்து கொள்வதன்மூலம அடுத்த கொலையையோ, கொள்ளையையோ அல்லது பெண்ணைக் கெடுப்பதையோ நுட்பமாக மேற்கொள்வதற்கான திட்டத்தை வகுக்கின்றான்.

எனவே, இவ்விடயத்தில் ஊடகவியலாளர்கள் மிகக் கவனத்துடன் எதிர்கால நன்மையைக் கருத்திற்கொண்டு தூரநோக்குடன் நுண்ணறிவைப் பயன்படுத்தி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதே சிறந்ததாகும்.

இதில் மிக முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது குற்றவாளி நீதியின முன் நிறுத்தப்பட்டதன் பின்னரான நிகழ்வாகும். சமூகத்தின் மத்தியில் அவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள், சிறையில் அவர்கள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் நிலை, பொலீஸ் நிலையங்களில் அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் போன்றவைகள் காட்டப்படுமாயின் குற்றங்கள் குறைவதற்கு அவை பெரிதும் உறுதுணையாக அமையும். அத்தகைய குற்றவாளிகளுக்கு இயற்கை வழங்கும் தண்டனையாக வேதங்களில் கூறப்பட்டுள்ள கர்ம பலன்களை அவர்கள் நேரடியாக அனுபவித்தறியும் வகையில் உண்மை நிகழ்ச்சிகளின் தொகுப்பான "கைவிரல் அடையாளம்" போன்ற நாடகங்களில் உள்ளவற்றைப் போன்ற நிகழ்ச்சிகள் காட்டப்படுமாயின் அவை மனப் பெறுமதியானவையாயும்.

ஆனால், இன்றைய தொலைக்காட்சிகளில் வன்முறைச் சம்பவங்களே அதேகமாகக் காட்டப்படுகின்றன. பயங்கரமான ஆயுதங்கள், துப்பாக்கிகள், குண்டுகளை வெடிக்கச் செய்யும் முறைகள் ஆகியவற்றிலிருந்து தப்பும் வழிகள் போன்றவைகள் வீரதீரச் செயல்களாகக் காட்டப்படுகின்றன. இவற்றைக்கண்டு களிக்கும் சிறார்களின் மனங்கள் அவற்றால் ஈர்க்கப்படுகின்றன. அவற்றின் பலாபலன்கள் காலப் போக்கில் உருப்பெறுகின்றன. அதற்கமைய புதிய பரம்பரையின் ஆரம்பத்தில் இவ்வாறான வன்முறைகள் இடம்பெறுவது ஒரு புறத்தில் புதுமையானதல்ல.

இருபது ஆண்டுகளான மிகநீண்ட காலங்களாக நாட்டில் இடம்பெற்றுள்ள போரினால் நூற்றுக்கணக்கான இளம் சிப்பாய்கள் இறந்துள்ளதும், 1988 - 1989கள் போன்ற பீதி நிறைந்த காலங்களில் பெறப்பட்டுள்ள அனுபவங்களும் மனிதக் கொலை சம்பந்தமாக மனிதர்களிடையே நிலவிய பய உணர்வு குறைந்துபோவதற்குக் காரணமாகியுள்ளன.

அது சம்பந்தமாக இன்று குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகள் எவ்விதத்திலும் போதுமானதாக இல்லை. கொலை கொண்டாலும் இன்று பிணையில் விடுதலையாவதற்கான விதி முறைகள் சட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகனை வழிபட்டு உய்திபெற வழிகாட்டும் விநாயகசஷ்டி விரதம்

விநாயகப் பெருமான் விக்கினங்களைத் தீர்ப்பவர். அடியார்களுக்கு வேண்டிய வரங்களை நல்குபவர். சைவ சமயிகளுக்கு விநாயக வழிபாடு மிக இன்றியமையாதது. ஆற்றங்கரையிலும், அரச மரநிழலிலும் அப்பெருமான் வீற்றிருப்பார். விநாயக உருவத்தை அமைக்க வேண்டுமானால் பொருள் செலவு இல்லாமல் இலகுவான முறையில் அமைத்துக்கொள்ளலாம். அவருக்கு ஐங்கரன், ஆனைமுகன், ஏகதந்தன், இலம்போதரன், கணேசர், கணபதி முதலான ஆயிரத்தெட்டு நாமங்கள் உண்டு.

விநாயகப் பெருமானின் வாகனம் யானை, பெருச்சாளி முதலியன. அடியார்களின் இன்னல்களைப் போக்கி இன்பத்தை நல்குபவர் விநாயகர். நாம் எக்காரியத்தை ஆரம்பிக்கும் போதும் முதலில் விநாயகருக்கே வழிபாடு செய்கின்றோம். ஆலயங்களிலும் முதற் பூசை விநாயகருக்கே இடம்பெறுகின்றது.

விநாயகர் ஓர் அவதாரத்தின் வல்லபையைத் திருமணஞ் செய்ததாகக் கூறப்படுகின்றது. நாம் பூசிக்கும் போது "வல்வாம்பிகாசமேத" எனக் கூறுகின்றோம். விநாயக புராணத்திலே உபாசனா காண்டத்தில் விநாயகர் பிரமதேவருடைய புத்திரிகளாகிய சித்தி, புத்தி என்னும் இருவரையும் திருமணஞ் செய்ததாகப் புராண வரலாறு கூறுகின்றது. "சித்தி, புத்தியிருபாத தேவ தேவ இலம்போதர" என்றும் போற்றுகின்றோம்.

கார்த்திகை மாதத்து அபரபக்கப் பிரதமை முதலாகப் பூர்வபக்கச் சஷ்டியீறாக இருபத்தொரு நாள்கள் விநாயகரைக் குறித்து அநுஷ்டிக்கும் விரதம் விநாயக சஷ்டியாகும். இதனைப் பற்றி விநாயகர் பெருங்கதை எனப்படும் அகவற்பாவிலே கூறப்படுவதைச் சற்று நோக்குவோம்.

"கார்த்திகைக் கார்த்திகை கழிந்த பின் னாளில்



ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கி
இருபத் தோரிழை இன்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியும் பூமியிலெழுத்தும்
ஆமிவி நாயகற் கானவெழுத்தும்
மூன்றெழுத் ததனா மொழிந்த மஞ்திரமும்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசாரத்தால்
வரைமகள் மதலையை வழிபா டாற்றி" என்று செப்புகின்றது.

இருபது நாளும் ஒரு பொழுது உணவு அருந்தி இருபத்தோராம் நாள் உபவாசம் இருந்து விநாயகப் பெருமானது ஆலயத்திலே அப்பெருமானுக்குத் தூபதீபங்காட்டி அப்பம், எள்ளுருண்டை, மோதகம், அவல், கரும்பு, பழவர்க்கங்கள் முதலாகச் சொல்லப்பட்ட நைவேதனப் பொருளகளைப் படைத்து நைவேதனம் செய்து 'பெருங்கதை' எனப்படும் அகவற்பாக்களைப் பக்தியோடு படித்தல் வேண்டும்.

இவ்வாறு விசேட ஆராதனை, வழிபாடுகள் செய்து விரதம் அநுட்டிப்போமானால் நாம் வேண்டிய வரங்களை விநாயகப் பொருமான் நல்குவார் என்பது திண்ணம்.

முற்காலத்தில் தேவர்கள், முனிவர்கள் முதலானோர் இவ்விநாயக விரதத்தை அநுட்டித்துத் தாம் வேண்டிய வரங்களைப் பெற்றதாக வரலாறு கூறுகின்றது. இன்றும் கணேசப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயங்கள் தோறும் 'பெருங்கதை' படிக்கப்பட்டு விநாயக விரதம் அநுட்டிக்கப்படுகின்றது.

தெல்லிமாநகர்
சிவஸ்ரீ சிவகடாக்ஷ
கணேசலிங்கக் குருக்கள்

நாமெல்லாம் ஐங்கரப்பெருமானின் இவ்விரதத்தைப் பக்தி சிரத்தையோடு நேற்று அப்பொருமானின் கருணையைப் பெறுவோமாக. கீழ்வரும் பாடல் இதனை உறுதி செய்கின்றது.

'வெள்ளை யெருதேறும்
விசிசடையோன்
பெற்றெடுத்த பிள்ளையார்
நோன்பின் பெருங்கதையை -
உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வர் நோலா
தருகிருந்து கேட்டார்க்கும் வாராது
கேடு"

களை பிடுங்கும் தொழிலாளருக்கு பற்றாக்குறை

நவாலி,டிசெ.9

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள நெல்வயல்களில் களை பிடுங்குவதற்கு கூலி ஆள்களுக்கு பலத்த பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. (எ-100)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.9

நெல்லியடிப் பகுதியில் ஆட்கொல்லி நோயான டெங்குவைப் பரப்பும் 'எயிடிஸ் இயிப்ரை' இன நுளம்புகளின் குடம்பிகள் இனங்காணப்பட்டு அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த மாதம் முப்பத்தியாறு இடங்களில் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. சம்பந்தப்பட்டவர்களுக்கு இவை பற்றிய தெளிவான விளக்கம் அப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகரால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 10 - 05 - 1933

மறைவு 21 - 11 - 2002

அமரர் **சின்னத்தம்பி துரைராசா**
(கிருஷ்ணபிள்ளை - கனடா)

இப்பொழுதுதானே எம்முடன் கதைத்தீர்கள்
அதற்குள் எப்படி ஆவி பிரிந்தது?
ஆண்டு ஒன்றல்ல அப்பா
ஆருயிர் உள்ளவரை நினைவுகள் தொடரும்.

(25578) (25-21-12)

"சரஸ்வதி இல்லம்" - குடும்பத்தினர்,
மீசாலை கிழக்கு, மீசாலை. "கனகம்மா இல்லம்"கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி பரமநாதன் சாந்தநாயகி

பிறப்பு 14.09.1959 — இறப்பு 10.12.1992

பதினொரு ஆண்டுகள் பறந்தோடி விட்டன – ஆனால்
பசுமை நினைவுகள் மனதை வாட்டுகின்றனவே!
கதியேதுமின்றி நாம் கலங்கியே தவிக்கின்றோம்!
கண்ணீரும் வற்றித் துடியாய்த் துடிக்கின்றோம்
விதிசெய்த சதியினால் மதியயங்கிப் போயிற்றே
திருமுகத்தை எமக்கு ஒருமுறை காட்டாயோ!
நிதியிருந்தென்ன இன்று நீயில்லாத எமது இல்லம்
ஒளியிழந்து போயிற்றே பெறுக நீ சாந்தி!

- அன்புக் கணவர்:- **பரமநாதன்,**
பிள்ளைகள்:- **பத்மஸ்ரீ, நந்தஸ்ரீ, புவனஸ்ரீ (லண்டன்).**

தற்போதைய முகவரி:
50. கண்டி வீதி, சாவகச்சேரி.
நிரந்தர முகவரி:
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(சி-31787) (25-21-12)

உயர் கணக்கீடு
புதிய பதிப்புகள்

குமாரசாமி கலைச்செல்வன்

நூல் 1. கணக்கீட்டுக்கோர் அறிமுகம்
நூல் 2. பெறுமானத்தேய்வு, சொத்து முடிவுறுத்துதல், வழக்கனைத் திருத்துதல், உற்பத்திக் கணக்கீடு.
நூல் 5. பங்குடமைக் கணக்கீடு.
நூல் 6. கம்பனிக் கணக்கீடு.

V.K.V. PUBLICATIONS
6, Collingwood Place, Col - 06. 2505816, 2582570
யாழ்.முகவர்:- லங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி.

(C31788)(24-21-12)

எம்மிடம்

2004 புதிய வருடத்திற்கான

வண்ணப்படக் கலண்டர்கள், பெங்கண்டாதீபம் அஷ்டலஷ்மி நாட்காட்டி, இரகுநாதையர் பஞ்சாங்க மாதக்கலண்டர், மனேஜ்மென்ற் டயறிகள், சாதாரண டயறிகள், திருக்கணித டயறிகள் மற்றும் நீங்கள் விரும்பும் வகையில் அப்பியாசப் புத்தகங்கள் மலிவான விலையிலும், செயல்நூல்கள், பயிற்சிகள், கடந்தகால வினாவிடைகள் O/L, A/L வினா விடைகள் யாவருக்கும் 10% கழிவும் சகல புத்தகங்களுக்கும் வழங்கப்படும்.
இச்சலுகை 2004 ஜனவரி 31 வரை.
நூல் நிலையங்கள், பாடசாலைகள், வியாபாரிகளுக்கு விசேட கழிவு.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 2573

விற்பனையாளர்கள் தேவை

கல்வித் தகைமை: நல்லொழுக்கம் பேணப்படும்.
ஆண்கள் மட்டும்.
2 K.m. தூரத்தில் வசிப்பவராயின் விரும்பத்தக்கது.

(C31791)(34)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அரசடி வீதி, வடலியடைப்பை வதிவிடமாகக் கொண்டவரும் வடமராந்திய போக்குவரத்துச்சபை சிரேஷ்டசாலைப் பரிசோதகரும், தேசிய வழிபார் சங்க உபதலைவரும், சிவசேனா தனசமூக நிலைய முன்னாள் தலைவரும் சிறந்த சமூகசேவையாளருமாகிய

திரு.செல்வரத்தினம் செல்வராசா

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளமையைட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை மேலும் சிறப்புற இறைவனை வேண்டுகின்றோம்.

திரு.கி.அருமைத்துரை (பொருளாளர்).
சிரேஷ்டசாலைப் பரிசோதகர் (மருத்திக்துறை)
ஆடிப்பிள்ளையார் பரிபாலனசபை. மகாத்மா சனசமூக நிலையம்.
நிர்வாகசபை. ஆசிரியை. மகாத்மா பாலர் பாடசாலை.

மகாத்மா வீதி.
அல்வாய் வடக்கு. அல்வாய.
(34-21-12-18)
(25576)

கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் **சோ.கார்த்திக்** (இந்துநாகரிகம், சமூகவியல்)
அவர்களின்அன்புத் தாயார்
திருமதி சோதிலிங்கம் தங்கரத்தினம்
அவர்களின் மறைவைவிட்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
கலைப்பீடம், முதலாம் வருட மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(25581) (14-21-12-18)

சிவமயம்

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்புடையீர்!
நிகழும் சுபானு வருடம் 10.11.2003 திங்கட்கிழமை சிவபதமெய்திய எமது குடும்ப பிதா
அமரர் **நாகரத்தினம் கணேசன்** (விக்னேஸ்)
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.12.2003) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளைமறுதினம் (11.12.2003) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்திய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரையும் இவ்வைபவத்திற்கு தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி. மக்கள். மருமக்கள்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(25575)(34-21-12-)

மரண அறிவித்தல்

கந்தையா சந்திரசேகரம்

முளாயைப் பிறப்பிடமாகவும் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சந்திரசேகரம் நேற்று (08.12.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சுமணா (ஆசிரியை, எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை), முரளிதரன் (சாவகச்சேரி பிரதேசசபை), யமுனா (இறுதி வருடம் கலைப்பிரிவு, யாழ். பல்கலைக் கழகம்), செந்தூரன் (பணியாளர், கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம்), கல்பனா (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
- குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி:
கண்டுவில் ஒழுங்கை,
டச்சு வீதி, சாவகச்சேரி.

நிரந்தர முகவரி:
இல.114, ப.ம.திட்டம்,
மிருசுவில்.

(25574)(34-12-21-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதாகிக் காணாமற் போனோர் தொடர்பான வழக்குகளில் அரச தரப்புக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம்,டிசெ.9

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான வழக்குகளில் அரச தரப பினருக்கு அழைப்பாணை அனுப்பி வைக்குமாறு யாழ். மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குடாநாட்டில் 1996 - 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால கைது செய்யப்பட்டுக் காணாமற்போனவர்களில் மைக்கல் பேர்னாட் ஜோன்சன் (கொய்யாத்தோட்டம்), அன்ரனி அனிஸ்ரன் (பாசையூர்), கணேஷ்ரமேஸ் (நாவற்குழி), தர்மலிங்கம் சுகிந்தராஜன் (நாவற்குழி), சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (நாவற்குழி), இராமநாதன் அன்னலிங்கம் (நாவற்குழி), கோபாலசிங்கம் அம்பிகைபாகன் (நாவற்குழி), ஆரோக்கியநாதன் அன்ரன் பெனடிக் (நாவற்குழி), பூபாலசிங்கம் ஜெயலலிதா (மறவன்புலோ), சின்னமணி இராசமணி (மட்டுவில் தெற்கு) ஆகிய பத்துப்பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த வெள்ளியன்று யாழ். மேல் நீதிமன்றில் நடைபெற்றன.

விசாரணைகளின்போது அரச தரப்பில் இராணுவ சட்டத்தரணி கப்டன் குறூப்பு, சுகந்தி கந்தசாமி ஆகியோரும், மனுதாரர்கள் சார்பாக மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் சட்டத்தரணி எம்றெமீடியஸும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

ஆரோக்கியநாதன் அன்ரன் பெனடிக், பூபாலசிங்கம் ஜெயலலிதா, சின்னமனி இராசமணி ஆகியோர் தொடர்பான வழக்குகளில் அழைப்பாணையை எதிராளிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும், அக்காலப்பகுதியில் கைதடிப் பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரியாக இருந்த கப்டன் டுமிந்த, பலாலி படைத்தள கட்டளை அதிகாரி இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் ஆகியோருக்குத் தனித்தனியாக அனுப்பிவைக்குமாறும் -

மைக்கல் பேனார்ட் ஜோன்சன், அன்ரனி அனிஸ்ரன் ஆகியோர் தொடர்பாக அரச தரப்பினர் தமது ஆட்சேபனைகளை எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதிக்கு முன்னர் மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டதுடன், வழக்கு விசாரணைகளை அதேதினத்திற்கு ஒத்தி வைத்தார்.

கணேஷ், ரமேஸ், தர்மலிங்கம், சுகந்தராஜன், சிதம்பரப்பிள்ளை, பேரின்பநாதன், இராமநாதன், அன்னலிங்கம், கோபாலசிங்கம் அம்பிகைபாகன் ஆகியோர் தொடர்பான மனுக்களில் சில திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அத்திருத்தங்களை மேற்கொண்டு எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதி அவற்றை மீண்டும் மன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ். மேல்நீதிமன்ற நீதிவான் கேபி. வரதராசா உத்தரவிட்டார். (ம-5)

வீடமைப்புக்கு உதவி

கைதடி,டிசெ.9

கைதடி கிழக்கு ஜே/289 கிராம அலுவலர் பிரிவில் ஏ.9 தரைப்பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக் குடியமர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 19 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் வீடுகள் அமைப்பதற்கென மரங்கள், சீற் என்பனவற்றை அப்பகுதி கிராம அலுவலரிடம் வழங்கியுள்ளது. (எ-75)

நீர் வழங்கல் சபையின் அலுவலகம் விரைவில் பொக்கணைக்கு இடம்மாறும்

நல்லூர் - நாயன்மார் வீதியில் இயங்கிவரும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடமாகாண அலுவலகம் கண்ணாகம் - பொக்கணைப் பகுதிக்கு இடம்மாற்றப்படவுள்ளது.

இதுகுறித்து மேற்படி சபையின் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

கடந்த காலத்தில் குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையை அடுத்து நல்லூர் - நாயன்மார் வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இந்த அலுவலகம் இயங்கிவருகிறது.

எதிர்காலத்தில் மேற்படி சபையினால் குடாநாட்டில பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளோம் எனினும் இத்தகைய திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஏற்ற வசதிகள் தற்போதைய அலுவலகத்தில் இல்லை. இதனையடுத்தே அலுவலகத்தை பொக்கணைப் பகுதிக்கு இடம்மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

புதிய அலுவலகத்தை நிறுவுவதற்கான ஆரம்ப வேலைகளுக்கென 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது அதன் ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அலுவலகத்தை அமைப்பதற்கென ஒப்பந்த அடிப்படையில் ஓர் ஏக்கர் நிலத்தை யாழ். மாவட்ட அரச அதிபர் பெற்றுத்தந்துள்ளார்.

அலுவலகம் பொக்கணைப் பகுதியில் செயற்படத் தொடங்கியதும் குடாநாட்டில் மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களுக்கும் எமது சேவைகள் விஸ்தரிக்கப்படும்.

தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் பொருள்களைக் களஞ்சியப்படுத்துவதற்கும், தேவையான நீர்ப் பரிசோதனை மேற்கொள்வதற்கும் புதிய அலுவலகம் உதவியாக இருக்கும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-6-10)

கடல்வள ஆசிரியர் கலந்துரையாடல்

பாடசாலைகளில் தரம் 10, 11 வகுப்புக்களில் கடல் உயிரினவளத் தொழில் நுட்பப் பாடத்தினை கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சகல மாவட்டங்களிலும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கடல்வள பாடநெறி இணைப்பாளர் கேட்டுள்ளார். (எ-5)

தமிழர் பிரச்சினையை மையமாக வைத்தே தென்னிலங்கையில் அதிகாரப் போட்டி

லண்டனில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரையின் இறுதிப்பகுதி இங்கு பிரசுரமாகிறது.

நாங்கள் யோசித்தோம். பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டு விட்டன. ஒரு நிரந்தரத் தீர்வு வருவது என்று சொன்னால், ஒரு பலமான புதிய அரசு அருகே இருக்கவேண்டும். இந்த அரசமைப்பு தூக்கி எறியப்படவேண்டும். இந்த அரசமைப்பினுள் தீர்வு காண முடியாது. அது சிங்கள மொழியை, சிங்கள மதத்தை, சிங்களப் பெரும்பான்மை ஆட்சியைத்தான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. அப்படியானால், புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும். அது ரணிலாலும் முடியாது; அம்மாவாலும் முடியாது. ஏனெனில், இந்த அரசமைப்பில் உள்ள அதிகாரங்கள் அம்மாவுக்கு வேணும். இதில் பயங்கரமான அதிகாரங்கள் இருக்கின்றன. ஆகவே, அரசமைப்பை மாற்ற அம்மா தயாரில்லை. ரணில் ஐயாவுக்கும் இந்த அரசமைப்பை மாற்ற விருப்பமில்லை.

அவருடைய திட்டம் என்னவென்றால், இன்னும் இரண்டு வருடங்களில் தான் ஜனாதிபதியாக வருவது. ஆகவே, அந்த நோக்கத்தில் இந்த அரசமைப்பு மூலம் தனக்குக் கிடைக்கும் நிறைவேற்று அதிகாரங்களை வைத்திருக்கவேண்டும். ஆகவே, அவருக்கும் அரசமைப்பை மாற்றும் நோக்கம் இல்லை. அப்படியானால் எப்படி நிரந்தரத் தீர்வு வரும்? இதை நாங்கள் எல்லாம் வெளிநாடுகளுக்கு சொல்கிறோம்.

அதாவது, இந்தச் சிங்கள ஆளும் வர்க்கம் - சிங்கள அரசியல் கட்சிகள் - அரசமைப்பைத் தலைகீழாக மாற்றித் தமிழ் மக்களுக்குப் பூரண சுயாட்சி கொடுக்கும் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கத் தயாராக இல்லை. இலங்கையின் அரசமைப்பை மாற்ற அவை தயாராக இல்லை.

இந்நிலைமை வெளிநாடுகளுக்கு ஓரளவு தெரியும். இதன் அடிப்படையில்தான் நாங்கள் ஓர் இடைக்கால ஆட்சியையாவது எடுப்போம் என்று நினைத்தோம். வேறு வழி இல்லை. ஏனெனில், எமது மக்களும் களைத்துப் போய்விட்டனர். 20 வருட யுத்தத்தில் எமது மக்கள் பட்ட துன்பங்களை நான் விளங்கப்படுத்தத் தேவையில்லை. உங்களில் அநேகமானவர்கள் யாழ்ப்பாணம், வன்னி எல்லாம் போய் அப்பகுதி அழிவுகளைப் பார்த்திருப்பீர்கள்.

ஆகவே, ஒரு சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்தி - எமது மக்களின் வாழ்வை வளம்பெறச் செய்து ஒரு நீதியான, நியாயமான தீர்வை தேடிப் பார்ப்போம். சமாதான வழியில் முயற்சித்துப் பார்ப்போம் என்று உண்மையாக - நேர்மையாக - இந்த முயற்சிகளை முன்னெடுக்கிறோம். இதை அடிக்கடி வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், இராஜதந்திரிகளுக்கும் சொல்கின்றோம். ஆனால், அதிலும் சந்தேகம், சமீபத்தில் கிறிஸ் பெட்டன், தலைவர் பிரபாகரனைச் சந்தித்த போது, நாங்கள் சமாதானத்தில் உறுதியாக உள்ளோம் என்று தலைவர் ஆறு தடவைகள் திரும்பத் திரும்பக் கூறியிருக்கிறார். ஆறு தடவைகள் அல்ல நூறு தடவைகளும் நாங்கள் சொல்லத் தயார். உண்மையாக - நேர்மையாக - நாங்கள் நிற்கிறோம்.

எமது மக்களின் சமூக, பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதற்கான புறநிலையையாவது அமைத்துக் கொடுப்போம் என்று நாம் எண்ணியுள்ளோம். அதற்காகத்தான் உலக நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி இடைக்கால நிர்வாகத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவை சமர்ப்பித்துள்ளோம்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை இலங்கை அரசமைப்புக்குள் அடக்க முடியாது. அரசமைப்புக்கு வெளியேதான் அது நிற்கும். இந்த வரைவில் கேட்கப்பட்டுள்ள நியாயமான அதிகாரங்கள் இல்லாமல் வடக்கு - கிழக்கில் ஒரு நிர்வாகத்தைச் செய்ய முடியாது. ஏற்கனவே, எமக்குத் தன்னாட்சி அதிகாரசபை உண்டு. வடக்கு - கிழக்கில் பெரும் பகுதியான நிலப்பரப்பில் ஏற்கனவே, எமது ஆட்சி நடக்கிறது. அங்கு எமக்கு ஒரு நிர்வாகம் உண்டு. பொலீஸ், இராணுவம் என்பனவும் எம்மிடம் உண்டு. சிறந்த நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்ட தன்னாட்சி ஒன்று அங்கே நடந்து கொண்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் சேர்ந்து வாழக்கூடிய முறையில் - புலிகளின் கையில் அந்தப் பிரதேச அதிகாரம் இருக்கக்கூடிய வகையில் இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரத் திட்டத்தை நாம் முன்வைத்துள்ளோம். இது ஒரு வரைவுதான். இது இறுதியானதும் உறுதியானதுமான திட்டம் அல்ல. இதே மேசையில் வைத்து பேசத்தான் கேட்கிறோம். ஆனால், சிங்கள இனவாதக் கட்சிகள் இதனைத் தனிநாட்டுக்கான படிக்கல் என்று கூறி நிராகரிக்கின்றன. இந்தியாவும் இருந்தும் எமது வரைவுக்குப் பலத்த எதிர்ப்பு வருவது முக்கியமான விடயமாகும்.

சமீபத்தில் கொழும்பில் கதிர்காமர், புலிகளுக்கு எதிரானவர்களைக் கூட்டி நடத்திய மாநாட்டில் இந்திய முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் இராஜ்கோத்ராவும் பங்குபற்றினார். அவர் புலிகளுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்துள்ளாராம். 'புலிகள் இந்திய மீனவர்களைக் கைதுசெய்கிறார்கள்.



இப்படிச் செய்து இந்தியாவுக்கு ஆத்திரமூட்ட வேண்டாம்' - என்று அவர் கூறியுள்ளார்.

இந்திய மீனவர்களைப் பிடிப்பது எமது தொழில் அல்ல. இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் வருகிறார்கள். எமது மீனவரின் கடல் வளங்களை அள்ளிக்கொண்டு போகிறார்கள். சில சமயங்களில் மீன்வலையையும் வெட்டிப்போட்டுப் போகிறார்கள். இவர்களால் பெரிய தொந்தரவு. அப்படி இருக்கும் போது, எமது மீனவர்கள் - இவர்களைக் கைது செய்து கொண்டு வந்து எம்மிடம் கையளிக்கிறார்கள். நாங்கள் இவர்களை இலங்கை அரசிடம் ஒப்படைத்து விடுவிக்கிறோம். நாங்கள் போய் இந்திய மீனவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கவில்லை. இவர்களைக் கைது செய்து கொண்டு வரவுமில்லை. அப்படியிருக்கும் போது இராஜ்கோத்ரா இப்படி ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்.

நான் பேசுவதை அறிந்து புலனாய்வுத்துறை அதிகாரிகள் இங்கு வந்து எனது பேச்சை ஒலிப்பதிவு செய்கிறார்கள் என்பது எமக்குத் தெரியும். அவர்கள் மூலமாக நான்கூறும் செய்திகள் இந்திய அரசுக்கு போய்ச் சேருவது மிகவும் நல்லது. புலிகள் என்ன நினைக்கிறார்கள் என்பதை இந்தியா உணரவேண்டும்.

காலங்காலமாக இந்தியாவைப் பகைத்து, இந்தியாவுக்கு விரோத சக்திகளாக இருந்த சிங்கள கட்சிகளும், சிங்கள இனவாதக் கட்சிகளும் தற்பொழுது இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்டுகின்றன. இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள் ஏன்? மீண்டும் இந்த இனப்பிரச்சினையில் இந்தியாவைத் தலையிட வைத்து இந்தியாவையும், புலிகளையும் முரண்படவைத்து இந்திய இராணுவ தலையீட்டிற்கான ஒரு சூழ்நிலையை மீண்டும் உருவாக்கத்தான் சிங்கள சக்திகள் விரும்புகின்றன. ஆகவே, இப்படியான தூண்டுதலால் ஏவப்பட்டு இந்திய அரசு மீண்டும் ஈழத் தமிழ் மக்களை பகைத்துக் கொள்ளக் கூடாது.

போர் நிறுத்தத்தால் எமது மக்களுக்கு இன்னமும் இயல்பு நிலை திரும்பவில்லை. உண்மையான அமைதி நிலையும் தோன்றவில்லை. சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புத் தொடர்கிறது. இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினையும் தீரவில்லை என்பதைத் தலைவர் தனதுரையில் கூறியுள்ளார்.போர் நிறுத்தத்தைக் கடுமையாக விமர்சித்தாலும் போர் நிறுத்தத்தை உறுதியாக, இறுக்கமாகப் பேணி வருவதில் தலைவர் அதிக சிரத்தை காட்டி வருகிறார். பேச்சுக்கு நாங்கள் போகத் தயார். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த திட்டத்தை சமர்ப்பித்துள்ளோம். இந்தத் திட்டத்தை அடிப்படையாக வைத்து சிங்கள அரசு பேச்சு நடத்த முன்வந்தால் நாங்கள் அதற்குத் தயார். ஆனால், யாருடன் பேசுவது? அரசு எங்கே இருக்கிறது? சிங்கள அதிகாரமையம் இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது. அம்மாவும், ஐயாவும் இழுபறிப்படுகினம்!

நேற்றும் அம்மாவும், ஐயாவும் பேசியுள்ளனர். ஆனால், ஒரு சமரசமும் ஏற்படவில்லை. அப்படி இருக்கும போது நாங்கள் யாருடன் பேசுவது. பேச்சு நடத்துவது என்றால் எமக்கு இரண்டு முக்கிய அம்சங்கள் வேண்டும்.

சிங்களப் பெரும்பான்மை மக்களால் மனுப்பெற்ற ஓர் அரசுடன் பேசுவது ஒன்று. அந்த அரசுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்பது அடுத்தது. இவை இரண்டும் அல்லாத குழப்பநிலை தற்போது நிலவுகிறது. ஏன் இந்தக் குழப்பநிலை வந்தது? தமிழர் பிரச்சினையை மையமாக வைத்தே இந்த இழுபறி அதிகாரப் போட்டி நடக்கிறது.

இதனை "வரலாற்று நாடகம்" என்றே தலைவர் கூறுகிறார்.

தந்தை செல்வா காலத்தில் இருந்து தம்பி பிரபா காலம் வரைக்கும் பேசினோம். ஐம்பது ஆண்டுகளாக மாறி மாறி இதே நாடகம். ஆட்சியில் இருக்கும் கட்சி தமிழருக்கு ஏதாவது தீர்வைக் கொண்டுவரலாம் என்று முயற்சிக்கும். உடனே எதிர்க்கட்சி அதை எதிர்த்து அத்தீர்வை முறியடிக்கும். எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக வரும போது தமிழருக்கு ஏதாவது கொடுக்க முன்வரும். ஆனால், அதனை முன்னைய ஆளுங்கட்சி எதிர்க்கும் இப்படி பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் இருந்து இன்றுவரைக்கும் காலம் காலமாக ஒரே நாடகம், ஒரே கதைப் பொருள். ஐம்பது ஆண்டுகளாக இதனைப் பார்த்துவிட்டோம். இனிமேல் இதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? எவ்வளவு காலத்துக்கு இந்தப் பேச்சு என்று மக்கள் கேட்கின்றார்கள்.

எவ்வளவு காலத்துக்கு பேச்சு நீடிக்கும் என்பதே மக்களின் கேள்வி. பிரபாகரனுக்கும் வயது போகிறது. பாலசிங்கமும் கிழண்டிப் போகிறார். இதனால், எவ்வளவு காலத்துக்கு எமது பிரச்சினையை இழுத்துக் கொண்டு போவது?

சிங்கள ஆளுங்கட்சிகளுக்கும் தலைவர் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இனிமேல் நாங்கள் பொறுக்க மாட்டோம். தமிழர் தேசிய பிரச்சினை தீராமல், தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்த இறுதியான முடிவுக்கு எமது மக்களைத் தயவுசெய்து தள்ள வேண்டாம் என்றும் தலைவர் கூறியுள்ளார்.

அருமையான செய்தி இது. ஆனால் சிங்கள மரமண்டையில் ஏறுமோ? - என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்கடலில் மலர்ந்த மானுடம்....!

சூடாக்கடலில் பாரிய ஆழ்கடல் மீன் ஒன்று மீனவர்களால் பிடிக்கப்பட்டு பெருமளவு மக்கள் அதைப் பார்வையிட்ட ஒரு புதுமையான செய்தி அண்மையில் உதயனில் புகைப்படத்துடன் வெளிவந்திருந்தது. ஓர் ஆபத்தான உயிரினம் என்ற அச்சம் காரணமாகவே மீனவர்கள் அதனை அழிக்கவேண்டி ஏற்பட்டது என்பதுவும் உண்மை. ஆனால், அதுவோ ஆழ்கடலில் சுழியோடிகளின் தோழனாக விளங்கும் ஓர் அமைதியான பிராணி என்பது அப்பாலே புரிந்தபோது நெஞ்சில் ஓர் நெருடல். இந்த வேளையிலே அண்மையில் ஒரு சர்வதேச சஞ்சிகையில் வெளிவந்திருந்த ஓர் ஆக்கம் என்னை மிகவும் கவர்ந்திருந்தது. அதனை இப்போது பகிர்ந்து கொள்வோம்.

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு ஒகஸ்ட் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை விடிகாலை நேரம். ஆஸ்திரேலியாவின் Gold Coast கடற்கரையிலிருந்து சில மைல்கள் தொலைவில ஆழ்கடலில் அவ்வப்போது நீர்ச்சிதறல்கள் தென்பட்டன. தெற்கே குளிர் நிறைந்த அந்தாட்டிக் சமுத்திரத்திலிருந்து நீண்ட தூரம் பயணித்து இரை தேடிக் கொண்டிருந்தது ஒரு Humpback திமிங்கிலம். தனக்கு நேரப் போகும் ஆபத்தை புரியாமல் நிதானமாக நீந்திக்கொண்டிருந்தது. சற்றுத் தொலைவில் நீண்ட கவசம் போல நைலோன் வலை சங்கிலிகள், நங்கூரங்கள் கொண்டு கடலின் அடியில் நிலைப்படுத்தப்பட்டு ஏறத்தாழ 600மீற்றர் தூரம் விரிக்கப்பட்டிருந்தது. சுறா மீன்களுக்காக விரிக்கப்பட்டிருந்த அந்த வலையில் இந்தத் திமிங்கிலம் மோதியது. தனது பாதையில் எதிர்ப்பட்ட இந்தப் புதிய தடையை எப்படித் தவிர்ப்பது எனப்புரியாமல் தடுமாறியது காரணம் இவ்வகைத் திமிங்கிலங்களால் பின்னோக்கி நீந்த இயலாது. இதனால், வேறு மார்க்கமின்றி அந்த இராட்சதவிலங்கு முழு மூச்சாக முன்னோக்கி நகரத் தொடங்கியது. இந்தப் போராட்டத்தில் 186 மீற்றர் நீளமான வலை திமிங்கிலத்தின் பாரிய உடலைப் பற்றிக்கொண்டது. குழப்பமும், கோபமும் கொண்ட திமிங்கிலத்தின் முயற்சிகள் அதற்கு இன்னும் சிக்கல்களை உண்டாக்கி தலை, வால், செட்டைகள் உட்பட உடலின் பல பாகங்களையும் வலை இறுக்கிற்று. சுமார் 100 கிலோகிராம் பாரமான இரும்புச்சங்கிலிகளும் 18கிலோகிராம பாரமான நங்கூரங்களும் பெருமளவு நைலோன் வலையும் ஏற்படுத்திய சுமை திமிங்கிலத்திற்கு நீந்தவும், சுவாசிக்கவும் பெரும் சிரமத்தைக் கொடுத்தன. எதேச்சையாக இதை அவதானித்த மீனவர்கள் உடனடியாக 'கடல் உலகம்' (Sea world) அமைப்பின் கடல் விஞ்ஞானத்துறை பணிப்பாளர் திரு. ரொவ்லோங்கிற்கு அறிவித்தனர். விடயமறிந்ததும் உடனடியாக செயலில் இறங்கினார் அந்த 51 வயது இளைஞன் தனது சகாக்கள் இருவரை அழைத்துக்கொண்டு தனது காற்றடைக்கப்பட்ட மோட்டார் மிதவைப்படகில் புறப்பட்டார். செய்யவேண்டிய செயல மிகவும் ஆபத்தானது என்பது தெரிந்தும் எப்படியும் திமிங்கிலத்தை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்துடனும் நெஞ்சுரத்துடனும் மூவரும் புறப்பட்டனர். லோங்கிற்கு இது புது அனுபவமல்ல. கடலும் கடலின் உயிர்களும் அவரின் வாழ்வின் ஆதாரங்கள். எணணம், செயல் யாவற்றையும் அவர்தன மறுவாழ்வுக்காகவே அர்ப்பணித்தவர். சற்று நேர பயணத்தின் பின் தேடப்பட்ட திமிங்கிலம் தென்பட்டது. கடும் காற்றால் கடல் அலைகள் முழு ஆக்ரோஷத்துடன் ஆர்ப்பரித்தன. கொட்டும் மழையால் சூழலை தெளிவாக அவதானிக்க முடியவில்லை. இருந்தும் கையில் நீண்ட கூரிய கொளுக்கி போன்ற கத்திகளுடன் திமிங்கிலத்தின தலைப்பகுதியை நோக்கி தங்கள் படகை செலுத்தினார்கள். ஆனால் இயற்கை அவர்களை அரவணைக்கவில்லை. ஒரு பேரலை அவர்களின் படகை பல மீற்றர்களுக்கு அப்பால் தள்ளியது. மீண்டும் முயன்றார்கள். இம்முறை ஒரு பேரலை இவர்களைத் திமிங்கிலத்தின் வாலின் அருகே இழுத்துச் சென்றது. அப்பிரமாண்ட வாலில் மோதாமல் மயிரிழையில் உயிர் தப்பினார்கள். இருப்பினும் ஓரளவு வலைகளை வெட்டி அகற்றினார்கள். இருந்தும் கடுமையான வானிலை அவர்களின் பணியைத் தொட இடம் கொடுக்கவில்லை. இதனால், பெரும் மனச்சுமையுடன் லோங்கும் அவரது சகாக்களும் கரை திரும்பினர். காரணம திமிங்கிலத்தைக் காப்பாற்றுவதற்காகத் தனது சகாக்களை பலிகொடுக்க லோங் விரும்பவில்லை. இருந்தாலும் திமிங்கிலத்தைத் தத்தளிக்க விடுவதற்கும் மனமில்லாமல்,அரை மனதுடன் கரை திரும்பினர்.

அன்றைய இரவு லோங்கிற்கு ஒரு நீண்ட இரவாக இருந்தது. தன்னால் காப்பாற்ற முடியாமல் போன அந்த திமிங்கிலம் இப்போது எப்படியிருக்குமோ என்ற ஏக்கம் உள்ளத்தை உருக்கியது. சில மாதங்களின் முன இதேபோல் ஒருதிமிங்கிலக் குட்டி வலையில் சிக்கி, மீட்பு முயற்சி பயனளிக்காமல் இறந்துபோனது. எனவே, இதனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உறுதியாய் மனதில் எழுந்தது. ஆனால், அடுத்தடுத்த நாள்களில் அந்தத்திமிங்கிலம் பற்றி தகவல் ஏதும் கிடைக்காத படசத்தில், அது மரணித்துவிட்டது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் லோங். ஆனால், இறைவனின் எண்ணம் வேறு மாதிரியிருந்தது. நான்கு நாள்கள் கடந்தபின் வியாழக்கிழமை மதியம் லோங்கிற்கு ஒரு தகவல் கிடைத்தது. அவரால் நம்பவே முடியவில்லை. ஆம், இவர்களின் இருப்பிடத்திலிருந்து 72 கடல்மைல் தெற்கே அந்தத் திமிங்கிலம் தென்படுவதாகத் தகவல் தெரிவித்தது. அந்த உயிரினத்தின் விடா முயற்சியும், நம்பிக்கையும் லோங்கிற்கு புதிய நம்பிக்கையை ஊட்டின.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது என்ற முடிவுடன் உடனடியாகத் தெற்கு நோக்கிப்புறப்பட்டார். அவருடன் அவரது 'கடல் உலகம்' (Sea World) அமைப்பினைச் சேர்ந்த Briam Dermody, Che Mc Guinness ஆகிய இரண்டு சுழியோடிகளும் இணைந்துகொண்டனர். Dermody ஒரு முன்னாள் கடற்படைக் கண்ணியகற்றும் பிரிவு வீரர். நாற்பது வயதான இவர் இப்போது கடல் உயிரினங்களைக் காப்பதையே கடமையாகக் கொண்டுள்ளார். Mc Guinness சர்வதேச ரீதியில் பணியாற்றும் 29 வயது இளம் சுழியோடி. மூவரிடமும் நிறைந்த மனஉறுதியும், கடமை உணர்வும் நம்பிக்கையும் நிறைந்திருந்தன.

லோங்கும் அவரது சகாக்களும் நியு சவுத் வேல்ஸின் ஈவான்ஸ் கடற்கரையை அடைந்தபோது இருள் பரவத் தொடங்கியிருந்தது. ஆஸ்திரேலியாவின் குளிர்நிறைந்த தெற்குக் கடலில் இரவு வேளையில் இறங்குவது குமுறும் எரிமலையுள் இறங்குவதை ஒத்தது என்பது லோங்கிற்கு நன்றாகத் தெரியும். இதனால், அவர்கள் விடியும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அந்த நீண்ட இரவில் லோங்கின் மனம் அந்தத் திமிங்கிலத்திற்கு என்ன வாகியிருக்குமோ என்ற கவலையிலும அது நலமாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனையிலும் ஆழ்ந்திருந்தது. விடிகாலை வேளை சூரியனின் முதற கிரணங்களுக்காய் காத்திருந்த லோங தலைமையிலான குழுவினர், தமது 6 மீற்றர் நீளமான விசேட மீட்புப்படகில் கடல் அலைகளினூடே புறப்பட்டனர். இவர்களுடன் குயின்ஸ்லான்ட் மாநில அதிகாரியான Geroge Theiber, Breff Vercoe ஆகியோரும் இணைந்துகொண்டனர். ஐவரும் ஆழ்கடலில் நீச்சலுக்கு வேண்டிய உபகரணங்கள், மீட்புப்பணிக்கான கத்திகள், கொழுக்கிகள் போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருந்தனர். லோங்கின கணிப்புப்படி திமிங்கிலம் 15 கடல் மைல தொலைவில் இருக்கக் கூடும் என்ற முடிவில் குழுவினர் பயணத்தைத் தொடர்ந்தனர். கரையோரக் காவல்படையின் உலங்குவானூர்திகள இரண்டு இவர்களுக்கு உதவியாகத் தகவல்களை வழங்கிக் கொண்டிருந்தன. இரண்டரை மணி நேரத்தின் பினனும் திமிங்கிலத்தைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்காததல் லோங் குழப்பமடைந்தார். குழுவினரிடையே நம்பிக்கையீனம் தலைதூக்கத் தொடங்கிய வேளையில் ஒரு ஹெலிக்கொபடர் விமானியிடமிருந்து தகவல் வந்தது. சற்றுத் தொலைவில் திமிங்கிலம சென்று கொண்டிருப்பதாகவும் அதனைச் சூழ 3 திமிங்கிலங்கள் சென்று கொண்டிருப்பதாகவும் தகவல் கிடைத்தது. லோங் என்ன செய்வது என தீர்க்கமாகச் சிந்தித்தவாறு படகை திமிங்கிலங்கள் இருக்கும் திசைக்குச செலுத்தினார். காத்திருப்பது மிகப் பெரிய சவால் கத்திகளுடனும், கூரிய கொளுக்கிகளுடனும் தம்மை அணுகும் இந்த மானுடர்களின் எண்ணத்தை எப்படி அந்த ஐந்தறிவு ஜீவன்கள் புரிந்து கொள்ளும்? மாறாக, இவர்களை எதிரிகளாகக் கருதிவிட்டால், நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது. இருப்பினும் முன்வைத்த காலை பின வைக்க முடியாது. எப்படியும் திமிங்கிலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற முடிவோடு முன்னேறினார்கள். திமிங்கிலங்கள் இருந்த இடத்திலிருந்து 50மீற்றர் தூரத்தில் இருந்து கூர்ந்து அவதானித்தார்கள். வலையில் அகப்பட்ட திமிங்கிலத்திற்கு மற்றைய 3 திமிங்கிலங்களும் ஆதரமாகச் சூழ்ந்து அது சுவாசிப்பதற்கும், நீந்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருந்தன. பிணைத்திருந்த வலையின் சுமையால் திமிங்கிலத்தின் வேகம் பெருமளவு குறைந்திருந்தது. இருந்தாலும் இந்தநிலையில் திமிங்கிலத்தின் கட்டுக்களை அறுப்பது என்பது வேகமாக ஓடுகின்ற வாகனத்தில் ஏறித் திருத்தவேலை செய்வது போன்ற சிக்கலான காரியமாகும் எனவே, திமிங்கிலத்தின் வேகத்தை உடனடியாகக் குறைக்க வேண்டும். லோங் கூறிக் கொண்ட ஓர் அதிரடி நடவடிக்கை ஓரளவு வெற்றியளித்தது. 3 தொன் நிறையுடைய அவர்களது மீட்புப் படகை திமிங்கிலத்தைப் பிணைத்திருந்த வலையுடன் இணைந்தனர். திடீரென ஏற்பட்ட மேலதிக சுமையால குழப்பமடைந்த திமிங்கிலம் படகை இழுத்துக்கொண்டு ஆக்ரோஷமாக அசைந்தது. அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் ஐவரும் ஒருவரையொருவர் இறுக்கமாகப் பிடித்தபடி திமிங்கிலத்தின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானித்தவாறிருந்தனர். ஒருவேளை திமிங்கிலம் நீரின் அடிப்பகுதிக்குச் சென்றால், ஐவரதும நிலை மிக மோசமாகிவிடும். நல்ல வேளையாகத் திமிங்கிலம் சற்று நேரத்தில் அடங்கி மிக மெதுவாகச் செல்ல ஆரம்பித்தது. இதனால், மீட்பு பணிகளை மேற்கொள்வது ஓரளவு இலகுவாகியது. இதற்கு முன் ஒரு தடவை லோங் ஒரு திமிங்கிலத்தை மீட்கும் முயற்சியில், படகு திமிங்கிலதால் கடற்படுக்கைக்கு இழுத்துச் செல்லப்பட்டு மயிரிழையில் உயிர்தப்பியிருந்தார். திமிங்கிலங்களின் அசைவால் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு, மீட்புப்பணியை மேலும் சிரமப்படுத்தியது. இந்தவேளையில் லோங்கின் மனதில் ஒரு கேள்வி எழுந்தது. உண்மையில் நான் இதை செய்யத்தான் வேண்டுமா? ஆனால், சடுதியாகப் பதிலும் கிடைத்தது. இந்த அரிய உயிரினத்திற்கு, இத்தீமை மனிதகுலத்தின் செயற்பாட்டாலேயே ஏற்பட்டது. ஆதலால் அதை மீட்டெடுப்பது ஒரு மனிதனாகத் தனது கடமை எனக்கருதினார். இப்போது அதனை மீட்காவிட்டால் அது மரணமடைவதை யாராலும் தடுக்க முடியாது. எனவே, முன்பைவிட பலமடங்கு நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் லோங் செயலில் இறங்கினார். லோங்கும், டேமோடியும் நீரில் குதித்து திமிங்கிலத்தை நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். கைகளில் கூரிய கொளுக்கிகளுடன் சிக்கற்பட்டிருந்த அந்த இராட்சத விலங்கை அணுகித்தார்கள்.

> **லோங்கின் மனதில் ஒரு கேள்வி எழுந்தது. உண்மையில் நான் இதை செய்யத்தான் வேண்டுமா? ஆனால், சடுதியாகப் பதிலும் கிடைத்தது. இந்த அரிய உயிரினத்திற்கு இத்தீமை மனிதகுலத்தின் செயற்பாட்டாலேயே ஏற்பட்டது. ஆதலால், அதனை விடுவிப்பது ஒரு மனிதனாக தனது கடமை என முடிவு செய்தார். இப்போது அதை மீட்காவிட்டால் பின்பு எப்போதும் மீட்கமுடியாது. எனவே, முன்பைவிட அதிக உறுதியுடனும், தன்நம்பிக்கையுடனும் செயலில் இறங்கினார்....**

எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பயத்துடன் மிக முக்கியமானதும் சிக்கலானதுமான திமிங்கிலத்தின் தலையை விடுவிக்கும் முயற்சியைத் தொடங்கினர். திமிங்கிலம் தன் தலையை தண்ணீரின் அடியில் வைத்திருந்ததால் இருவரும் சுழியோட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நீரினடியில் நீந்தியவாறு வலைகளை வெட்டி, பின்மேற்பரப்புக்கு வந்து சுவாசித்து பின் மீண்டும் நீரினடிக்குச் சென்று வலைகளை வெட்டுதல் என்றவாறு அவர்கள் பணி வேகமாக நடைபெற்றது. இப்போது திமிங்கிலம் நிற்காமல் தொடர்ந்து நீந்திக்கொண்டிருந்தது. இதனால், அவர்கள் மேற்பரப்பில் வந்து மூச்சுவாங்கிய பின் திமிங்கிலத்தை அணுகுவதற்கு வேகமாக நீந்தவேண்டியதாயிற்று. இந்தத் தொடர்ச்சியான செயற்பாட்டால் களைப்படைந்த லோங், படகிற்கு மீள கினெஸ் நீரில் குதித்து பணியைத் தொடர்ந்தார்.

இவர்களது இந்தச் செயற்பாடுகளைத் தனது பாரிய கரு விழிகளால் அவதானித்துக் கொண்டிந்த திமிங்கிலம், அவர்கள் தனக்கு நன்மை செய்கிறார்கள் எனப்புரிந்து கொண்டது போல அமைதியாக இருந்தது. அதேபோல அதன் சகபாடிகளும் அமைதியாக ஆனால் உன்னிப்பாக நடப்பதை அவதானித்தபடி இருந்தன. அவற்றுள ஒன்று மெதுவாக சிக்கற்பட்ட திமிங்கிலத்தின் அடியில் நீந்திச்சென்று அதன் தலையை மெதுவாக நீர்மேற்பரப்பிற்கு உயர்த்தி சுவாசிப்பதற்கு உதவியது. ஆனால், இன்னும் ஆபத்து வேறுவடிவில் காத்திருந்தது. Mc Guinness திமிங்கிலத்தின் இது செட்டையை மெதுவாக வலைகளை வெட்டி விடுவித்தார். உடனே விடுவிக்கப்பட்ட தனது செட்டையை மெதுவாகத்திமிங்கிலம் அசைக்க, அது ஒரு பாரிய அடியாக Mc Guinness இன் தொடையில் விழுந்தது. பிராணன் போகும் வலியுடன் சில நிமிடநேரம் துடிதுடித்தவர் பின் சுதாரித்துக்கொண்டு மீண்டும் பணியில் இறங்கினார். சடுதியாக

தமிழ் வடிவம்:
இலட்சுமண சர்மா,
கேதார சர்மா

நிகழ்ந்த இந்தச் செயற்பாட்டால் குழப்பமடைந்த குழுவினர், பின்னர் அது ஒரு விபத்து எனப் புரிந்துகொண்டனர். ஆனால், இப்போது இன்னுமொரு சிக்கல் ஏற்பட்டது. திமிங்கிலத்தின் வெளிச்சுவாசத்தில் விடுவிக்கப்பட்ட காற்று பெருமளவு வளிக்குமிழ்களாக ஒரு பெரும் திரைபோல மீட்புப்பணியாளர்களை மூடியது. இதன் காரணமாக ஏற்படக்கூடிய மூச்சுத்திணறலை தவிர்ப்பதற்காக லோங், பணியாளர் களை மீண்டும் படகிற்கு வரும்படி உத்தரவிட்டார். படகில் இருந்தபடி தமது இறுதி நடவடிக்கை பற்றித் தீர்க்கமாகச் சிந்தித்தனர். திமிங்கிலத்தின் வால் மட்டுமே இப்போது விடுவிக்கப்பட வேண்டியிருந்தது. இறுதிக்கட்ட நடவடிக்கைக்காக குழுவினரில் இருவர் நீரில் பாய்ந்து வாலை நோக்கி முன்னேறினர். நிதானமாகவும், விரைவாகவும் வாற்பகுதியைப் பிணைத்திருந்த வலைகளை தமது கூரிய ஆயுதங்களால் அறுத்தெறிந்தனர். சற்று நேரத்தில் திமிங்கிலத்தின் வாற்பகுதியை பிணைத்திருந்த வலைகளும் சங்கிலிகளும் முற்றாக அகற்றப்பட, திமிங்கிலம் பூரணமாக விடுவிக்கப்பட்டது. தமது பணியை வெற்றிகரமாக முடித்து வீரர்கள் படகுக்குத் திரும்பினர். சிறிது நேரம் அமைதியாயிருந்த திமிங்கிலம் சற்று நேரத்தில் தனது வாலையும், துடுப்புகளையும் அசைத்துக்கொண்டு பாரிய ஒலிஎழுப்பியது. பின் விடுதலையின் உன்னத மகிழ்வுடனும், தமது நன்றியை தெரிவிப்பது போலவும் தமது 4 மீற்றர் அகலமான வாலைத்தூக்கி அசைத்தவாறு தெற்கே குளிர்ந்த அந்தாட்டிக்கா நோக்கி பயணிக்கத் தொடங்கின. தங்கள் மகத்தான சாதனையை வெற்றிகரமாக முடித்த மகிழ்ச்சியில் கரைதிரும்பினார்கள் அந்த இலட்சிய மனிதர்கள். ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபைக் கழிவுகளினால் நரகமாக மாறும் காக்கைதீவு

காக்கைதீவுப் பகுதியில் யாழ். மாநகரசபையினால் கொட்டப்பட்டுவரும் கழிவுகளால் பெரும் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதுடன், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் தொற்றுநோய்களுக்கு உள்ளாகும் பெரும் ஆபத்தும் காணப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் வீதியில் இருந்து 200முதல் 300 மீற்றர் வரையான தூரத்துக்கு அப்பாலேயே கழிவுகள் கொட்டப்பட்டு வந்தன. ஆனால், தற்போது வீதியின் மிக அருகிலேயே கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால், சகிக்கமுடியாத துர்நாற்றம் அந்தப் பகுதியில் வீசுகின்றது.

வதியால் பயணிப்போர் மூக்கைப் பொத்தியபடியே செல்லவேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது.

காக்கைதீவில் கொட்டப்படும் கழிவுகள் முன்னர் காலத்துக்குக் காலம் எரியூட்டப்படுவதும் வழமை. தற்போது இந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் யாழ். செயலக மாவட்டப் புனர்வாழ்வு ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் குருநகர், பாஷையூர், நாவாந்துறை, காக்கைதீவு பகுதி மக்களின் சுகாதாரம், குடிதண்ணீர், மலசலகூட வசதி, கழிவு வாய்க்கால், திண்மக் கழிவுகளை அகற்றல் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

எனினும் அவை தொடர்பாக இதுவரை தீவு எதுவும் காணப்படவில்லை.

இதேவேளை -

காக்கைதீவுப் பகுதி மாநகர கழிவுகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் தீவு காணாவிட்டால் வலி.தென்மேற்கு பிரதேசசபையின் கீழ்வரும் காக்கைதீவு மாதிரிக் குடியேற்ற மக்களுக்கு பெரும் ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர். (ம-185)

காக்கைதீவு வீதிக்கு மிக அருகில் குப்பைகள் மாநகரசபையால் குவியலாக கொட்டப்பட்டுள்ளமையையும் அந்தக் குவியல்களுக்குள் காகங்கள் இரை தேடுவதையும் படங்களில் காணலாம்.

அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

தவக கல்வி வலயத்தைச் சேர்ந்த சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயத்தில் அதிபர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரத்தைச் சேர்ந்தவர்களும், ஆசிரியர் தரம் 2-1, 1ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும் என்றும் -

விரும்புபவர்கள் தீவக கல்விப் பணிமனைக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

விநாயகர் படிப்பு

வலி.கிழக்கு,டிசெ.9

கோப்பாய் இருபாலை தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை விநாயகர் கதைப் படிப்பும் இலச்சார்ச்சனையும் தினமும் மாலை 4 மணிமுதல் நடைபெறவுள்ளன. (ஒ-180)

கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி கும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியாகாலம் கடந்த 4ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமானது.

கும்பாபிஷேகம், தேவஸ்தான பிரதம குரு வேதாகம கிரியா கலாபூஷணம் ஸ்ரீ.க.ச. சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ம-15)

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞரால் சிறுவனின் கழுத்திலிருந்த சங்கிலி அறுப்பு

பாஷையூர் அந்தோனியார் கோவிலுக்கு முன்பாக உள்ள செபஸ்தியன் வீதியில் உள்ள கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிய சிறுவனின் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபர் ஒருவரால் அறுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கு பாண் வாங்க வந்த கிறிஸ்ரி கிரிசாந்தன்ற 9 வயது சிறுவனே தங்கச் சங்கிலியை பறிகொடுத்துள்ளான். கடைக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளை நிறுத்திய வாலிபர் பிரதான வீதியில் இருந்து ஒழுங்கைக்குள் திரும்பிய சிறுவனை பின் தொடர்ந்தார் என்றும் ஒழுங்கைக்குள் வைத்து சங்கிலியை அறுத்தார் என்றும் கூறப்பட்டது.

சங்கிலியை இறுக்கிப்பிடித்த சிறுவனின் கைக்குள் குருசும் சங்கிலியின் ஒரு பகுதியும் மட்டுமே எஞ்சியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு நேரத்தில் முலவைச் சந்திக்கு அருகில் இராசாவின்தோட்ட வீதியில் உள்ள வீடு ஒன்றின் யன்னல் கம்பியை வளைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து பன்னிரண்டு பவுண் பெறுமதியான நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

கடையும் வீடும் அமைந்திருந்த அந்தக் கட்டடத்தில் அன்று இரவு எவரும் தங்கியிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-88)

குடாநாட்டில் 2002இன் பின்னர் 1,77,317 பேர் மீளக் குடியமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். மாவட்டத்தில் 2002ஆம் ஆண்டின் பின்னர் 47 ஆயிரத்து 685 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 77ஆயிரத்து 317 பேர் மீளக்குடியேறியுள்ளனர்.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை மேற்படி தகவலை தெரிவித்துள்ளார்.

சமாதான புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து இதுவரையான காலப்பகுதியில் இந்த மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இவ்வாறு மீளக்குடியேறியவர்களில் 107 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் இந்தியாவில் இருந்து நெடுந்தீவுக் கடலூடாக வந்துள்ளனர்.

தற்போது -

யாழ். செயலக புள்ளிவிவர தகவலின்படி யாழ்.மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 5லட்சத்து 91 ஆயிரத்து 490 ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

வன்னியில் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 1500கிலோ பொலித்தீன் கொள்வனவு

புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை

பொலித்தீன் ஒழிப்புத்திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இதுவரை சுமார் ஆயிரத்து 500 கிலோக்கிராம் பொலித்தீன் கழிவுகள் சுமார் 6 மாத காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இக்கழிவுகள் கிலோ ஒன்று 50 ரூபா என்ற விதத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

பொலித்தீன் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புக்களைத் தடுப்பதற்காகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் பொலித்தீன் கழிவுகளைப் பொதுமக்களிடமிருந்து கொள்வனவு செய்து அவற்றை மீள் தயாரிப்புக்குப் பயன்படுத்துவது ஒரு திட்டமாகும்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இத்திட்டத்தை செயற்படுத்தி வந்தது. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை சுமார் ஆயிரத்து 500 கிலோகிராம் பொலித்தீன் கழிவுகள் கொள்வனவு செய்யப்பட்டன.

இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், பொதுமக்கள் பைகள் உட்படப் பொலித்தீன் தயாரிப்புக்களை கண்டபடி வீசுவதில்லை என்றும் -

ஆர்வமுடன் சேகரித்து மீள் தயாரிப்புக்கு அவற்றை உட்[illegible]வதாகவும்-

தெரிவிக்கப்படுகிறது. (ஒ-72)

பாடசாலை அபிவிருத்திக்கான அன்பளிப்புகளை வங்கிக் கணக்குக்கு ஊடாகவே வழங்கவேண்டும்

பாடசாலைகளின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு அன்பளிப்பு அல்லது நன்கொடைகளை வழங்கும் பெற்றோர், நலன்விரும்பிகள், அதிபர்களிடம் பணமாக வழங்காமல் வங்கிக் கணக்கு ஊடாக அவற்றை வழங்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளின் அபிவிருத்தியைக் காரணமாகக்காட்டி பாடசாலைகளின் பெயரில் வசூலிக்கப்படும் நிதியை அதிபர்கள் உரியமுறையில் பயன்படுத்தாமல் துஷ்பிரயோகம் செய்துவருவதாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே கல்வி அமைச்சு புதிய நடைமுறையை அறிமுகம் செய்துள்ளது.

புதிய நடைமுறையின் பிரகாரம் ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு பெறப்படும் நிதியை கையாளுவதற்கு 'பாடசாலை வள அபிவிருத்தி நடைமுறைக்கணக்கு' பாடசாலைக்கு அண்மையில் உள்ள வங்கி ஒன்றில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அந்தக் கணக்கு இலக்கம் அன்பளிப்பு அல்லது நன்கொடை வழங்குபவருக்கு அறிவிக்கப்படவேண்டும்.

நன்கொடை அன்பளிப்பு வழங்குபவர் 'பாடசாலை வள அபிவிருத்தி நடைமுறைக் கணக்கில்' நிதியை வைப்புச்செய்துவிட்டு பாடசாலை அதிபர்களிடம் வங்கிப் பற்றுச்சீட்டைக் காண்பித்ததும் அதிபர்கள் 100 சீ படிவம் மூலம் சம்பந்தப்பட்ட பெற்றோர், நலன்விரும்பிகளுக்கு பாடசாலையில் நிதி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பற்றுச்சீட்டு வழங்கவேண்டும்.

இந்தப் புதிய நடைமுறையை சகல பாடசாலைகளிலும் உடனடியாக பின்பற்றுமாறு அதிபர்களுக்கு சுற்றறிக்கை மூலம் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

புதிய நடைமுறையைப் பின்பற்றி அன்பளிப்பு அல்லது நன்கொடைகளை பெற்றுக்கொள்ளாத அதிபர்கள் மீது நிதிப்பிரமாண நடைமுறையின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-11)

காலத்தின் பதிவு

இனிய பூலாம் சுகமே

படம் : ஆங்கிலம்

மணல் இல்லாமையால் பொதுமக்கள் சிரமம்

மணல் இல்லாமையினால் மலசலகூடம் மற்றும் வீடு திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாமல் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர்.

வடமராட்சி கிழக்கிலுள்ள மணல தற்போது பொது அமைப்புக்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்படுகின்றது. ஒரு மாதத்துக்கு முன்னர் பொதுமக்களுக்கு வடமராட்சி சுற்றுச் சூழல் பாதுகாப்பு சங்கத்தினரால் தனியாள்களுக்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்துக்கும் மணல் விநியோகிக்கப்படவில்லை.

இதனால், பொதுமக்கள் மணலைப் பெற்றுக்கொள்ள முடியாமல் பெரும் அவதிப்படுகின்றனர்

அராலி வடக்கு, செட்டியாமடத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் மலசலகூடம் அமைப்பதற்கு சிமெந்து மற்றும் பேசின் இருந்தும் மணல் இல்லாமையினால் மலசலகூடம் அமைக்க முடியாமல் இருக்கின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானமான சிந்தனை

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் எனக் கூறி - தேர்தலில் வெற்றிபெற்ற எமது தலைவர்கள் தலைநகரில் கைகலப்பில் ஈடுபடும் வேளையில் ஒரு சிங்களப் பத்திரிகையில் (ராவய) வெளியான ஆசிரியர் தலையங்கத்தைப் பிரசுரிப்பது பொருத்தமானது என நினைக்கிறோம்.

சமூகத்தின் வெவ்வேறு பிரிவினர் மத்தியில், அவ்வப்பிரிவினர்களுக்காக அரும்பணி புரிவோர் வீரபுருஷர்களாகக் கணிக்கப்படுவதுண்டு. அவ்விதமே ஒவ்வோர் இனப் பிரிவினர் மத்தியிலும் அவ்வப் பிரிவினர்களுக்காக அரும்பணி புரிந்தோர் தேசிய வீர்களாகக் கருதப்பட்டனர். அவ்விதமே சில குலப் பிரிவினர் மத்தியிலும் அவ்வித தேசிய வீர்கள் வாழ்ந்துள்ளனர்.

டீ.எஸ்.சேனநாயகா ஐ.தே.கட்சியால் தேசிய வீரராகக் கருதப்படுவது போன்றே, எஸ்.டபிள்யூ. பண்டாரநாயகா ஸ்ரீ.ல.சு. கட்சியினராலும், என்.எம்.பெரேரா சமசமாஜக் கட்சியினராலும் மற்றும் டாகடர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க கம்யூனிஸ்ட் கட்சியினராலும் தேசிய வீர்களாகப் போற்றப்படுகின்றனர்.

இவற்றைவிட ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மத்தியிலும் தம்து அமைப்பில் அங்கம் வகிக்கும் வேளையில் மரணமுற்ற உறுப்பினர்களை வீரபுருஷர்களாகப் போற்றும் வழக்கம் கைக்கொள்ளப்பட்டு வந்தது மட்டுமன்றி, தற்போதும் தொடர்ந்தும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஜே.வி.பி. அமைப்பு தன்னால் மேற்கொள்ளப்பட்ட இரு கிளர்ச்சிகளிலும் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்ட அந்த அமைப்பின் அங்கத்தவர்களை வீரபுருஷர்களாக மதித்துக் கௌரவித்து வந்துள்ளது.

இதைப் போன்றே விடுதலைப் புலிகள் அமைப்பும், அமைப்பில் அங்கம வகித்த வேளையில் மரணமடைந்த தனது உறுப்பினர்களை மாவீர்கள் எனக் கருதி மரியாதை செலுத்தி வந்தது; வருகின்றது.

அரசின் முப்படைகளிலும் சேவையாற்றும் வேளையில் மரணமடையும் போர்வீர்களுக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு அரசு தேசிய வீர்கள் தினத்தைக் கொண்டாடி வருகின்றது. அதேபோன்று, ஜே.வி.பியினரின் கிளர்ச்சிகளுக்கு எதிராகவும், விடுதலைப் புலிகள் அமைப்பின் யுத்த நடவடிக்கைகளுக்கு எதிரான எதிர் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவேளைகளில் மரணமுற்ற அரச படையினர் தேசிய வீர்கள் எனக் கருதப்பட்டு அவர்களது குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு அரசினால் பற்பல சலுகைகள் வழங்கப்பட்டுவருவது நாமறிந்ததொன்றே.

இச்சகல தரப்பினர்களும் தத்தமது அமைப்புக்களில் சேவையாற்றிய சமயம் மரணமடைந்த வீர்களை நினைவு கூரும்பொருட்டு வீர்கள் தினங்களைப் பிரகடனப்படுத்தி விழாவெடுத்துக் கொண்டாடுகின்றனர். ஜே.வி.பியினர் அண்மையில் இவ்விதம் விழாவொன்றினைக் கொண்டாடினர். தமது கொள்கைக்காகப் போராடி மரணித்தவர்களென ஜே.வி.பியினரால் கருதப்படுபவர்களை சமூகத்தின் ஏனைய பிரஜைகள் அவ்விதம் வீரபுருஷர்களாகக் கணிப்பதில்லை.

சிலவேளை அரச பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தோர், தமக்கெதிராகப் போரிட்ட பயங்கரவாதிகளாக இவர்களைக் கருதக்கூடும். இருந்த போதிலும், முப்படைகளையும் சேர்ந்த

வியெஸ்ரீ

இவர்கள் ஜே.பியினரின் இந்தநினைவு கூர்தல் நிகழ்ச்சிகளுக்கு எவ்வித பாதிப்புக்களையும் ஏற்படுத்தவில்லை.

அரசின் முப்படைகளில் கடமையாற்றிய வேளையில் உயிரிழந்த - அரசினால் தேசிய வீர்களாகக் கருதி மரியாதை செய்யப்படும் -படைவீர்களைத் தமது நடவடிக்கைகளை முறியடித்து, தமது தரப்பினரைக் கொன்றொழித்த எதிரிகளாக ஜே.வி.பியினர் கருதிய போதிலும், அவர்கள் தேசிய வீர்களை நினைவு கூரும் நிகழ்ச்சிகளுக்கு எவ்வித தடங்கலும் ஏற்படுத்த முயலவில்லை. இவ்வித சுமுகமாக நாகரிக நடைமுறையைச் சகல தரப்பினரும் கைக்கொள்வது அவசியமாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பால் மாவீரர்கள் எனக் கருதப்படுவோர் குறித்து சிங்கள மக்களின் கண்ணோட்டம் வித்தியாசமாக அமைந்த போதிலும், அந்த அமைப்பினர் தாம் மாவீரர்களாகக் கருதுவோருக்கான மரியாதையை சுதந்திரமாக செலுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்படல் அவசியமாகும் இத்தகைய நிலையை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு எதிர்த்தரப்பினர்களிடம் உருவாகவேண்டியது அவசியமாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு மட்டுமே நாம் எதிர்ப்புத் தெரிவித்ததாக வேண்டும். அவர்கள் அமைதியான முறையில் முன்னெடுக்கும் கொண்டாடங்கள் எவற்றையும் குழப்பும் விதத்தில் நாம் செயற்படுவது நியாயமற்றது.

இதனிடையே ஐரோப்பிய சமூகத்தின் வெளியுறவு ஆணையாளர் கிறிஸ் பெட்டனின் ஸ்ரீலங்காவுக்கான விஜயம் கடும் விமர்சனத்துக்குக் காரணமான விடயமாகியுள்ளது. சில சிங்கள அமைப்புக்கள் அவரது ஸ்ரீலங்காவுக்கான விஜயத்தை விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்கான விஜயம் என்ற விதத்தில் கருத்து வெளியிட்டிருந்தன.

கிறிஸ் பெட்டன் தங்கியிருந்த கொழும்பு, ஹில்டன் ஹோட்டலின் முன்னால் ஒன்றுகூடிய இந்த இனவாத அமைப்புக்களின் உறுப்பினர்கள், அவரது ஸ்ரீலங்கா விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவரை ஒரு துரோகியென வர்ணித்து, அவரின் கொடும்பாவிக்குத் தீயிட்டு ஆர்ப்பாடடம் மேற்கொண்டனர். இவற்றுக்கு ஒருபடி மேல் சென்று 'சிஹல உறுமய' அமைபின் தலைவர் தம்மிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருக்குமாயின், உலங்குவானூர்தியில் கிறிஸ பெட்டன், பிரபாகரனைச் சந்திக்கச் செல்வதை தடுத்துநிறுத்தியிருக்க முடியுமெனத் தெரிவித்திருந்தார்.

உண்மையில் கிறிஸ் பெட்டனின ஸ்ரீலங்காவுக்கான விஜயம் பிரபாகரனின் பிறந்ததினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளும் நோக்கில் அமைந்ததொன்றல்ல. நாட்டின் தற்போதைய அரசியல் சிக்கல்களில் சம்பந்தப்பட்டுள்ள முக்கிய தரப்பினரைச் சந்தித்துப் பேசி, சமாதான நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட இடமளிக்காது, தொடர்ந்து சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கிலானதே அவரது இவ் விஜயமாகும். அந்த வகையில் அவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரைச் சந்தித்த சமயம் மீண்டும் யுத்தமொன்றை ஆரம்பிக்கும் முயற்சியெதிலும் இறங்காது, பிரச்சினைகளைப் பேச்சுக்கள் மூலம் தீர்த்துக்கொள்ள முயலுமாறு வேண்டிக்கொண்டுள்ளார்.

சமஷ்டி ஆட்சி முறை குறித்து ஒஸ்லோ பேச்சுக்களில் முன்வைத்த யோசனைகளுக்கும், இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அந்த அமைப்பு கடைசியாக முன்வைத்த மாற்று யோசனைகளுக்குமிடையே பெரிய அளவிலான வேறுபாடுகள் எதுவும் காணப்படவில்லையெனவும் அவ்வேளையில் கிறிஸ்பெட்டன், பிரபாகரனிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு சமாதானவழியில் காணப்படவேண்டுமென நாம் எண்ணுவோமானால், இவ்விதம் கிறிஸ்பெட்டன் போன்றவர்களின் விஜயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக நாம் ஒத்த கருத்திணக்கம் காண முயல வேண்டும்.

ஐரோப்பிய யூனியன் நம் நாடடின் இனப்பிரச்சினை தொடர்பாக மத்தியஸ்தம் வகித்து உதவ முனைகிறதே யொழிய, பக்கசார்பாகச் செயற்பட முனைவதாகத் தோன்றவில்லை. நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாத விதத்தில், சமஷ்டி அமைப்பு ஒன்றின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முயலுமாறு அவர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

அவ்விதத் தலையீடு துரோகததனமானதொன்றென நாம் கருதுவோமானால், அது தேசிய ரீதியில் நாம் குறைந்தமட்டமொன்றில் தற்போதும் இருப்பதாகவே கருதப்பட வாய்ப்பாகும்.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நிர்வாக ஒழுங்கு பின்பற்றப்படவில்லை

விசாரணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.9

பல்கலைக்கழகத்துக்கு உரிய நிர்வாகச் சட்ட திட்டங்கள் எதுவும் ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தில் முறைப்படி நடைமுறைப்படுத்தப்படவில்லை. அத்துடன், துணைவேந்தர் சுயமாகச செயற்பட்டுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி மேற்படி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

துணைவேந்தர் டி.எஸ்.எப்பிடாவத்த பொறுப்புணர்வற்றவர். பீடாதிபதிகளுடன் பல்கலைக்கழக விடயங்கள் தொடர்பாக எதையும் கலந்தாலோசிக்கும் பழக்கமில்லாதவர் கடந்த செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் சிறு அசம்பாவிதம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்ததைத் தெரிந்து கொண்டும் அதனைப் பீடாதிபதிகளுக்குத் தெரியப்படுத்தாது துணைவேந்தரும், பதிவாளரும் பல்கலைக்கழகத்தைவிட்டு வெளியே சென்றுள்ளனர்.

பகிடிவதைக்கு எதிராக 1998 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டம் முறைப்படி நடைமுறைப்படுத்தப்படவில்லை. விண்ணப்பங்கள் எதுவும் கோரப்படாது 20 பேர் பாதுகாப்பு ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊழியர்களைப் போன்று மாணவர்கள் தமக்கெனச் சங்கம் அமைக்க வேண்டிய அவசியமில்லை. தனிப்பட்ட ஒரு மாணவனுக்கோ அல்லது மாணவர்களுக்கோ பிரச்சினைகள் ஏதாவது இருப்பின் அவை பல்கலைக்கழக நிர்வாகத்துடன் பேசித் தீர்க்கப்படல் வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்.பி.ரணராசா தலைமையிலான 3 பேர் கொண்ட குழுவே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

(எ-10)

நகப்பணிக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,டிசெ.9

புனர்வாழ்வு,அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சினால் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் நடத்தப்பட்ட மனிதவள பயிற்சி நெறியில் கலந்துகொண்டவர்களின் பனைவள கைப்பணிக் கண்காட்சியும், விற்பனையும் இன்று காலை 10மணி முதல் மாலை 6மணி வரை செம்பியன்பற்று வடக்கில் உள்ள பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளன.

பயிற்சி நெறியில் கலந்துகொண்டோர் தமது பயிற்சிக்காலத்தில் தயாரித்த கைவினைப் பொருள்களைக் காட்சிப்படுத்தவுள்ளதுடன் அப்பொருள்கள் விற்பனையும் செய்யப்படவுள்ளன. (எ-10)

பாதுகாவலர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்க அங்கத்தவர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று காலை 8மணிக்கு யாழ்.முனியப்பர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

முக்கியமான பல விடயங்கள் குறித்து இதில் ஆராயப்படவுள்ள [illegible] கேட்கப்பட்டுள்ளது. (ம-4)

கணனி யுகத்தில் - ECSC
மாணவர்களின் வளர்ச்சி - அபிவிருத்திக்கு -
நவாலியில் ECSC வழங்கும்
கணனி கல்வி சேவை நிலையம்
நவாலி சென்.பீற்றர்ஸ் அருகில்
சிறுவர் கணனி கற்கை முதல் வளர்ந்தோர் வரை
முழு சேவை நோக்கிலானது.
(25-14) (சி-31795)

நாங்கள் விரும்பும் ~ அறுசுவையுள்ள
நாகசக்தி ஜாம் வகைகள்
சுவையுலகின் முதற்தரம்
NAAGA SHAKTHY
- HEMA INDUSTRY -
Quality No1 SRS
(34-14-25) Vavuniya Manipay (C/31796)

ஞானக்குழந்தை கல்விக்கழகம்
19, சிவன் வீதி, திருநெல்வேலி
தரம் 6.7.8 ஆங்கில மொழிமூலமான ஆங்கில வகுப்புகள்.
ஆரம்பம்: 10.12.2003 மாலை 3.00 மணி.
தரம் 6.7 ஆங்கில மொழிமூலம் கல்விகற்கும் மாணவர்களுக்கான அனைத்துப் பாடங்களும் விசேட பயிற்சிபெற்ற பட்டதாரி மாணவர்களால் மேற்கொள்ளப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
"Where there's a will there's a way"
" A good beginning make a good ending"
தரம் 01 தொடக்கம் தரம் 5 வரை ஆங்கிலம் உட்பட அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படும்.
தரம் 6.7 வகுப்புகளுக்கு முன்னாள் ஆசிரியரினால் ஆங்கிலம் தனியாகவும் கற்பிக்கப்படும்.
(25595)(34-14-25) - நிர்வாகி.

கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட, பொருளியற்றுறை சிறப்புக்கலை இறுதிவருட மாணவி **ச.ஜமுனா** அவர்களின் அன்புத் தந்தையார்

சந்திரசேகரம்

அவர்கள் 08.12.2003 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(25599)(34-14-25) - பல்கலைக்கழக நண்பர்கள்.

மரண அறிவித்தல்

பொன்னம்பலம் செல்லத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர்)

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்லத்துரை 07.12.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னுப் பிள்ளை தம்பதிகளின் மகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் வசிகரன் (ஜேர்மனி), வளர்மதி (கனடா), சசிதரன் (கனடா), பானுமதி (தெல்லிப்பழை ப.நோ. கூ.சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புஸ்பராணி, சுந்தரங்கன், யசோதா ஆகியோரின் மாமனாரும் மதினி, யாழினி, கிருத்திகா, பிறவீன், ஆகாஷ், அபிலாஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2003) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் பன்னாலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வளர்மதி வாசா",
பன்னாலை, தெல்லிப்பழை, (25597)(34-14-25)

தகவல்:
செ.பானுமதி (மகள்).

தென்னிந்திய திருத்தல யாத்திரை
@
பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தரிசனம்

தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்

- புட்டபத்தி பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா தரிசனம், திருப்பதி, சென்னை, மகாவலிபுரம், மெரீனாபீச், காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள், சிதம்பரம் நடராஜர், திருவாரூர், மேல்மருவத்தூர், ஆதிபராசக்தி, பூம்புகார், குற்றாலம், நாமக்கல் ஆஞ்சநேயர், தஞ்சாவூர், தஞ்சைப்பெருங்கோயில், உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், பழனி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவேணி சங்கமம், காந்தி மண்டபம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம்.
- யாத்திரிகர்களுக்கு சௌகரியமான வீடுகளில் தங்குமிட வசதியும் முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களில் வழிகாட்டி துணையுடனான பிரயாணமும் உயர்தர சைவ உணவுகளும் வழங்கப்படும்.
- சகல கட்டணங்கள் உட்பட யாத்திரை சென்று மீண்டும் வெள்ளவத்தை திரும்பும்வரையான சகல செலவுகளும் நிறுவனத்தால் பொறுப்பேற்கப்படும்.
- இத்திருத்தல யாத்திரை டிசெம்பர் இறுதி வாரத்தில் ஆரம்பமாகும்.
- யாத்திரிகர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதால் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
- நியாயமான கட்டணம்.

தொடர்புகளுக்கு:
Kameshiny,
Metro Travels & Tours (Pvt) Ltd.,
No. 403 - 1/2, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 2362766, 2361888, 4-510562. Fax: 2361888.
(C/31794) (26-14-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் லயன்ஸ் கழகமும், யாழ் மத்திய கல்லூரி லியோ கழகமும் இணைந்து கடந்த ஒக்ரோபர் மாதம் ஐ.நா.தினத்தைக் கொண்டாடின. நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இ.இராஜகுலேந்திரன் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.க. சகாயசீலன் ஆகியோர் உரையாற்றுவதையும் விழாவில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம் (ஐ)

பாடசாலைக்குள் கால்நடைகள்

நெடுந்தீவு,டிசெ.9

அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயவளாகத்திற்குள்ளே கால நடைகள் நடமாடித்திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலைக்குச் சுற்று மதிலை அமைக்க சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுப்பதன்மூலம் இந்நிலையைத் தவிர்க்க முடியுமென அனலைதீவு மக்கள் கூறுகின்றனர். (ஓ-111)

வியாபாரிகளின் நடவடிக்கை போக்குவரத்துக்கு இடையூறு

வலி.தெற்கு, டிசெ.9

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்கள் பலரும் விற்பனைப் பொருள்களையும், பெயர் பலகைகளையும் வீதியோரங்களில் பார்வைக்கு வைத்துள்ளனர். இதனால் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகின்றன. ஆகவே அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சம்பந்தப்பட்ட பகுதிகளின் கிராமசேவையாளர்கள் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேலும், கழிவு நீர் வாய்க்கால்களில் தேங்கி நிற்கும் கழிவுகளை சுத்திகரிப்புப் பணியாளர்கள் அகற்றி வீதி ஓரங்களில் இடுகின்றனர். இதனால் சுகாதாரச் சீர்கேடு விளைவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஓ-152)

இடைக்குறுச்சியில் பொது மண்டபம்

வரணி,டிசெ.9

இடைக்குறிச்சிக் கிராம உத்தியோகத்தர் பிரிவில் நியாப் திட்டத்தின் கீழ் பொது மண்டப அமைப்பு வேலைகள் அண்மையில் ஆரம்பிக்கப்படடுள்ளன.

அப்பகுதியைச்சேர்ந்த ஒருவரால் இதற்கான காணி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (ஓ-170)

கண்ணீர்ப் பூக்கள்

நாடறிந்த சமூகசேவகரும், இன்முகத்துடன் சகலருடன் பழகும் அன் பரும், அகில இலங்கைச் சமாதான நீதிவானுமான லயன் பி.செந்தில்செல்வன் (செந்தில்) (இலங்கை மி.சபை ஊழியர்) அவர்களின் தந்தையார் **அமரர் நா.பரராஜசிங்கம்** அவர்களின் இழப்பிற்காக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

141,GALLE ROAD,
COLOMBO-4
0112-598420

சோம.திருச்செல்வம்
NATHAN INN

(31799)(16-11-32)

மரண அறிவித்தல்கள்

திருமதி லீலாவதி செல்லையா

திருமதி லீலாவதி செல்லையா அவர்கள் 7.12.2003 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராஜா செல்லையா (சட்டத்தரணி J.P.U.M)அவர்களது அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருஞான சம்பந்தர்திருமதி செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும் ரூபாவதி, ஸ்ரீஸ்கந்தகுமார், யமுனாதேவி, யசோதாதேவி (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத தாயாரும் விவேகானந்தன், துளசி, ராஜ்குமார், குணசீலன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ரட்ணாவதி, காலஞ் சென்ற கணேந்திரன், மகேந்திரன், பாலேந்திரன், இராயேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகுணா, காலஞ்சென்ற பிரசாத், செந்தூரன், காயத்திரி, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை (09.12.2003) பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 4.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33,இராஜசிங்க வீதி.
வெள்ளவத்தை. (சி-31803)(36-11-16-32)

தகவல்:
யசோதாதேவி
குணசீலன்.

திருமதி அருணாசலம் சரஸ்வதி

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சரஸ்வதி நேற்று (8.12.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும் பாக்கியலட்சுமி, விஜயலட்சுமி, மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சத்திரத்தை,
களபூமி,
காரைநகர். (சி-31802)(36-11-16-32)

தகவல்:
வே.தியாகராசா(மருமகன்)

திருமதி சதாசிவம் சிவகாமிப்பிள்ளை (காரைநகர்)

நந்தாவில் சதாச, களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் சிவகாமிப்பிள்ளை நேற்று (8.12.2003) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் முன்னாள் கிளிநொச்சி, பரந்தன் முருகன் ஸ்ரோஸ் உரிமையாளரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் சதாசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின அருமை மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, மார்க்கண்டு (மலேசியா) ஆகியோரின் சகோதரியும்

காலஞ்சென்றவர்களான சுந்தரம்மா, வேலுப்பிள்ளை கந்தையா மற்றும் இராமநாதன், காலஞ்சென்ற இராசம்மா,காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் சிவபாக்கியம்(மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் உருத்திரசிங்கம் காலஞ்சென்ற தேவாசா மற்றும் நவரட்ணம், காலஞ்சென்ற விநாயசிவம் மற்றும் மங்கயர்க்கரசி (கனடா), சிவஞானம் (ஆஸ்திரேலியா), உமாதேவி, பரமானந்தசிவம் ஆகியோரின் அன்புத்தாயாரும் பராசக்தி, சிதம்பரம், புவனேஸ்வரி, பரமேஸ்வரி, நடராசா (கனடா), Dr.ஆதிசக்தி(ஆஸ்திரேலியா), சண்முகரட்ணம் (U.K), கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் தயாளினி-முரளீதரன் (U.K), சுதர்சன் (கனடா), சுகந்தினி- ஜெயக்குமார்(U.K), விமலேந்திரன்(U.K), கமலேந்திரன்(U.K), விஜிதா, சசிகலா (இந்தியா), தங்கேஸ்வரன்(U.K), அமலேஸ்வரன்(U.K), பிரபாகரன்(U.K), சுகந்தி, கமலினி, நிர்மலா-ஜெயராஜ் (U.K), சதானந்ன், சியாமளா, ஜெயக்குமார்-புவனேஸ்வரி(கனடா), திருமகள்-சிவநாதன்(கனடா),விஜியகுமார்(கனடா), நந்தகுமார்(கனடா), சுபாஜினி (கனடா), தேவகி (ஆஸ்திரேலியா), வாசுகி (ஆஸ்திரேலியா), மயூரி (ஆஸ்திரேலியா), விஜயரூபி, காலஞ்சென்ற சுதாகரன், கலாரூபி, ஜெயரூபி, வைஷ்ணவி, வைகுந்தன், வைசிகன் ஆகியோரின் பேர்த்தியும் கவிதா (கனடா), அபிதா(U.K) ஆகியோரின் பூட்டிமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, தில்லை மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில்,
களபூமி
காரைநகர். (25612)(36-11 16-32)

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.கோபாலசிங்கம் ஜீவபாலன்
(வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்)

பிரம்மஸ்ரீ நாகரத்தின ஐயர் கலாதர சர்மா
(இளஞ்சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர்,யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை மாணவன்)

பல்வேறு தொண்டர் நிறுவனங்களின் முக்கிய உறுப்பினர்களும் சமூகசேவையாளரும் தலைசிறந்த எமது ஆசான்களாகிய இவர்கள், அகில இலங்கை சமாதான நீதிவான்களாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்களை மேலும் பல பதவிகள், பட்டங்கள் பெற்றும் சமூக சேவை மேலும் சிறக்கப்பாராட்டுவதோடு எல்லாம் வல்ல நாவற்குழி ஞான வைரவரின் அருள்பெற வேண்டி நலம் பெறவாழ்த்துகிறோம்.

நாவற்குழி, கைதடி. (25603)(11-16-32)

ஞானவைரவர் தேவஸ்தானம்.

கண்ணீர் அஞ்சலி

8-12-2003 அன்று அகாலமரணமடைந்த எமது சக மாணவன்
விமலேந்திரன்
(4ஆம் வருடம்,அரசறிவியல் சிறப்புக்கலை)
அவர்களுக்கு எமது கண்ணீர்அஞ்சலியை செலுத்துவதோடு, அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். 4ஆம் வருடம்,அரசறிவியல் சிறப்புக்கலை

(25608)(32-11-16)

கண்ணீர் அஞ்சலி

08-12-2003 அன்று அகாலமரணமடைந்த எமது சகமாணவன்
சாள்ஸ் விமலேந்திரன் (இந்திரன்)
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்.பல்கலைக்கழகம்

இறுதி வருட மாணவர்கள், கலைப்பீடம்.

(25611)(36-11-16-32)

கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தில் விஞ்ஞான பாட ஆசிரியராகக் கடமையாற்றுகின்ற
திரு. கார்த்திகேசு சிவம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி சின்னமணி கார்த்திகேசு

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ இமையாணன்
அ.த.க.வித்தியாலயம்,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(25607)(16-11-32)

உடன் தேவை

அனுபவம் வாய்ந்த பில் கிளாக்,பார்சல் மேக்கர், சப்ளையர், ரிமேக்கர் ஆகியோர் உடன் தேவை. நேரில் வரவும்

சரஸ்வதி விலாஸ்
இல.195(57), K.K.S றோட்
யாழ்ப்பாணம் (25614)

ஆசிரியர் தேவை

தரம் 1 முதல் O/L வரை சகல பாடங்களுக்கும் ஆசிரியர் தேவை.
தொடர்பு:-
சைன்
(25606) உடுவில்.

நூகம்ஸ் சுன்னாகம்

மாதவன், ஜோதிகா, மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
பிரியமான தோழி
(ரீலிஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C31620)

லிபேட்டி அச்சுவேலி

இன்று முதல் முரளி, ஸ்னேகா (இருவேடம்), விவேக், மணிவண்ணன் நடித்த
பார்த்திபன் கனவு
(ரீலிஸ்)
காட்சிநேரம்: , 3.00, 7.00. (தினசரி)
சனி, ஞாயிறு- 11.00, 3.00, 7.00
(C/31621)

நிறைஞ்சமாலை சங்கானை

அஜித், மீராஜஸ்மின் நடித்த
ஆஞ்சனேயா
(ரீலிஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு
Get Carter
இரவு 8.45 இற்கு(பு.நே)
(C-31619) (32)

ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல் குஹாகல ஆரம்பம்
கருண், த்ரீஸா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18
இசை A.R.ரகுமான்
காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30 (பு.நே.)
ஆரவல்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.
(சி-31577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை அசம்பாவிதங்களைத் தடுக்க சமாதானக் குழு, மக்கள் உதவவேண்டும்

பொலீஸ் அத்தியட்சகர் சமரவீர கோரிக்கை

பொலீஸார் மற்றும் சமாதானக் குழு உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றுக்காலை திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பெருந்தெரு, சிவபுரி, சோனகவாடி, பட்டணத்தொரு மற்றும் அரசடிப் பகுதிகளைச் சேர்ந்த கிராம சேவையாளர்களும் மற்றும் சமாதானக் குழு உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். திருகோணமலை பொலீஸ்நிலையப் பதில் தலைமை பொலீஸ் அதிகாரி வசந்நாத் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய திருகோணமலை பொலீஸ் அத்தியட்சகர் தயா சமரவீர, திருகோணமலை நகரில் ஏற்படும் அசம்பாவிதங்கள் திடீரென உருவாகின்றன. இவற்றைத் தடுக்கும் வகையில் சமாதானக்குழு பிரதிநிதிகளும், பொதுமக்களும் பொலீஸாருடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். பொலீஸாரால் மட்டும் இதனைச் செய்ய முடியாது என்றார்.

இதேவேளை கனகம் மில் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றி தற்போது இடம்மாற்றம் செய்யப்பட்ட உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ரமேஸை மீண்டும் திருகோணமலைக்கு இடம்மாற்றம் செய்யவேண்டும் எனக் கோரப்பட்டது. இதற்கு பதில் அளித்த பொலீஸ் அத்தியட்சகர் இரண்டு சமூகங்களும் விரும்பினால் மட்டுமே இதனைச் செய்ய முடியும் என்றார்.

சகலரும் இதற்கு சம்மதம் தெரிவித்ததை அடுத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் வீதிகள் பலவற்றில் விளக்குகள் இன்றி மக்கள் சிரமம்!

மானிப்பாய் பிரதேசத்தில் பல வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் மின் விளக்குகள் இல்லாதகாரணத்தினால் மக்கள் இரவு வேளை நடமாடுவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக மானிப்பாய் சுகாதார, சமூக சுற்றாடல் விவகார சபை மின்சாரசபையின் சுன்னாகம் பிரதேசமின் அத்தியட்சகரிடம் முறையிட்டுள்ளது.

வீதிவிளக்குகள் இல்லாமையைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என்றும் - வீதி விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாகவும் - இவற்றைக் கவனத்தில் கொண்டு வீதிவிளக்குகளைப் பொருத்தும்படியும் - மேற்படி சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

உச்சியோடை வீதி, இராஜகாரியர் வீதி, செக்காலை வீதி, மெமோரியல் வீதி, சோதிவேம்படி வீதி, இணுவில் மானிப்பாய் வீதி, ஆனந்தன் வீதி, செல்லமுத்து வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய முக்கிய வீதிகள் உட்படப் பல வீதிகளில் வீதிவிளக்குகள் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஒ-10-90)

இராணுவ வாகனங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாம் எனக் கூறியுள்ளனர் என்று படையினர் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

எனினும் அப்பகுதிக்கு வந்த பெரும்பான்மை இன மக்களின் வாகனம் குறிப்பிட்ட பாதை ஊடாக கீரிமலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த அமைச்சர் படையினருடன் தொடர்ந்தும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். எனினும் படையினர் சிறிதும் மசியவில்லை. இதனால் அவர் சேந்தாங்குளம் ஊடாகக் கீரிமலைக்குச் சென்று திரும்பினார்.

இச்சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாக நேற்றுக்காலை பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்குச் சமீபமாக அமைந்துள்ள அமைச்சரின் இல்லத்திற்கு முன்னால் மறியல் போராட்டம் இடம்பெற்றது. அமைச்சரும் அவரது ஆதரவாளர்களும் பலாலி வீதி வழியாக வந்த இராணுவ வாகனங்களைத் தொடர்ந்து செல்லவிடாது தடுத்தனர். இராணுவ வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டன.

பலாலி வீதியூடாக இராணுவ வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படாததைபடுத்து அங்கு வந்த யாழ். நகரப் பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் சில்வா, கேணல் உடவத்த, யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த செனிவிரட்ண மற்றும் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோர் இப்போராட்டத்தைக் கைவிடுமாறு கோரி அமைச்சருடன் பேச்சில் ஈடுபட்டனர். எனினும் அமைச்சர் முதலில் இதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

இதன்பின்னர் அங்கு வந்த மேலும் பல இராணுவ உயர் அதிகாரிகள தமது தரப்பிலும் பிழைகள் உள்ளன எனவும் -

இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெற அனுமதிக்கமாட்டோம் எனவும் -

அமைச்சருக்கு உறுதி வழங்கியதையடுத்து நண்பகல் ஒரு மணியுடன் மறியல் போராட்டம் இடைநிறுத்தப்பட்டது.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் படையினர் கொட்டன்களுடன் நின்றிருந்தனர். நண்பகல் 12 மணிக்குப் பின்னர் பலாலி வீதியூடான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

மையோன்-ஹரீஸ் போட்டியின் விளைவு

அஷ்ரப் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வழங்கவில்லை

கல்முனையைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மையோன் முஸ்தபா - எச். எம்.ஹரீஸ் ஆகியோருக்கிடையிலான அரசியல் அதிகாரப் போட்டியின் எதிரொலியாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த வைபவம் ஒன்று இறுதிநேரத்தில் ரத்து செய்யப்பட்டது.

சுகாதார அமைச்சினால் புதிய அம்புலன்ஸ் ஒன்று கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் வைபவம் மையோன் முஸ்தபா எம்.பி. தலைமையில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. அதில் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன பிரதம அதிதியாக கலந்துகொள்ளவிருந்தார்.

ஆனால், தனது சொந்த ஊரான கல்முனைக்குடியில் அமைந்துள்ள மேற்படி வைத்தியசாலைக்கான அம்புலன்ஸைக் கையளிக்கும் வைபவம் தனது தலைமையிலேயே இடம்பெற வேண்டும் என்று ஹரீஸ் எம்.பி. விரும்பினார்.

இந்த நிலையில் குறித்த தினத்தில் (ஞாயிற்றுக்கிழமை) வைபவம் கைவிடப்பட்டது.

அதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை ஆதார வைத்தியசாலை, சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலை, சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலை, ஆகியவற்றில் அம்புலன்ஸ்களை கையளிக்கும் வைபவங்கள் நடைபெற்றன. அவை முறையே மையோன் முஸ்தபா எம்பி., அன்வர் இஸ்மைல் எம்.பி ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றன. இரண்டு வைபவங்களிலும் சுகாதார அமைச்சர் தயாரத்ன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

(ஒ)

எரியும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த 'ரயர்' ஒன்றை ஆலயத்துக்கு வந்திருந்த பெண்கள் மீது தூக்கி வீசினார். நெருப்புடன் வீசப்பட்ட ரயர் யுவதி ஒருவர் மீது வீழ்ந்தால் அவரது உடையில் தீப்பிடித்தது. ஆயினும் நல்லவேளையாக தீ அணைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எரியும் 'ரயரை' வீசிய இளைஞர் அங்கு நின்றிருந்த பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இதேசமயம் கார்த்திகை தீபத் திருநாளையொட்டி வீடுகளில் வைக்கப்பட்டிருந்த தீபங்களைத் தட்டி வீழ்த்தியும் வாசல்களில் ஏற்றப்படும் தேங்காய்த் தீபங்களை உடைத்து வீழ்த்தியும் இளைஞர் குழுக்கள் பல நேற்றிரவு அட்டகாசம் புரிந்ததை அவதானிக்க முடிந்தது.

யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய பணிகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்து இககூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(ஒ-3)

மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிறேன்" - என்றார்.

வவுனியா மாவட்ட புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் கருத்துத் தெரிவிக்கும்போது "அனைத்துப் பிரதேச மக்களும் உரிமைகளுடன் நிம்மதியாக வாழ்வதையையே விரும்புகின்றோம்" என்றார்.

தமது பணிகளை சிறப்பாக மேற்கொள்ள பூரணமாக ஒத்துழைத்த தளபதிக்கும் அவரது அதிகாரிகளுக்கும் தமது நன்றியை தெரிவித்த எழிலன் புலிகளின் நினைவுப் பரிசில் ஒன்றையும் வழங்கினார்.

வனனிக் கட்டளைத் தளபதியாக பதவியேற்கவிருக்கும் மேஜர் ஜெனரல் விஜயசூரியவுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், யாழ்ப்பாணத்தில் இருந்து விடுமுறையில் ஏ-9 வீதி வழியே தான் தெற்கு திரும்பவும், தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவிரும்புவதாகவும் மேஜர் ஜெனரல் சந்திர பால இறுதியில் தெரிவித்தார்.

வேலைவாய்ப்பற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வங்கியின் நிதியுதவியுடனும் தொழில் அமைச்சின் வழிகாட்டுதலுடனும் இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனங்களின் கூட்டமைப்பு, இலங்கைத் தேசிய வர்த்தக சம்மேளனம் ஆகிய அமைப்புக்களின் பங்களிப்புடனும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. புதிய திட்டத்தின் கீழ் தொழில் பெறும் பட்டதாரிகளுக்கு மாதாந்தம் 6000 ரூபா வேதனமாக வழங்கப்படும். இதில் 4000 ரூபாவை அரசும் மீதி 2000 ரூபாவை தொழில் வழங்கும் தனியார் நிறுவனமும் வழங்கவுள்ளது.

பட்டதாரிகள் எதிர்காலத்தில் தொழில்வாய்ப்புக்களை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கேதுவாக பல கலைக்கழகங்களில் ஆங்கிலமொழியும் தகவல் தொழில்நுட்ப பாடநெறியும் முன்னுரிமை அடிப்படையில் போதிக்கப்படவுள்ளதாகவும் மூன்றாம் நிலைக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. தனியார் துறையினரின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றவகையில் பட்டதாரிகள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

தொழில் நிறுவனங்களுடனும், தொழிலதிபர்களுடனும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுமாறு பல்கலைக்கழக நிர்வாகங்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

(ஒ)

கோயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர், நீரில் மூழ்கினார் என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்ரராஜா சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். பின் மரண விசாரணைகளை நடத்திய நீதிவான் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (ஒ-3-6-7)

கட்டளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கப்பட்டிருந்தது. வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் இந்த நினைவுச் சின்னத்தை மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கு வழங்கினார். படைக் கட்டளைத் தளபதி ஒருவர் இடமாற்றம் பெற்றுச்செல்கையில் புலிகளின் பணிமனைக்கு நேரில் சென்று விடைபெற்றுக்கொண்டமை இதுவே முதற்றடவை என்று கூறப்படுகிறது.(ஒ-3-9)

ஆலயங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சாத்திரம் கூறுவதாகவும், திருநீறு வழங்குவதாகவும் கூறும் நபர்கள், பெண்கள் தனியாக இருக்கும் போது நகைகளைக் கொள்ளை அடிக்கின்றனர் எனவும் - வவுனியா, மட்டக்களப்பு போன்ற இடங்களிலேயே இந்தக் கள்வர்கள் அதிகமாக நடமாடுகின்றனர் எனவும் புலிகளின் அரசியல்துறை தெரிவிக்கின்றது.

IIS
புலமைப்பரிசில் திட்டம்-2004
விண்ணப்பித்துவிட்டீர்களா?
இன்னும் 7 நாள்களே உள்ளன
தவறவிடாதீர்கள்
வருந்த நேரிடும்
(சி-31800(36))

BEACON - யாழ்
A/L தமிழ் புதிய பிரிவுகள்
2005 ★2004 DAY
நாக. தமிழிந்திரன்
விடுமுறைக் கால விசேட வகுப்புகள்
★ இலகு இலக்கணப் பயிற்சி
★ ஈழத்திலக்கிய வரலாறு
★ திருவடி குட்டும்படலம்
ஆரம்பம் : 10.12.2003
புதன் காலை 7.00 மணி
★ முழு அலகும் பூர்த்தியாக்கப்படும்.
-நிர்வாகி.
(25591)

வேகமான விற்பனையில்
நடந்து முடிந்த 2003 O/L
ENGLISH
வினாத்தாள் விடைகளுடன்
கிடைக்குமிடங்கள்:
பூபாலசிங்கம், சிறிலங்கா, சுப்பிரமணியம், துர்க்கா (சுன்னாகம்), சிதம்பரப் பிள்ளை (வடமராட்சி), பிரியங்கா.
(25604(36))

சைன் உடுவில்
புதிய வகுப்புக்கள்
தரம் 1 முதல் O/L வரை
நடைபெறுகின்றன.
புதிய பிரிவு
15-12-2003
ஆரம்பம்.
Grade 6-7
English Medium
கணனிவகுப்பு
நடைபெறுகின்றது.
(25605(36))

எடிசன் அக்கடமி
411, கே.கே.எஸ். வீதி, யாழ்.
18, வைமன் வீதி, நல்லூர்
Grade 6
ENGLISH MEDIUM CLASSES ஆரம்பம்
10-12-2003 புதன்கிழமை
காலை 6 மணி.
★ தமிழ்மொழிமூல வகுப்புக்களும் (Tamil Medium) ஆரம்பிக்கின்றன.
(25604(36))

தவறிவிட்டது
08-12-2003 காலை இரத்மலானையிலிருந்து பலாலிக்குப் பயணம் செய்த லயன் எயர் விமானத்தில் பயணம் செய்த ஒருவரின் பச்சை நிற குட்கேஸ் தவறவிடப்பட்டுவிட்டது. இதனை தவறுதலாக எவரேனும் எடுத்திருந்தால் தயவுசெய்து GTZ-NRP 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.
தொலைபேசி இல : 222 6011
222 2635
- பிராங் முல்லர் -

புத்தாண்டை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி
இணைப்புக்களுடனான மேசைத்தொலைபேசி
விசேட கழிவில் விற்பனைக்கு
பவர் செலூலர்
பவர் செலூலர்
24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத்தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
வாகன சேவை 0712 522889
IDD இணைப்புக்கள் சிறிலங்கா ரெலிகொம்முடன் இணைக்கப்பட்டுள்ளது.
உத்தரவாதம் உண்டு
எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது.
மேலதிக விவரங்களுக்கு:-
HAND PHONE UNLOCK செய்து தரப்படும்
HAND PHONE பழுதுபார்க்கப்படும்
பவர் செலூலர் T.P 021-2227070 0712-399220 0712-384624 0777-242416
கையிருப்பு முடியும்வரை மட்டுமே.
மாபெரும் சிறப்புத்தள்ளுபடி.
185 (முதலாம் மாடி) கஸ்தூரியார் வீதி, (ராஜா தியேட்டருக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
(C-31580) (22-13-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.